# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 | கதிர் 282 | ஆவணி 19ஆம் நாள் | திங்கட்கிழமை | 04 செப்ரெம்பர் 2017 | வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 28


## புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சியை பாதுகாப்போம்

### மைத்திரி முன்னிலையில் அமைச்சர் நிமால் உறுதி

கொழும்பு, செப். 4

"புதிய அரசமைப்பில் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தி ஒற்றையாட்சியையும் பாதுகாப்போம். இராணுவ வீரர்களையும் காவுகொடுக்காமல் பாதுகாப்போம். அதனால் தனி நபரை வலுப்படுத்தாமல் கட்சியை வலுப்படுத்தும் ஆட்சியை முன்னெடுப்போம்"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உபதலைவரும், அமைச்சரும், வழிநடத்தல் குழுவின் சுதந்திரக் கட்சி உறுப்பினருமான நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன் >> 25



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவில்...

# புலிகளின் நிழல் அமைப்புகளின் தாளத்துக்கு ஆடவேமாட்டேன்

### எந்தவொரு படையினரிலும் கைவைக்கவும் அனுமதிக்மாட்டேன் என்கிறார் மைத்திரி



கொழும்பு, செப்ரெம்பர் 4

"போர்க்குற்றச்சாட்டு என்ற போர்வையில் இலங்கைப் படையினர் மீது கைவைப்பதற்கு எந்தவொரு வெளிநாட்டுக்கோ, நபருக்கோ, அமைப்புக்கோ இடமளிக்கப்படமாட்டாது. புலிச் சார்பு அமைப்புகளிடம் பணம் வாங்கிக்கொண்டு அவற்றின் நிழலாகச் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புகளின் தாளத்துக்கேற்ப நான் ஆடமாட்டேன்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரிய மீது போர்க் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை பற்றிப் பேசப்படுகின்றது. இது கடல்தாண்டிய பிரச்சினையாகும். ஜெகத் ஜயசூரிய மீதோ படைத்தளபதிகள் மீதோ அல்லது எந்த >> 25

### அரசமைப்பு உருவாக்கம், கூட்டு அரசு ஆயுள் நீடிப்பு

## சு.க. மாநாட்டில் மைத்திரி நிசப்தம்

கொழும்பு, செப். 4

புதிய அரசமைப்பு உருவாக்கம், ஐக்கிய தேசியக் கட்சியுடனான உடன்படிக்கை நீடிப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பற்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நேற்றைய பேச்சில் மூச்சுக் காட்டவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டுவிழா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொரளை, கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

**மகிந்த அன் கோ பங்கேற்கவில்லை**

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கட்சி ஆதரவாளர்கள் வருகைதந்து இதில் பங்கேற்றனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள பங்காளிக்கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். முன்னாள் அரச தலைவர் மகிந்தவோ அல்லது கூட்டு எதிரணி உறுப்பினர்களோ மாநாட்டில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் காமினி ஜயவிக்கிரம பெரேரா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் மனோ >> 25

## மனிதப் படுகொலைகளுக்கான ஆதாரங்களை பொன்சேகா நீதிமன்றில் வெளியிடவேண்டும்

### வலியுறுத்துகிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், செப். 4

"இறுதிப் போரில் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டமைக்கு ஆதாரங்கள் உள்ளன என்று போரை நடத்திய இராணுவத் தளபதியான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா பகிரங்கமாக அறிவித்துள்ளார். சரத் பொன்சேகா எவ்வித தயக்கமுமின்றி நீதிமன்றில் முன்னிலையாகி உண்மையை வெளிப்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும்வரை சரத் பொன்சேகாவின் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊக்குவிக்கும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், >> 25

### மைத்திரி கூறிய முட்டை அப்பத்தால் சு.க. மாநாட்டில் சிரிப்பொலி

கொழும்பு, செப். 4

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டுவிழாவில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, 'முட்டை அப்பம்' கதையைக் கூறி பெரும் சிரிப்பொலியை ஏற்படுத்தினார்.

மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையிலிருந்து 2014ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி வெளியேறிய மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராகக் களமிறங்கும் அறிவிப்பை' விடுத்தார். கட்சிக்குள் இருந்து கொண்டே தனக்குத் துரோகம் இழைத்துவிட்டார் என்று மைத்திரி மீது மகிந்த விமர்சனம் முன்வைத்ததுடன், 'நேற்று இரவுதான் (2014ஆம் ஆண்டு நவம்பர் 20) என்னுடன் இணைந்து முட்டை அப்பம் சாப்பிட்டார். இன்று (21) >> 25

### சாட்சிகளுக்கு அச்சுறுத்தலெனக் கூறி

## அரசியல் கைதிகள் மீதான வழக்கை வவுனியாவிலிருந்து மாற்ற முயற்சி

கொழும்பு, செப். 4

போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட படையினரைப் படுகொலைசெய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மூவருக்கு எதிராகச் சாட்சியம் அளித்த இருவர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணையை ஆரம்பித் >> 25

### போர் இரகசியங்களை வெளியிட்டமைக்கு

## பொன்சேகாவுக்குப் பதிலடி கொடுப்பாராம் கோத்தா

யாழ்ப்பாணம், செப். 4

"போர்க்கள இரகசியங்களை அம்பலப்படுத்தும் வகையில் கருத்து வெளியிடும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு உரியவகையில் பதிலடி கொடுக்கப்படும்" என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் ஜெகத் ஜயசூரிய குற்றமிழைத்துள் ளார் >> 25

## ஊறணி கனிஷ்ட வித்தி. ராணுவத்தால் விடுவிப்பு

*மாவட்டச் செயலரிடம் இன்று கையளிப்பு*

யாழ்ப்பாணம், செப். 4

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்த ஊறணி கனிஷ்ட வித்தியாலயம், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் இன்று காலை ஒப்படைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பொன்னாலை பருத்தித்துறை வீதியில், ஊறணிக் கிராமத்தில் முதன்மைச் சாலைக்கு வடக்குப்பகுதிகள் விடுவிக்கப்பட்டன. தெற்குப் பிரதேசம் விடுவிக்கப்படவில்லை. தெற்குப் பிரதேசத்திலேயே இந்தப் பாடசாலை அமைந்துள்ளது. அது இதுவரை படைமுகாமாகவே பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்தப் பாடசாலையை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, இன்றைய தினம் மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. பாடசாலையு >> 25

## லொறி - ஓட்டோ விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு

### மூவர் படுகாயம்; நெடுங்கேணியில் சம்பவம்



கிளிநொச்சி, செப். 4

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி சாலையில் பாரவூர்தியும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று >> 25

## 20ஆவது திருத்தம் மீது இன்று வடமாகாண சபையில் விவாதம்

யாழ்ப்பாணம், செப். 4

நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு வடக்கு மாகாண சபையில் இன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதனை வடக்கு மாகாண சபை எதிர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அதனைத் திருத்தங்களுடன் ஆதரிப்பதற்கான யோசனையை வடக்கு >> 25

## மட்டக்களப்பில் நடமாடும் சேவை



மட்டக்களப்பு, செப். 4

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தி ஒந்தாச்சிமடம் சிறி விநாயகர் மகாவித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

அதில் இறப்பு, பிறப்பு,விவாகச்சான்றிதழ்கள்,அரச காணி,கமநல சேவை, சட்ட உதவி ஆணைக்குழு, அடிப்படை மனித உரிமைகள், ஓய்வூதியம், நீர், மின்சாரம்,உள்ளிட்ட25வகையானபிரச்சினை களுக்குத் தீர்வு வழங்கப்பட்டது. நடமாடும் சேவையில் 17 அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்குபற்றின.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள்அமைச்சர்மனோகணேசனின் தலைமையில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மண்முனை , எருவில் பற்று பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்ணம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், எஸ்.வியாழேந்திரன் , அமைச்சின் செயலாளர் விக்கிரமசிங்க, உதவிச்செயலாளர் சந்திரிகா ரூபசிங்க,கல்முனை விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரெத்தின தேரர்,உதவிப்பிரதேச செயலர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10, 46)

# மகிந்தவின் பாவங்களை நாங்கள் கழுவுகின்றோம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, செப். 4

கடந்த ஆட்சியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச செய்த பாவங்களை. இந்த ஆட்சியில் நாங்கள் கழுவிக் கொண்டிருக்கின்றோம். எமது ஆட்சியில் எவரும் கடத்தப்படவில்லை. மக்கள் எதிர்பார்த்ததைப் போன்றே அரசின் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல், அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல், அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டம் ஒந்தாச்சிமடத்தில் நடமாடும் சேவை நேற்று நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குப் பதிலைத் தேடித்தர வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்ட கொடுமைகள் நடந்தன கடந்த மகிந்த ராஜபக்சவின் ஆட்சியிலே. அந்த ஆட்சியின் பாவங்களைத்தான் நாங்கள் தற்போது கழுவிக் கொண்டிருக்கின்றோம். தற்போதைய ஆட்சியில் யாரும் கடத்தப்படுவதில்லை, யாரும் சட்ட விரோதமாக கொலை செய்யப்படவுமில்லை. இந்த வெற்றி, நாம் அனைவரும் வாக்களித்து இந்த அரசைக் கொண்டு வந்ததால் கிடைத்தது என்பதை மறந்து விடக்கூடாது. மக்கள் அரச திணைக்களங்களை நாடிச் சென்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதவிடத்து, அரச சேவைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு நடமாடும் சேவைகள் நடத்தப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த காலங்களில் சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்தது. தற்போது போர் முடிந்து விட்டது என எல்லோரும் சொல்கின்றார்கள். தலைமை அமைச்சர் இங்கு வருகை தந்த போது, போர் இல்லை, சத்தம் இல்லை என்று சொன்னால் நான் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டேன். போர் தான் இல்லை ஆனால் மக்களிடம் பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றன. இது தான் உண்மை. இந்தப் பிரச்சினைகளுக்கு நாம் படிப்படியாகத் தீர்வு கண்டு கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக நான் குரல்கொடுப்பேன். அனைவரும் உங்கள் மொழியில் பற்று வையுங்கள். இந்த நாடு தனி எந்த ஒரு இனத்துக்கும் சொந்தமான நாடு அல்ல. ஒருமொழி தேசிய மொழி அல்ல. சிங்களமும், தமிழும் ஆட்சி மொழி தேசிய மொழிகளாகும். - என்றார். (ஐ-10, 46)

## பிக்குகள் பயணித்த வான் மரத்துடன் மோதி விபத்து

### ஒருவர் சாவு: 7 பேர் படுகாயம்

கொழும்பு,செப்.4

பிக்குகள் பயணித்த வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. அதில் ஒருவர் உயிழந்தார். 7 பேர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து யாழ்ப்பாணம் கண்டி வீதி திறப்பனைப் பிரதேசத்தில் அலிஸ்தான் வளைவில் நேற்று நடந்தது.

வலப்பனையில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த வான் வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.

வானில் பயணித்த பிக்குகள் யாத்திரைக்காக அநுராதபுரத்துக்குப் பயணித்தனர் என்று கூறப்பட்டது. விபத்தில் வலப்பனை கீர்த்தி பண்டாரராமயவில்லைச் சேர்ந்த 65 வயதான பிக்கு உயிரிழந்தார்.

அந்த வானில் 11 பேர் பயணித்துள்ளனர். 7 பேர் படுகாயமடைந்தனர். ஏனையவர்கள் சிறுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் அநுராதபுரம் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திறப்பனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)





## காணிகளைப் பகிர்ந்தளிக்கக் கோரி புத்தளத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

புத்தளம், செப். 4

அரச காணிகளைப் பகிர்ந்தளிக்குமாறு கோரி புத்தளம் நவ்டான்குள மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 60 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் அங்குள்ள அரச காணிகளை பிரதேச செயலகம் கையகப்படுத்தவுள்ளது. அதனையறிந்த மக்கள், சுமார் 6 ஏக்கர் அரச காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் "எங்கள் இடத்தை எங்களுக்குத் தாருங்கள், எங்களுக்கு நிரந்தரக் காணி வேண்டும், மக்களின் காணிகளை அபகரிக்க வேண்டாம்" போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட நவ்டான்குளத்தில் நிரந்தரக் காணிகள் அற்று 60 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளனர். "நவ்டான்குளம் பகுதியில் உள்ள அரச காணியில் ஆறு ஏக்கர் காணியை எங்களுக்குப் பகிர்ந்தளித்து தர வேண்டும். காணியை முந்தல் பிரதேச செயலகம் கையகப்படுத்துவதைத் தடுக்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ஐ-10)

## குடி தண்ணீரில் எண்ணெய் என மக்கள் ஆர்ப்பாட்டம்

### குயில்வத்தையில் நேற்று

கொழும்பு, செப். 4

குடி தண்ணீரில் மசகு எண்ணெய் கலந்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குயில்வத்தை மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டவளைப்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குயில்வத்தைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும்நிலையத்திலிருந்து மசகு எண்ணெய், பிரதேசவாசிகள் குடிதண்ணீர் பெற்றுக் கொள்ளும் பிரதான தண்ணீர்த் தாங்கியில் கலந்துள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அந்தத் தாங்கியில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் 20 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "இந்த விடயத்தில் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும். குடிதண்ணீரைச் சுத்திகரிப்புச் செய்து வழங்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தை அறிந்த வட்டவளைப் பொலிஸார், எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் முகாமையாளருடன் பேச்சு நடத்தினர். மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தற்காலிகமாக நீர்குழாய் ஒன்றை அமைத்துக் கொடுப்பதாக . முகாமையாளர் தெரிவித்தார். அதனால் எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறைவுக்கு வந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 43)



## வீதியோரம் உறங்கியவர் சடலமாக மீட்பு

கொழும்பு,செப்.4

வீதியோரமாக உறங்கிக் கொண்டிருந்தவரை எரிபொருள் ஏற்றிச் சென்ற வாகனம் மோதியது. அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நீர்கொ ழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடந்தது. விபத்தில் 50 வயதுடைய நபர் உயிரிழந்தார்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைக் கொச்சிக்கடைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பல்கலைக்கழக மாணவர்கள் 19 பேர் படுகாயம்

கொழும்பு,செப்.4

பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த பேருந்து காருடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதில் 19 மாணவர்கள் படுகாயமடைந்தனர். இந்த விபத்து தலங்கமப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை நடந்தது. கொழும்பு சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்களே விபத்தில் சிக்கினர். தலங்கமப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற மாணவர்கள் , பேருந்தில் மீண்டும் பல்கலைக்கழக விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். மாணவர்கள் பயணித்த பேருந்து காருடன் மோதி விபத்து நிகழ்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. அந்தப்பேருந்தில் 65 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயணித்துள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ)


கொழும்பு


சாவகச்சேரி


மட்டக்களப்பு

# பல மாவட்டங்களில் நேற்று பொலிஸ் தினக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.4
இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு பல மாவட்டங்களில் நேற்று சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றி உயிர் நீத்த பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸ் மா அதிபரின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

**கொழும்பு**
பொலிஸ் தின நிறைவை முன்னிட்டு கொழும்பு பம்பலப்பிட்டி சிறி முத்து விநாயகர் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.
பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் அவை நடைபெற்றன. அதில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி பெற்று வரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**சாவகச்சேரி**
இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்று சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி உயிர்நீத்த பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.


வவுனியா

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் வாழ்த்துச் செய்தியும் பொலிஸ் பொறுப்பதிகாரியால் வாசிக்கப்பட்டது.
நிகழ்வின் இறுதியில் பொலிஸ் தின நினைவாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி பி.விக்கிரமசிங்க தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

**வவுனியா**
வவுனியாவில் பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட நிகழ்வுகள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றன.
அதில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி உயிர் நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
அதனைத் தொடர்ந்து, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் வாழ்த்துச் செய்தியை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார வாசித்தார். மரம் நடுகையும், குருதித்தான நிகழ்வும் நடைபெற்றன. நிகழ்வில் பெருமளவான பொலிஸார் கலந்து கொண்டனர்.

**மட்டக்களப்பு**
151 ஆவது பொலிஸ்தினக் கொண்டாட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்று இடம்பெற்றது. பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை வளாகத்தில் இடம்பெற்றது.
அதில் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி ரத்ன பொலிஸ் கொடியை ஏற்றி வைத்தார்.
அதனைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பொலிஸ் தின வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. நிகழ்வில் உயிர் நீத்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் நினைவாக இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
இந்த நிகழ்வுகளில், பொலிஸ் அதிகாரிகள், சர்வ மதத்தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ்தின நிகழ்வுகள் இடம்பெற்றன.
(ஐ)

# இராணுவத்தை பொன்சேகா காட்டிக் கொடுத்துவிட்டார்

## குமுறுகின்றார் விமல் வீரவன்ச



கொழும்பு, செப்.3
இராணுவம் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.
சிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது;
அரசின் மனநிலையும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மனநிலையும் ஒன்றாக இருக்கின்றது. அதனால்தான் ஜெனரல் ஜகத் ஜயசூரிய போர்க் குற்றம் செய்துள்ளார் என்றும், அது சம்பந்தமாக நடக்கும் விசாரணைகளில் சாட்சியமளிக்க தயார் எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.
அவர் பதவி விலக வேண்டும். சரத் பொன்சேகா இது போன்ற பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர்காலத்தில் இராணுவ வீரர்கள் மற்றும் இராணுவ உயர் மட்ட அதிகாரிகள் மீது சுமத்துவார்.
முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை மீறினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டே பதவி விலக்கப்பட்டார். இப்போது சரத் பொன்சேகா துரோகத்தனமான கருத்தை வெளியிட்டுள்ளார்.
சிறுபான்மையினர், இனவாத குழுக்களின் பணயக் கைதியாக அரசு மாறியுள்ளது. இந்த அரசின் அமைச்சர்கள், தலைமை அமைச்சர் மற்றும் அரச தலைவரிடம் இருந்து இவ்வாறான கருத்தைத் தவிர வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.
கிளிநொச்சியில் உள்ள பிரதான இராணுவ நினைவு சிலையை அப்புறப்படுத்த வேண்டும் என்று மாவட்டச் செயலர் அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
குருணாகலில் இருந்த இராணுவ நினைவிடம் முன்னர் அகற்றப்பட்டது. இராணுவ நினைவிடங்களை அப்புறப்படுத்தும் இடத்துக்கு நாடு வந்துள்ளது.
இராணுவ நினைவிடங்கள் அகற்றப்படும் போது விடுதலைப் புலிகளின் நினைவிடங்கள் உருவாகி வருகின்றன.
திலீபனின் உருவச்சிலை அமைக்கப்படவுள்ளது. புலிகளின் கல்லறைகளில் தற்போது வீர காவியங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு எனக் கூறிக்கொள்ளும் அமைப்பொன்று தமிழ் பெண்கள், சிங்களவர்களுடன் பழகக் கூடாது உள்ளிட்ட பல அச்சுறுத்தும் அறிவித்தல்களுடன் துண்டுப்பிரசுரங்களை வழங்கியுள்ளது. இராணுவத்தினரின் நினைவி டங்கள் அகற்றப்படும்போது புலிகளின் அரசியலுக்கு உயிர் வர ஆரம்பித்து விட்டது.
ஜெனரல் ஜகத் ஜயசூரிய, சில லத்தீன் அமெரிக்க நாடுகளின் தூதுவராக பதவி வகித்து, பதவிக்காலம் முடிந்து நாடு திரும்ப தயாராகிய போது அந்தநாடுகளின் நீதிமன்றங்களில், அவருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. உலகத்தை வென்றதாக அரச தலைவர் அடிக்கடி கூறுகிறார். அவர் கூறும் உலகத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகள் இருக்கின்றனவா இல்லையா என்பது எமக்கு தெரியாது.
மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா உட்பட மேற்குலக வல்லரசுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக யோசனை முன்வைத்த போது, லத்தீன் அமெரிக்க நாடுகள் எமது நாட்டுக்கு ஆதரவளித்தன. எமக்காகக் குரல் கொடுத்தன.
அன்று இலங்கையை எதிரியாகப் பார்க்காத அந்த நாடுகளில் தற்போது ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. என்றார்.
(ந - 31)

# இரு வெவ்வேறு விபத்துக்களில்; ஒருவர் உயிரிழப்பு: ஒருவர்காயம்

மட்டக்களப்பு, செப். 4
இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். இந்த விபத்துக்கள் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி ஆரையம்பதிப் பகுதியில் நேற்று நடந்தன.
வீதியோரமாக நடந்து சென்றவர் மீது கார் மோதியது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆரையம்பதி மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக இந்த விபத்து நடந்தது.
ஆரையம்பதியைச் சேர்ந்த துரைராசா மகேந்திரன் (வயது 53) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை முச்சக்கரவண்டியும் காரும் மோதி விபத்துக்குள்ளானது. அதில் முச்சக்கரவண்டியின் சாரதி படுகாயமடைந்தார். அவர் ஆரையம்பதி மருத்துமவனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்துக்கள் தொடர்பாக காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.
(ஐ-10, 46)

JOB OPPORTUNITY
Part Time
Aplication from the interested candidates for the following positions:
✓ **Finance Consultant**
**Role & Expectations:**
- Fully / Partly qualified in CIMA, ACCA or SL Charterd.
- Minimum 5 years experience heading finance Division, Finalizing monthly accounts, Cash flow, budgeting and forecasts.
- Auditing experience of 2 years or more.
- Proactive, result driven and ability to work under pressure with minimum supervision.
- Proven team player with ability to engage with and derive the best from office colleagues.

An excellent career opportunity for the right candidate
Send resume along with recent photograph with two non-related references, within 7 days by email
e-mail: jaffnavacancy@gmail.com

# தந்தை செல்வா அமைத்த பாதையிலேயே தமிழரசுக் கட்சியின் பயணம் தொடர்கிறது

## சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 4

தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்டு தளபதி அமிரால் தொடரப்பட்ட பாதை மிகக் கடினமாக இருந்தது. தமிழ் மக்கள் சார்பில் உறுதியாக செயற்பட்ட கட்சியாக தமிழ் அரசுக் கட்சி ஓர் நியாயமான பாதையில் பயணித்தது. அது இப்போதும் தொடர்கின்றது.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க் கட்சித் தலைவருமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 90ஆவது பிறந்த தின நினைவில் எதிர்க் கட்சிம் தலைவர் இரா.சம்பந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கான தீர்வு அரசியல் ரீதியாக ஏற்பட வேண்டுமே அன்றி இராணுவ ரீதியான பலம் ஓங்குவதன் அடிப்படையில் அமையக்கூடாது என நாம் 1987ஆம் ஆண்டிலேயே கூறியிருந்தோம்.

அமிரை நான் முதன்முறையாக 1950ஆம் ஆண்டில்தான் சட்டக்கல்லூரியில் சந்தித்தேன். அப்போது நான் முதல் ஆண்டு அமிர் இறுதி ஆண்டு. அப்போது தமிழ்ச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதிலே அமிர் தலைவராகவும் நான் உறுப்பினராகவும் இருந்தோம். 1949ஆம் ஆண்டு தந்தை செல்வா இலங்கை தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார். அந்தக் காலம் முதல் தமிழ் அரசுக் கட்சிக்காக அமிர் உழைத்தார். இந்த நாட்டில் கூட்டாட்சி (சம்ஷ்டி) இருக்க வேண்டும் என தந்தையும் அமிரும் உறுதியாக இருந்தனர். வடக்கு கிழக்கில் கூட்டாட்சித் தீர்வை முன்வைத்து மக்களிடம் ஆதரவைப்பெற அவர்கள் முயன்றனர். அமிரின் வரலாறும் அரசியலும் பின்னிப் பிணைந்தது 1952ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி இரு ஆசனங்களை மட்டுமே வெற்றியீட்டியது. அதில் வன்னியசிங்கம், என்.ஆர். இராசவரோதயம் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

அப்போது கூட்டாட்சித் தீர்வுக்கு மக்களிடம் வரவேற்பில்லை. இதேபோன்று 1929ஆம் ஆண்டு டொனமூர் முன்பாக கண்டியில் இருந்து சென்று கூட்டாட்சியைக் கோரினர். இருப்பினும் யாழ். இளைஞர் சங்கம் உட்பட பலர் கூட்டாட்சியை அப்போது கோரவில்லை. இதனால் அன்று கூட்டாட்சிக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதன் பின்னர் 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி மிகப் பெரும் வெற்றியைப் பெற்றது. இதில் அமிர் வட்டுக்கோட்டையில் வெற்றி பெற்றார். அப்போது சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று தமிழர்கள் புறக்கணிக்கப்பட்ட காலம். இதன் பின் தமிழரின் எதிர்ப்பால் 1957ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதில் வடக்கு ஒரு பிராந்தியம் கிழக்கு இரு பிராந்தியம் என்றும் இவை இணைந்த பகுதியென இருந்தது. குடியேற்றம் பிராந்திய சபைகளிடமே ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இன்று சிங்களத் தலைவர்கள் கூறுகின்றனர் இந்த ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் பிரச்சினை என்றோ தீர்த்திருக்கும் என்கின்றனர். அதில் மகிந்த, மைத்திரி உள்ளிட்டோரும் உள்ளடக்கம்.

ஒப்பந்த காலத்தில் சத்தியாக்கிரகம் இருந்து அதனை கிழிக்க வைத்தவர்களில் ஒருவரை அண்மையில் நான் சந்தித்தேன். அப்போது அவர் கூறினார். நாம் பெரும் தவறை இழைத்துவிட்டோம் என்றார். இதன் பின்பு 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடத்தினோம். சகல மாவட்டச் செயலகங்கள் முன்பாகவும் மறியல் செய்தோம். இவற்றில் அமிரின் முக்கிய பங்கு இருந்தது. இவ்வாறு இடம்பெற்ற போராட்டத்தால் சில வாரத்தில் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் அடைக்கப்பட்டோம்.

இதில் தந்தை செல்வாவுடன் அமிர், அவரது துணைவியார் மங்கை, திருச்செல்வம், நான் உட்பட பனாகொடையில் உள்ள இராணுவ முகாமில் அடைக்கப்பட்டோம். பின் 1965ஆம் ஆண்டு டட்லி செல்வா ஒப்பந்தம் இடம்பெற்றது. இதில் குடியேற்றமே முக்கிய விடயம்.

அந்த ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசம், அங்கு பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பேண தமிழ் மக்களுக்கு உரித்துண்டு என ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போது இவற்றை சிங்கள மக்களை ஏற்க வைக்க வேண்டும் என அமிர் பெரியளவில் பங்காற்றினார்.

1972ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டது. அப்போது எமது சார்பில் தர்மலிங்கம் பணியாற்றினார். சுயாட்சி, பிராந்திய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. அப்போது அரசியல் அமைச்சர் கொல்வின் ஆர் டி சில்வா இருந்தார். தேர்தலில் போட்டியிட்டு அரசமைப்பை மக்கள் ஏற்றதாக நிரூபிக்க வேண்டும் என அவர் கோரினார். அதுமட்டுமன்றி தந்தை செல்வா பதவி விலகி இடைத்தேர்தல் மீண்டும் இடம்பெற்றது. அதில் தந்தை செல்வா அமோக வெற்றியீட்டினார். பின் 1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேறியது. இதில் எமது இறைமையை பெற உரித்துண்டு என நிரூபிக்கப்பட்டு உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் தீர்வை காணாதுவிட்டால் வெளியக சுயநிர்ணய அடிப்படையில் எமது உரிமையை பெறுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது 18 பேர் வெற்றியீட்டினோம். 1972ஆம் ஆண்டு அரசமைப்பில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கியிருந்தால் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் இருந்திருக்காது. நாம் தனிநாடு கேட்டோம் 1976ஆம் ஆண்டின் பின் உலகத் தலைவர்களைச் சந்தித்தோம். இந்திரா காந்தியையும் சந்தித்தோம். அனைவருமே தனி நாட்டுக் கோரிக்கையை ஏற்க மறுத்தனர். ஆனால் நியாயமான உரிமையோடு தீர்வுக்கு உதவுவோம் என்றனர். பன்னாட்டு ஆதரவு இன்மையால் அந்தத் தீர்மானத்தை முன்னெடுக்கலாமா? எனச் சிந்தித்தோம். இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். 1981ஆம் ஆண்டில் ஜே.ஆர். மாவட்ட அபிவிருத்தி சபையை நிறைவேற்றி தேர்தல் நடத்தினார். மக்கள் ஆதரவு உண்டு என்பதனை நிரூபிக்க போட்டியிட்டு வடக்கு கிழக்கின் சகல மாவட்ட சபைகளையும் கைப்பற்றினோம் (அம்பாறை தவிர்ந்து). அதன்மூலம் எப்போதும் அமைதியாக இப் பிரச்சினையைத் தீர்க்கத் தயார் என நிரூபித்தோம். தமிழீழத்தை கோரிய பின்பும் மாவட்ட சபையில் போட்டியிட்டு நியாயமான அமைதிக்கு வரத் தயார் என உலகுக்கு நிரூபித்தோம். ஆயுதப் போராட்டத்தை ஏற்கும் நிலமை இருந்தது. இளைஞர்கள் ஏமாற்றப்பட்டிருந்தனர்.

தலைவர்கள் உட்பட அனைவரும் ஏமாற்றப்படுவதனால் வேறு வழியில்லை என்ற முடிவுக்கு இளைஞர்கள் வந்தனர். 1983ஆம் ஆண்டில் இனக் கலவரம் ஏற்பட்டது. அப்போது இந்திரா காந்தியைச் சந்தித்து நிலமையைக் கூறினோம். இந்தியாவின் நல்லிணக்கத்தை ஏற்குமாறு ஜேஆருக்கு அம்மையார் தூது அனுப்பினார். அதனை ஜே. ஆர் ஏற்றார். கோபாலசாமி. பார்த்தசாரதி ஆகியோர் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டார்கள். 1983 ஒகஸ்ட் 26அன்று அவர்கள் வந்தனர். அப்போது நானும் அமிரும் இந்தியாவில் இருந்து வந்தோம்.

அனைவரும் கொழும்புக்கு வந்தோம். அது பயங்கரமான காலம். பார்த்த சாரதி ஜே.ஆருடன் பேசினார். மாவட்ட சபைத் தேர்தலை நடத்தத் தயார் என்றார் ஜே.ஆர். அம்மையார், அது போதாது வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை வேண்டும் என்று கூறியிருந்தார். 1983ஆம் ஆண்டு 9ஆம் மாதம் இந்திரா காந்தியை மீண்டும் சந்தித்தோம். அலெக்சாண்டர், பார்த்த சாரதி, இந்திரா காந்தி, நான், அமிர் ஆகியோர் ஒரு மணி நேரத்துக்கு மேல் பேச்சு நடத்தினோம்.

அதிலே அம்மையார், "போதிய சுயாட்சி வழங்கப்படவேண்டும். எனக்கு உங்கள் தலைவர்களில் நம்பிக்கையில்லை. ஜே.ஆரை நம்பவில்லை. உங்கள் கருமத்தில் எங்கள் நண்பர்கூட நேர்மையாக நடப்பார் என்று நான் நம்பவில்லை" என்றார்.

ஜே.ஆர் டில்லிக்கு நவம்பரில் சென்றார். அவருடன் இந்திரா காந்தி பேசினார். இவற்றின் அடிப்படையில் 1984ஆம் ஆண்டு அனைத்துக் கட்சி மாநாடு கொழும்பில் கூட்டப்பட்டது. இவை அனைத்திலுமே அமிர்தலிங்கம் பங்காற்றினார். ஜனவரியில் கூடி மார்கழி வரை இடம்பெற்றது. ஆனால் 1984ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டார். இதனால் எவ்வித மான திருப்திகரமான முடிவும் எட்டவில்லை. அவரது இறுதிச் சடங்கு சென்று ராஜீவையும் சந்தித்தோம். தாயாரின் கொள்கையை கடைப்பிடிப்பேன் என்றும் தமிழ் மக்களை கைவிடேன் என்றும் ராஜீவ் கூறினார். அதனால் திம்புவில் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. அதில் கூட்டணி, இயக்கங்கள் சார்பில் விடுதலைப் புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகியன பங்கேற்றன.

எமது தீர்வை வலியுறுத்தினோம். தனி இனம், வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம், சுய நிர்ணய உரிமை, அனைவருக்கும் அடிப்படை உரிமை கோரினோம். ஒரு முடிவும் எட்டவில்லை. பிரச்சினை தொடர்ந்தது. 1986ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ராஜீவின் சிறப்புத் தூதுவர்களாக நட்வர் சிங், சிதம்பரம் இங்கு வந்தனர். அதில் கூட்டணிக்கும் அரசுக்கும் இடையே பேச்சு இடம்பெற்றது. அதுவே 13ஆம் திருத்தத்தின் ஆரம்பப் பேச்சு. பேச்சுக்களில் ரொனி டீமெல், ரணில், அமிர், சிவசிதம்பரம் ஆனந்தசங்கரி, நான், ஜோசப் பர்ராஜசிங்கம் போன்ற பலர் இருந்தோம். பல நாட்கள் பேச்சு இடம்பெற்றது. அதிலேயே மாகாண சபைக்கு இணக்கம் காணப்பட்டது. முதன் முதலில் அரசு மாவட்ட சபையைத் தாண்டி மாகாண சபைக்கு முன்வந்தது. இதில்இந்தியாவின் அக்கறைக்கு அமிரின் பங்கு முக்கியம்.

வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் பிரச்சினை இருந்தது. கிழக்கை தமிழ் மாகாணம், முஸ்லிம் மாகாணம், சிங்கள மாகாணம் எனப்பிரிக்கவே அரசு முயன்றது. முறியடிக்க ராஜீவை சந்தித்து கோரிக்கை விட்டோம். 10 நாள்களானது சந்திக்க முடியாது என்றனர். பின்னர் அழைப்பு வந்தது. அமிர், சிவசிதம்பரம், நான் மூவரும் ராஜீவுடன் இணைப்பு தொடர்பில் பேசினோம். ஜே. ஆர். மொழி ரீதியான பிரிப்பைக் கூறினார். நாம் அப்போது திருகோணமலை தொடர்பில் விளக்கி ஏற்றுக்கொள்ள வைத்தோம்.

விடைபெறும்போது நாம் கூறிய அனைத்தும் உண்மை என்று நான் கூறினேன். உடன் ரமேஸ் பண்டாரியை சந்தியுங்கள் என்று ராஜீவ் கூறினார். அதன் வழியிலேயே இணைப்பு ஏற்பட்டது. 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது.

இலங்கையில் வாழும் அனைவருக்கும் தனிக் கலாச்சாரம் உண்டு. வடக்கு கிழக்கில் சரித்திர ரீதியல் தமிழர்கள் வாழ்ந்த பகுதி. அவை இரண்டும் இணைத்து ஒரு மாநிலமாக வேண்டும் எனக் கூறப்பட்டது. இவ்வாறே அமிர்தலிங்கம் போன்றோர் பாடுபட்டனர். இந்த ஒப்பந்தத்தின் பின்னர் கொழும்பில் செய்தியாளர் மாநாடு இடம்பெற்றது. இதில் ஜே.ஆர் மற்றும் ராஜீவ் ஆகியோர் பங்கு கொண்டனர். பொது வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பில் என்ன நிலைப்பாடு? என ராஜீவ்விடம் கேட்க அதனை எதிர்ப்பேன் என அவர் அன்றே கூறினார். துரதிர்ஷ்ட வசமாக ராஜீவ் கொலை செய்யப்பட்டார்.

13ஆம் அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ள முயன்றபோது எதிர்த்தோம். 12 விடயத்தை திருத்துவதாக ஜே.ஆர் எழுத்தில் வாக்குறுதியளித்தார். நடவர்சிங், குர்சித் போன்றோர் எம்மை சந்தித்தனர். பின் எமது இளைஞர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் போர் மூண்டது. (வ -101)

## புதிய அமைச்சர்களுக்கு முதலமைச்சர் நேற்றிரவு விருந்து வழங்கினார்

யாழ்ப்பாணம், செப். 4

வடக்கு மாகாணத்தின் புதிய அமைச்சர்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்றைய தினம் இரவு கலந்துரையாடலின் பின்பு விருந்து வழங்கினார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது அமைச்சரவை தொடர்பான முக்கிய விடயங்கள் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதனை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆரம்பித்துவைத்தார். (வ)

## நாமல் - கலா கீச்சகத்தில் மோதல்

முதலில் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு பிறகு கீச்சகத்தில் பதிவிடுங்கள் என இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேகநபராக பொலிஸாரால் கூறப்படும் சுவிஸ்குமாரை தப்பிக்க உதவியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்தில் (ருவிட்டரில்) பதிவிட்ட கருத்துக்கு வழங்கியுள்ள பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"உங்களது பதிவு நீதிமன்றத்தையும், நீதிமன்றத்தின் நடவடிக்கைகளையும் அவமதிப்பதாக அமைகின்றது. நீங்கள் முதலில் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு பிறகு கீச்சகத்தில் பதிவிடுங்கள்" என தெரிவித்துள்ளார்.

மேலும், "நான் சட்டத்தின்படி பொது மக்களின் வன்முறைகளையே தடுத்து நிறுத்தினேன். இலங்கையின் சட்டம் ஒரு சிலருக்கு மட்டும் உரித்தானதாக இருக்கக்கூடாது" என இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பதில் இட்டுள்ளார்.

இதேவேளை, "தான் சட்டம் பற்றிக் கதைக்க வரவில்லை என்றும் தங்கள் மீது உங்களது நண்பர்கள் முன்வைத்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பதவி விலகலைக் கோருகின்றேன்" என நாமல் ராஜபக்சவும் மீள் பதிவு செய்துள்ளார். (வ)

# பச்சை, நீலக் கொடிகளுடன் வருவோருக்கு மக்கள் சரியான பாடம் கற்பிக்கவேண்டும்

## சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.4
பச்சைக் கொடி, நீலக் கொடியுடன் எமது பகுதிகளுக்கு வருபவர்களுக்கு "நீங்கள் குண்டு போட்டு அழித்தவற்றையே சீரமைத்துத் தருகிறீர்கள்" என்று மக்கள் துணிந்து சொல்லவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
சுழிபுரம் கிழக்குப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற காளையடிச் சாலை சீரமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து



கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்களில் மிகப் பொறுமையாக அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடுகின்றோம். அது இணக்க அரசியலோ, சரணாகதி அரசியலோ அல்ல. எங்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே அரசுடன் நாங்கள் ஒன்றிணைந்து நிற்கும் நிலையில் எமது பிரதேசங்களின் அபிவிருத்திகளை முன்னெடுக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ஒரு வேளை இந்தப் பேச்சுக்கள் நாங்கள் நினைத்தது போன்று நடைபெறாது போனால் பழையபடி நாங்கள் தள்ளி நிற்கவோ அல்லது எதிர்த்து நிற்கவேண்டிய சூழலோ ஏற்படும். அவ்வாறு இருந்தால் பின்னர் அபிவிருத்திகள் தடைப்பட்டுவிடும். அப்படியான ஒரு நிலை வரும் போது அரசு இங்கு வரும். இப்போதே அவர்கள் இதைச் செய்கிறார்கள்.
2015ஆம் ஆண்டு கூட்டு அரசு ஆட்சிக்கு வந்த போது, எமது பகுதிகளுக்கு வரும் அமைச்சர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைப்பார்கள். எம்மையும் சேர்த்து கூட்டிக்கொண்டு மக்களிடம் செல்வார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எங்களை அவர்கள் முன்னுரிமைப்படுத்தினார்கள். தற்போது அப்படியல்ல. தற்போது அமைச்சர்கள் தங்களுடைய பாட்டிலே வருகின்றார்கள். அப்படி வருபவர்கள் ஏதோ மக்களுக்குத் தாங்கள் செய்வது போல் செயற்படுகின்றனர்.
"நீங்கள் குண்டு போட்டு அழித்தவற்றை யே சீரமைத்துத் தருகிறீர்கள் என்று" அவர்களிடம் மக்கள் துணிந்து சொல்ல வேண்டும். இங்கே ஒருவர் தனியே வந்தால் அந்தச் சொற்பதம் பாவிக்கப்படவேண்டும். அவர்கள் மெதுவாக பச்சைக் கொடிகளையும், நீலக் கொடிகளையும் உள்ளே கொண்டுவரக்கூடிய வழிவகைகளை நகர்த்துகின்றனர். அப்படி தொடர்ச்சியாக வருவார்களாக இருந்தால், எங்களுடைய மக்களை அபிவிருத்திகளின் மூலம் திசைதிருப்புவார்களாக இருந்தால் நாங்கள் அவர்களுக்கு சரியான பாடம் கற்பிறகவேண்டும்.
எங்கே அவர்கள் சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பித்தார்களா? பரந்தன் இரசாயனக் கூட்டுத்தானத்தை கொண்டு வந்தார்களா? அல்லது உப்புக் கூட்டுத்தாபனத்தைக் கொண்டு வந்து ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தார்களா? இல்லை. ஒரு தொழிற்சாலை கூட அவர்களால் போடப்படவில்லை. நன்றாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம் இது. மக்களுக்கு இவை தெரியவேண்டும். அதிகாரப் பகிர்வில் வைத்து இரட்டை வேடம் போடுவதை இங்கே வந்து தங்களுக்குரிய ஒரு களம் பிடிப்பதற்கு அவர்களுக்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது - என்றார். (வ-21)

## ஊடகவியலாளரைத் தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் முறையீடு

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நடந்த நிகழ்வில் ஊடகவியலாளரைத் தாக்கியதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.
ந.பரமேஸ்வரன் என்ற ஊடகவியலாளரே, தன்னை இரண்டு பேர் தாக்கினர் என்று முறைப்பாடு செய்துள்ளார். வலி.தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கௌரிகாந்தன் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகனான காண்டீபன் ஆகியோரே தாக்கியதாக பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
அமிர்தலிங்கத்தின் நினைவு தினம் யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமிர்தலிங்கத்தின் மகனான காண்டீபன் வெளிநாட்டில் உள்ளார். அவரது மற்றைய மகனான பகீரதன் என்பவரே தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.
"குறித்த ஊடகவியலாளர் கையில் துண்டறிக்கைகள் பலவற்றைவைத்துக்கொண்டு நிகழ்வில் கலந்துகொண்டவர்களிடம் அவற்றை வழங்கிக் கொண்டிருந்தார். அது தவறான கருத்துடைய துண்டறிக்கைகள் என்று அங்கு கூறப்பட்டது. பின்னர் அந்த ஊடகவியலாளரை ஒருவர் நிகழ்வு மண்டபத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றதைக் கண்டேன். நிகழ்வு நிறைவடையும்வரை நான் நிகழ்வு மண்டபத்தைவிட்டு வெளியேறவில்லை" என்று அமிர்தலிங்கத்தின் மகனான பகீரதன் தெரிவித்தார்.
கௌரிகாந்தனுடன் தொடர்பை ஏற்படுத்தியபோதும் அவரது தொடர்பு கிடைக்கவில்லை. (வ-4-8-101)

## பிள்ளையாருக்கு நாளை தேர்

யாழ்., செப். 4
யாழ்ப்பாணம் உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும் என்று ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (4-ரி)

## நாராயணருக்கு கொடியேறியது

யாழ்., பெப். 4
அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 14ஆம் திகதி வியாழக்கிழமை வரையான 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் பொங்கல் அபிசேகம் திருக்கல்யாணம் ஆகியன 14 ஆம் திகதியும் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தேர், தீர்த்தம் மற்றும் சிறப்புத் திருவிழாக்களின் போது அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-160)

# நகைத் தொழிலாளி உயிர் மாய்ப்பு

## கடன்தொல்லையால் என விசாரணையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4
நகைத் தொழிலாளி ஒருவர் தவறான முடிவு எடுத்து நகை வேலைக்குப் பயன்படுத்தும் பொட்டாசியம் என்ற திரவத்தை அருந்தி உயிரை மாய்த்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. நண்பனின் வியாபார நோக்கம் கருதி ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தைக் கடனாகப் பெற்று வழங்கியிருந்தார் என்றும் அந்தக் கடன் பணத்தை நண்பன் திரும்பித் தராததால் கடன் தொல்லையால் அவர் உயிர் மாய்த்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.
"வியாபார நோக்கத்தில் ஒரு கோடியே 17 இலட்சம் ரூபா பணத்தை கடனாகப் பெற்று தனது நண்பனுக்கு நகைத் தொழிலாளி வழங்கியுள்ளார். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கடன் பணத்தை நண்பனிடம் கேட்டபோது, 10 இலட்சம் ரூபாவை வழங்கி மிகுதிப் பணத்துக்கு சகோதரனின் பெயரில் காசோலை வழங்கியுள்ளார். காசோலையில் பெயர் குறிப்பிடப்பட்ட சகோதரன் வெளிநாட்டுக்கு சென்று விட்டார். இந்த நிலையில் குறித்த குடும்பத்தலைவர் கடந்த 31ஆம் திகதி தனதுவீட்டில் தவறான முடிவு எடுத்து நகை வேலைக்குப் பயன்படுத்தும் பொட்டாசியத்தைக் குடித்துத்துள்ளார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார்.
மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4-8-ரி1)

## சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ், செப்.4
யாழ்ப்பாணம் கதிர் கலையகத்தால் வெளியீடுசெய்யப்படவுள்ள அருட்கதிர் ஆன்மிக சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
ஆன்மிகக் கட்டுரைகள், ஆலய வரலாறுகள் மற்றும் அற்புதங்கள்போன்றபல ஆன்மீகவிடயங்களையும் தாங்கி வரவுள்ள இந்தச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ஆசிரியர், அருட்கதிர், யாழ்ப்பாணக் கதிர் கலையகம், மத்திய கல்லூரிச் சாலை, நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம்என்னும்முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகஅனுப்பிவைக்குமாறு சஞ்சிகையின் முதன்மை ஆசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்இந்துநாகரிகத்துறைத் தலைவருமான பேராசிரியர் மா.வேதநாதன்கேட்டுக்கொண்டுள்ளார். (ய-21)

## சாவகச்சேரியில் 56 பேருக்கு டெங்குத் தொற்று

தென்மராட்சி; செப் 3
கடந்த மாதம்டெங்கினால் பீடிக்கப்பட்ட 56 பேர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.
பிரதேசத்தில் மழை பெய்யாத நிலையில் புலம்பெயர் நாடுகளிலிருந்து ஆலய திருவிழாக்களுக்கு வந்தவர்களை வரவேற்கவும் வழியனுப்பவும் தென்பகுதிக்கு அவர்களுடன் சுற்றுலா சென்றவர்களுமே டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் தென்பகுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக கட்டட நிர்மாணப் பணிக்குச் சென்றவர்களும் தென்பகுதியில் உயர்கல்வி கற்கும் மாணவர்களும் கடந்த மாதம் டெங்கினால் பீடிக்கப்பட்டுசிகிச்சைபெற்றுள்ளனர். கடந்த ஜீன் மாதம் 26 பேரும் ஜீலை மாதம் 66 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டுமருத்துவமனையில் சிகிச்சைபெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (21-9)

## ஹெரோயினுடன் ஒருவர் யாழ். நகரில் கைது

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் ஹெரோயின் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம்கைது செய்யப்பட்டார்.
சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் 1.125 மில்லிகிராம் ஹெரோயினை கொண்டு செல்லும் போதே அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார் .
அவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். விசாரைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ய-101)

## தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 4
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் வெதுப்பாளர், நீர்க்குழாய் பொருத்துனர் ஆகிய முழுநேர தொழிற்பயிற்சிகளுக்கும், பகுதிநேர ஆங்கிலப் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் கோரிப்பட்டுள்ளன.
அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம் விண்ணப்பங்களைக்கோரியுள்ளது. இந்தப்பயிற்சிகள் யாவும் தேசிய தொழிற்தகமை (என.வி.கியு) கொண்டதாகும்.
இந்தப்பயிற்சிகளை கற்க விரும்புவோர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு நிலைய முகாமையாளர் வே.ஸ்ரீகுகன் தெரிவித்துள்ளார். (ய)

## ஆய்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.4
பின்காலனியச்சூழலில்தமிழியல்ஆய்வுகள் எனும் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் தொடக்கவுரையை தெ.மதுசூதனனும், சிறப்புரையை சென்னைபல்கலைக்கழகதமிழ்இலக்கியத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.அரசும் ஆற்றவுள்ளார் என இந்து வாலிபர் சங்கத்தினர் தெரிவித்துள்ளானர். (ய-21)

## பட்டம் வழங்கிக் கௌரவம்



தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதல்வர் வண. செந்திவேல்மோகனதாஸ் சுவாமிகளுக்குதமிழ் நாடு மைய பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியது. இந்தப் பட்டத்தைச் சம்பிரதாய பூர்வமாகக்கையளிக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் பட்டத்தைச்சம்பிரதாயபூர்வமாகக்கையளித்தார். (21-8)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.4
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து நடைபெற்றுவரும் இந்தத் திருவிழாவில் நாளை 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ய)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கு சிறப்புக் கூட்டம்

தென்மராட்சி, செப். 4
தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான சிறப்புக் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப.2 மணிக்கு கல்விவலய கேட்போர்கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
அன்றையதினம் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்படும் நிலையில் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும், வலயக்கல்விப் பணிப்பாளர் அடுத்த இரு தினங்களில் தனது சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ள நிலையிலும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (ய-9)




### இருதய மாற்று சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றிய

# மருத்துவர் ஞானகாந்தன் போன்று இளையோரும் சாதிக்கவேண்டும்

### பாராட்டு நிகழ்வில் கருத்துக்கள் முன்வைப்பு

யாழ்ப்பாணம், செப். 4
"மருத்துவர் ஞானகாந்தனின் சாதனை போன்று எமது இளைய சமுதாயம் சாதனைகளைப் படைக்க வேண்டும். அதனை உணர்ந்து கல்வியில் முன்னேறி தமிழ் மக்களுக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்க வேண்டும்"
இவ்வாறு, மருத்துவர் குமாரதாசன் ஞானகாந்தனின் பாராட்டு நிகழ்வில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
இலங்கையில் முதன்முறையாக கண்டி போதனா மருத்துவமனையில் இருதய மாற்று சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றிய மருத்துவர் குமாரதாசன் ஞானகாந்தனுக்குக் கௌரவிப்பு நிகழ்வு நீர்வேலி தெற்கு சிறி முருகன் மாதர் சங்க மண்டபத்தில் நேற்று பிற்பகல் விழாக்குழுவின் தலைவர் த.நடராசா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மருத்துவரின் ஆசான் கள் மற்றும் பொதுமக்கள் அவரைப் பாராட்டினார்கள். அதன்போதே இவ்வாறான கருத்துக்களை முன்வைத்தனர்.
"இலங்கையில் அரசியல் சீர்திருத்தம் மாறுபடலாம். விளையாட்டில் சாதனைகள் முறியடிக்கப்படலாம். ஆனால் எமது மண்ணில் பிறந்து சாதித்த மருத்துவர் ஞானகாந்தனின் சாதனையை யாராலும் முறியடிக்க முடியாது.
இந்த நாட்டில் பல மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். எமது மண்ணில் பிறந்த இவர் இலங்கையின் முதலாவது இதய மாற்று சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தவர் என்ற பெயரை பெற்றுள்ளார். இதனை நாம் அனைவரும் கொண்டாடவேண்டும். இந்த ஊரிலும் எமது மாவட்டத்தில் உள்ள இளைய சமுதாயமும் இவரைப் பின்பற்றி பல சாதனைகளைப் படைக்க முன்வரவேண்டும்.
எமது இளைய சமுதாயம் இந்தச் சாதனையை உணர்ந்து கல்வியில் முன்னேறி தமிழ் மக்களுக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்க வேண்டும்" என்று அங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் முன்னாள் ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4-8)

## தேன்குளவிகள் கொட்டியதில் குடும்பத் தலைவர் உயிரிழப்பு

### பெரிய பரந்தனில் துயரம்

தேன் எடுப்பதற்காக தென்னை மரத்தில் ஏறிய குடும்பத்தலைவர் தேனீக்கள் கொட்டியதில் பரிதாபமாக உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. பன்னங்கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா சிவா (வயது-36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.
சம்பவதினம் காலை 5.30 மணியளவில் இவர் தனது வளவில் இருக்கும் தென்னை மரத்தில் தேன் எடுப்பதற்காக ஏறியுள்ளார். அதன்போது கூட்டிலிருந்து கலைந்த குளவிகள் இவரைக் கொட்டியுள்ளன.
குளவிகள் கொட்டியபோதிலும் மரத்திலிருந்து பிடியை நழுவவிடாத இவர் மெதுவாக மரத்திலிருந்து இறங்கிவந்து வீட்டுக்குள் ஓடியுள்ளார். ஏற்கனவே ஆஸ்துமா நோயாளியான இவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் மூச்சிரைப்பும் ஏற்பட்டுவிட்டதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. உறவினர்களால் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய)

## கொத்துரொட்டி கடைகளுக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரி, செப்.4
சாவகச்சேரிநகரப்பகுதயில்இயங்கும்இரவு நேர கொத்து ரொட்டிக் கடைகளில் சுகாதாரப் பகுதியினரால்திடீர்பரிசோதனைகள்நடத்தப்பட்டன. இதன்போது பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த வியாழக்கிழமை இரவு சுகாதாரத் திணைக்களத்தினர் கொத்து ரொட்டிக் கடைகளில்திடீர்பரிசோதனைகளைமேற்கொண்டனர். அப்போது அங்கு காணப்பட்ட காலாவதியான மற்றும் சுகாதாரச் சீர்கேடான நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருள்களைக் கைப்பற்றி அழித்தனர்.
மருத்துவச் சான்றிதழ் பெறாத நிலையில் சிப்பந்தி கள் காணப்பட்டதாலும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
சுகாதாரத் திணைக்களத்தி னர் பிற்பகலில் கடமை முடிந்து சென்ற பின்னர் ரொட்டி தயாரிப்பிலும்விநியோகிப்பிலும்பெரும்சுகாதாரக் குறைபாடுகள்காணப்படுகின்றன எனபொது மக்கள் கொடுத்த முறைப்பாடுகளையடுத்து சுகாதாரத்திணைக்களத்தினர்இந்தநடவடிக்கையைமேற்கொண்டனர்எனவும்தெரிவிக்கப்பட்டது. (ய-9)

# தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கிருஸ்ணகுமார் ஓய்வு

தென்மராட்சி, செப். 4
தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஐந்து வருடங்களாக வலயக் கல்வி;ப் பணிப்பாளராகக் கடமையாற்றி பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்கு புத்துயிர் ஊட்டியவர் என வர்ணிக்கப்படும் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் தனது சேவையிலிருந்து எதிர்வரும் எட்டாம்திகதி ஓய்வுபெறவுள்ளார். விஞ்ஞான பட்டதாரியான இவர் ஆசிரியராக, அதிபராக வடக்கு, கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பண்றப்பாளராகவும், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகவும கடமையாற்றியவர்.
கடந்த 2013ஆம் ஆண்டு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்று தனது சேவைக்காலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரு முன்னேற்றம் காணச்செய்தார்.
மாணவர்களை இணைப் பாட விதானங்களில் பங்குபெறச் செய்து பல்வேறு போட்டிகளில் சாதனைகள் பெற வழிவகுத்துள்ளார்.
வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகளாக மாதாந்தம் பாடசாலைகளின் இசை ஆசிரியர்கள் மாணவர்கள் மூலம் 'ஏழிசை மாலை' எனும் இசை நிகழ்ச்சியை பாடசாலைகள் தோறும் நடத்தினார். நடன ஆசிரியர்கள் மாணவர்கள் மூலம் 'நாத நர்த்தனவர்ணம் என்னும் நிகழ்வையும்,
வணிக விஞ்ஞான தொழில்நுடப பாட மாணவர்கள் ஆசிரியர்களின்கல்விச்செயற்பாட்டை ஊக்குவிக்க 'தென்னருவி 'எனும் வர்த்தகப் பொருட்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வையும், சித்திர பாட மாணவர்களின் ஆசிரியர்களின் கலைத் திறன்களை மேம்படுத்த 'விஷன்' என்னும் சித். திர பாட ஆக்கப் பொருட்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வையும்,
வருடாந்தம் விளையாட்டுத்துறையில் மாகாண தேசிய நிலைகளில் மிளிரும் மாணவர்களை கௌரவிக்கும் 'வர்ண இரவுகள்' நிகழ்வையும், மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வருடத்தில் ஒரு பௌர்ணமி விழாவையும் சிறப்புற நடத்தி பாடசாலைகளின் மாணவர்களையும் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்பாடடையச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-9)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

### யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியில்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ்ப்பாண நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்று முதல் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. தடுப்பூசிகளுக்காக வளப்பு நாய்களின் உரிமையளர்கள் கட்டணமாக 30 ரூபா பணம் செலுத்த வேண்டும் என யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது;
தடுப்பூசிகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை அத்தியடிப்பிள்ளையார் கோயிலடி அத்தியடியிலும், மு.ப. 11 மணியில் இருந்து பி.ப. 1 மணி வரை ஸ்ரான்லி சாலை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாகவும், பி.ப.2.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பருத்தித்துறைச் சாலை குருநாதர்சுவாமி கோயிலடியிலும், 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை நாவலர் மண்டபம் நாவலர் சாலையிலும், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை ராசாவின் தோட்டசாலை ஸ்ரான்லி சாலைச்சந்தியிலும், பி.ப. 2.30 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை கோயில் சாலை றக்கா சாலைச் சந்தியிலும், மறுநாள் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப.11 மணிவரை மருதடிலேன் வைரவர் கோயிலடியிலும், மு.ப.11 மணிதொடக்கம் 1 மணி வரை நல்லூர் தெற்கு சனசமூக கற்பகப் பிள்ளையார் கோயிலடியிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை றக்கா சாலை இளஞ்சிங்கம் சனசமூக நிலையத்திலும், மறுநாள் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப 11 மணிவரை கோவில் சாலை ஆஸ்பத்திரிசாலைச்சந்தியிலும், மு.ப.11 மணிதொடக்கம் 1 மணி வரை குழந்தையேசு ஆலயத்திற்கு முன்பாக கோயில்சாலையிலும், பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மடம் சாலை திருவள்ளுவர் சனசமூகநிலையத்திலும், 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப.11 மணிவரை அருள்மாதா கோயிலடி ராசாவின் தோட்டத்திலும், மு.ப.11 மணிதொடக்கம் 1 மணிவரை மார்டின் சாலை சப்பல் சாலைச் சந்தியிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை 2ஆம் குறுக்கு வேம்படி சாலை யாழ்ப்பாணத்திலும், மறுநாள் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப. 11 மணிவரை ஓஎல்ஆர். தேவாலயம் 4ஆம்குறுக்குத்தெருவிலும், மு.ப.11 மணிதொடக்கம் 1 மணிவரை யாழ்ப்பாணம் தொடருந்து நிலையச் சாலை வைரவர் கோயிலடியிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை 2ஆம் ஒழுங்கை பருத்தித்துறைச் சாலை யாழ்ப்பாணத்திலும், மறுநாள் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை அனைத்துப் பகுதிகளிலும் நடமாடும் சேவை நடைபெறும் என்றுள்ளது. (21)

## சிறப்பு ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம், செப்.04
மகத்தான ஒக்ரோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக வடகொரியாப் போரும் சமாதானமும் எனும் ஆய்வரங்கு
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் நடத்தப்படுகிறது.
இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
ஆய்வரங்குக்கு தோழர் பி.முத்துலிங்கம் தலைமைதாங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரையும் இவ்வாய்வரங்கில் கலந்து கொள்ளுமாறு புதியஜனநாயகமாக்சிசலெனினிசக் கட்சியினர் கேட்டுக்கொள்கின்றனர். (ய.21)

# கிளிநொச்சியில் மீள் குடியமர்த்தப்பட வேண்டிய நிலையில் 2 ஆயிரத்து 422 பேர்

## மாவட்டச் செயலகம் தகவல்

கிளிநொச்சி செப் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 741 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 422 பேர் மீள்குடியமரத்தப்பட்ட வேண்டியவர்களாக உள்ளனர் என கிளிநொச்சி மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த போர்காலத்தின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பலர் இதுவரை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்தப்பாடாதுள்ளனர்.

போர் நிறைவடைந்து 7 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அவர்களை இதுவரை மீள்குடியமர்த்த முடிவடையாத நிலை காணப்படுகின்றன. .

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 741 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 422 பேர் மீள்குடியமர்தப்பட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கரைச்சிப் பிரதேசசெயலாளர் பிரிவில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 294பேரும், கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேரும், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 357 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 247 பேரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 826 பேரும் மீள்குடியமரத்தப்பட வேண்டியுள்ளதாக மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (21-6)

### நுண்நிதி நிறுவனங்களால் அவலம்;

# கடனைப் பெறுவதற்கு பொறுப்பு நின்ற 24 கிராம அமைப்புக்கள் நீதிமன்றில்

## வவுனியா மாவட்டத்தில் இந்த நிலை

வவுனியா, செப். 4

வவுனியா மாவட்டத்தில் நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்ற 24கிராம அமைப்புக்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் இந்த அமைப்புக்களைச்சார்ந்தவர்கள் வழக்குகளுக்குச் சென்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி பாதிக்கப்பட்ட அந்த அமைப்புக்கள் வடக்குமாகாணக்கூட்டுறவு அமைச்சர் உட்ளிட்ட பலருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது: "வவுனியா மாவட்டத்தில் நுண்நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறும் நடவடிக்கைக்கள் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்படுகின்றன. அதில்அதிகமானவர்கள்சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்கத்தில் கடன் பெற்றுள்ளவர்கள். அவர்கள் தற்போது அப்பணத்தினைச்செலுத்தத் தவறியதன் காரணமாக அக்கூட்டுறவுச்சங்கத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கிராமங்களிலுள்ள குடும்பப்பெண்கள் ஒருவாரத்தில் 5 நிறுவனங்களில் கடன் பெறும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு நிறுவனத்திலிருந்து கடனைப் பெற்று வேறு நிறுவனத்தில் பெற்ற கடனை அடைப்பதும், பிறிதொரு நிறுவனத்தில் வேறொரு கடனைப் பெற்று இக்கடனைச் செலுத்துவதுமாகச் செயற்பட்டு வருகின்றனர். இதனால் அவர்களின் கடன் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கினறது.

எனவேதற்போதுசிக்கனக்கடனுதவிக் கூட்டுறவுச்சங்கத்தில் கடன் பெற்வர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது. நாட்டில் இடம்பெற்ற போர் அழிவுகளினால் பெரும் துன்பங்களை அனுபவித்து வரும் மக்கள் தமது வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொள்வதற்கு குறைந்தளவு வட்டியில் சிக்கனக்கடனுதவிகூட்டுறவுச்சங்கத்தில்கடனைப் பெற்று வந்துள்ளனர்.

தற்போது அதனைச் செலுத்தவதில் அக்கறையற்று இருந்துள்ளனர். இதனால் குறித்த சங்கத்தினால் அவர்களுக்குப்பொறுப்பாகஇருந்துள்ளகிராம அமைப்புக்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைஇடம்பெற்றுவருகின்றது.

இதில் கடன் பெற்றிருக்காத அமைப்பின் தலைவர் கூடநீதிமன்றம்சென்று வருகின்றார். குறித்தகிராமத்தில்கடன் வழங்குவதற்கு கிராம அமைப்பின் தலைவர் என்ற ரீதியில் பொறுப்பாக இருந்தவர் தற்போது கடன் பெற்றவர்கள் பணத்தினைச் செலுத்தத்தவறிய காரணத்தினால் அமைப்பின் தலைவராக அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்.

இதன்காரணமாகப் பல குடும்பங்களிடையே வன்முறைச்சம்பவ்ங்களும் இடம்பெற்றுவருகின்றன. கடந்த காலங்களில்நுண்நிதிநிறுவனங்களில் கடன் பெற்றவர்கள் தவறான முடிவெடுத்த சம்பவங்களும் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறுநாளுக்கு நாள் பணம் செலுத்தத் தவறியவர்களுக்கு நடவடிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

எனவே இவ்விடயத்தில் மாகாண கூட்டுறவு அமைச்சர் தலையிட்டு சாதகமான பதிலினை வழங்கவேண்டும். என்றுள்ளது. கடிதத்தின் பிரதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர், வடமாகாணசபை உறுப்பினார்கள் போன்றவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (21)

# மூத்த அரசியல் தலைவர்கள் 20 பேரின் வாழ்க்கை வரலாறு புத்தக வடிவில்

"ஈழத் தமிழர் எமக்காக வாழ்ந்தவர்கள்" என்னும் தலைப்பில் மூத்த அரசியல் தலைவர்களில் 20 பேரினுடைய வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நூல் நாளை செவ்வாய்க்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு சட்டத்தரணி கனக மனோகரனால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

தற்போது கனடாவில் வசிக்கும் கனக மனோகரன் இலங்கையின் முதலாவது தமிழ்எதிர்க்கட்சித்தலைவரான அமிர்தலிங்கத்திடம்சட்டத்துறைபயின்றவராவார். அவரால்இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

மூத்த தலைவர்களான தந்தை செல்வா, வன்னியசிங்கம், நாகநாதன், இராசதுரை, இராசவரோதயம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம், மங்கையர்கரசி, சிவசிதம்பரம், துரைரத்தினம், தர்மலிங்கம், இராசலிங்கம், கதிரவேற்பிள்ளை, தொண்டமான் ஆகியோருடன் சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாச்சலம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், சுந்தரலிங்கம் உள்ளிட்ட பெரும் தலைவர்களினது வரலாறுகளுடன் மேலும் ஐரோப்பிய மன்னர் காலத்தில் எம்மை ஆண்ட நான்கு மன்னர்களின் வரலாறுகளும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்பாண மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் சிறப்புரைகளை ஏ.என். இராசேந்திரம், முன்னாள் மாவட்ட சபைத்தலைவரும், சொலமன் சூ. சிறில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (21-101)

# விநாயகர் சிலை அகற்றப்பட்டதால் வழக்கு முடிவுறுத்தப்பட்டது

## சாவகச்சேரி நீதிவான் அறிவிப்பு

சாவகச்சேரி செப். 4

பிரதேச சபையின் கட்டட அனுமதியின்றி அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயக் கட்டடம் முழுமையாக அகற்றப்பட்டது.

இதனால் இது தொடர்பாக பிரதேச சபையால் சாவகச்சேரி நீதிவான் மன்றில் தொடரப்பட்ட வழக்கு முடிவுறுத்தப்பட்டது.

சாவகச்சேரி, மட்டுவில் வடக்குப் பகுதியில் உள்ள சந்தியில் அங்கு வாழும் இந்துக்கள் சிறிய விநாயகர் ஆலயம் ஒன்றை அமைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர்.

அந்த இடத்தில் ஆலயம் அமைத்ததை எதிர்த்து சிலர் சாவகச்சேரிப் பிரதேச சபையில் முறைப்பாடு செய்திருந்தனர். புதிதாக அமைக்கப்பட்ட ஆலயம் சபையின் கட்டட அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டதால் அதனை அப்புறப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரதேச சபை அறிவித்தது. எனினும் ஆலயம் அமைக்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட மரத்தின் கீழ் சூலம் வைத்து காலம் காலமாக வழிபாடு இடம்பெற்றதெனவும் மரம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் அந்த இடத்தில் சிறிய மேடை அமைத்து விநாயகர் சிலை வைத்து வழிபடுவதாகவும் சம்மந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சபையின் கட்டட அங்கீகாரம் பெறாமல் கட்டடம் அமைத்துள்ளனர் எனவும் அதனை அப்புறப்படுத்தக் கோரியும்பிரதேச சபையினர் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட கட்டடத்தை அப்புறப்படுத்தி சபையிடம் முறையான அனுமதி பெற்று கட்டடத்தை அமைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

வழக்கு கடந்த புதன் கிழமை மன்றில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. கட்டடம் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டதென பிரதேச சபையால் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதனை அடுத்து வழக்கினை முடிவுறுத்துவதாக நீதிவான் அறிவித்தார். (21-9)

### வறட்சியின் அகோரத்தால்

# 8 ஆயிரத்து 826 விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம் செப் 4

வடக்கு மாகாணத்தில் தானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரை 8 ஆயிரத்து 826 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோளம், நிலக்கடலை, கௌப்பி, உழுந்து, பயறு, போன்ற தானியப் பயிர்ச் செய்கைகள் 16 ஆயிரத்து404 கெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டன.

எனினும் அண்மைக்காலமாகக் காணப்பட்ட வரட்சியான காலநிலை காரணமாக அந்தப் பயிர்ச் செய்கை பெரிதும் அழிவடைந்துள்ளன. இதனால் அந்தவிவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளர். இதில் நிலக்கடலைப் பயிர்ச் செய்கையாளர்களே அதிகளவில் பாதிபடைந்துள்ளனர்.

3 ஆயிரத்து 372 கெக்டேயர் நிலப்பரப்பில் நிலக்கடலைபயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆயிரத்து 806 கெக்டேயர் நிலக்கடலையே முழுமையானவிளைச்சலைகொடுத்துள்ளதுடன் மிகுதி அனைத்தும் பாதிப்படைந்துள்ளது. இதனால் நிலக்கடலை பயிர்ச் செய்கையை மேற்கொண்ட 3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வாறு கௌப்பி, கௌப்பி, உழுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதிப்படைந்துள்ளஅனைத்துவிவசாயிகளுக்கும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக நஷ்ட்ட ஈடுவழங்கப்படவுள்ளது என திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (21-8)

# வடக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவ உத்தியோகத்தர்கள்

## வடமாகாண சுகாதார அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம்.ஓக.4

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளில் நிலவும் மருத்துவ உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படும் நிலை உருவாகியுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி அமைச்சு மேலும் தெரிவித்ததாவது; வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளில் அனைத்து பிரிவுகளுக்கும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. மருத்துவ உத்தியோகத்தர்களுக்குஅனுமதிக்கப்பட்ட ஆளணியில் வெற்றிடங்கள் காணப்படுவதால் தேவையின் நிமித்தம் ஒப்பந்த அடிப்படையில் அவர்களை அமைச்சு நியமித்து ள்ளது. அதிலும் ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்துள்ளது. இவ்வாறு வடக்கு மாகாணத்தில் தற்பொழுது மருத்துவ உத்தியோகத்தர்கள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வட்டுக்கோட்டை ,வட்டகச்சி, இலுப்பைக்குளம், காரைநகர், வல்வெட்டி துறை ஆகிய பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அமைச்சரவை அனுமதி 53 ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்றது. (21-ரி)

# உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள், தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி அலுவலர்களுக்கு எவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்ற தேவை பகுப்பாய்வை மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இதன் முதற்கட்டமாக உறுப்பினர்கள், தவிசாளர்களுக்கு எவ்வாறான பயனுள்ள பயிற்சிகளை வழங்கலாம் என நாடு தழுவிய ரீதியில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிடம் இருந்தும் விவரங்களைக் கோரியுள்ளது. எனவே, ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தங்கள் சபையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களுக்கும், அந்தச் சபைகளில் கடமையாற்றுகின்ற அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகளை, கருத்தமர்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளன. இதனால் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட படிவத்தினை உடன் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளை ஆளுகை நிறுவனத்தின் பணிப்பாளர் சுஜீவ சமரவீர மேற்கொண்டுள்ளார். (ய-21-50)

# சான்றிதழ் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப்.04

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சும், சுகாதார போசணை அமைச்சும் இணைந்த வகையில் மூன்று சான்றிதழ் பயிற்சி நெறிகளை 2017, 2018 இல் நடத்தவுள்ளன.

பெறுகை நடைமுறை தொடர்பான விளக்கத்தை மையமாகக் கொண்டு இந்தப் பயிற்சி நாடு தழுவிய ரீதியில் இடம்பெறவுள்ளது.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் திட்டமிடல் மேலதிக செயலாளர் என்.எம்.நஜிமுதீன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

பெறுகை மதிப்பீடு தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி 7 நாள்களை அடிப்படையாகக் கொண்டு கொழும்பில் ஆங்கிலத்தில் இடம்பெறும்.

ஒன்லைன் மூலமான குறுங்காலப் பயிற்சி நெறி 5 நாள்களை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில மொழியில் கொழும்பில் இடம்பெறும்.

கற்கை நெறியை விரும்பும் உள்ளூராட்சி அலுவலர்கள் திணைக்களத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்து. (ய-21-50)

## பார்தீனியச் செடியை கட்டுப்படுத்தாதோர் மீது

# சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகிறது சிறப்புப் படை

## வீடுவீடாகச் சென்று ஆராய்வர் என விவசாயத்திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம் செப் 4

வடக்கு மாகாணத்தில் பார்தீனியச் செடியை அழிக்காதுள்ளோர் மீது சட்டநடவடிக்கையை தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் அவர்கள் வீடு வீடாகச் சென்று ஆராய்வு சட்டநடவடிக்கைகளை முன்னெடுப்பர் எனவும் தெரிய வருகிறது.

வடக்கு மாகாணத்தில் பெருகிவரும் பார்தீனியச் செடிகளை அழிப்பதற்குரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் நியமிக்கப்பட்டு பல காலங்கள் கடந்தபோதும் பார்தீனியச் செடியின் வளர்ச்சியின் தாக்கத்தைத் தடுப்பதில் இன்று வரை எந்தவிதமான முன்னேற்றமும் நடந்ததாகத் தெரியவில்லை.

பார்தீனியச் செடி விவசாயத்துக்கும், உடல் நலத்துக்கும், சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இது வடக்கு மாகாணத்தில் பரவலடைந்து தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

பாதீனியச் செடிகளை அழித்தல் தொடர்பான அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ள இடங்களிலும் இந்தச் செடியின் வளர்ச்சி பரந்து காணப்படுகிறது. பார்தீனியம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும்,பார்தீனியத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் வடக்கு மாகாண விவசாய அமைச்சு பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தது.

எனினும் இன்றுவரை அதனைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் கவலை அடைந்தனர்.

பார்தீனியச் செடிகளை அழிக்கத் தவறுபவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கமநலசேவைத் திணைக்களம் ஆகிய திணைக்களங்களில் இருந்து அலுவலர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுக்குக் கொழும்பு விவசாயத் திணைக்களத்தின் செயலாளர் நாயகத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டு, நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

பார்தீனியச் செடிகளை அழிப்பது தொடர்பாக உரியவர்களுக்கு வாய்மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் அறிவித்தல்கள் வழங்கப்படும். இரு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்படும். அவற்றையும் மீறி இந்தக் களைகளை அழிக்கத் தவறுபவர்களுக்கு, தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒருமாதத்துக்குக் குறையாத ஆறுமாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை வழங்க முடியும். அல்லது, அவரிடம் இருந்து 10 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத ஒருஇலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தை அறவிடமுடியும். அல்லது, இரண்டு தண்டனைகளையுமே விதிக்க முடியும். என சட்ட விதியும் கூறப்பட்டிருந்தது. எனினும் இன்றுவரை அது இயங்கியதாக அறிய முடியவில்லை.

இது தொடர்பாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது; "வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் உருவாக்கப்பட்ட பார்தினிய ஒழிப்புக் குழுவில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒரு தொகை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எவ்வாறன கடமைகளைச் செய்ய வேண்டும் அவர்களின் கடமை என்ன என்பது தொடர்பாகன பயிற்சிப் பட்டறை விரைவில் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. பயிற்சி நெறியின் பின்னர் டெங்கு நோய் பரவும் அபாயத்தை உண்டாக்குபவர்களுக்கு எவ்வாறு சுகாதாரப் பிரிவினரால் வீடு வீடாகச் சென்று குற்றப்பணம் அடிக்கப்படுகின்றதோ அது போலவே ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் சென்று இந்த உத்தியோகத்தர்களும் பார்தீனியச் செடிகளை கட்டுப்படுத்தாதோர் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்றனர். (21-8)

# கல்விப்புலத்துக்கு உதவும் சகோதரர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப்.04

இந்த வருடம் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட பல பயிற்சிப் புத்தகங்களை தமது பெற்றோர் ஞாபகார்த்தமாக வெளியிட்டு, இலவசமாகக் கருத்தரங்குகளை வழங்கிய மூன்று சகோதரர்களை கல்விச் சமூகம் பாராட்டுகின்றது.

மறைந்த சட்டத்தரணி குமரேசர் வேலாயுதன், மறைந்த திருமதி வேலாயுதன் பொன்னம்மா ஞாபகார்த்தமாக அவர்களது மூன்று பிள்ளைகளும் வடக்கில் உள்ள மாணவர்களது கல்வியை உலக அளவில் மேம்படுத்தும் நோக்குடன் பல ஆசிரியர்களின் இணைப்புடன் கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களின் முக்கிய தேவைப்பாடுகளை இலவசமாக அச்சிட்டு வழங்கி வருகின்றனர்.

அவர்கள் அதற்கான கருத்தமர்வுகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு முக்கிய தளகர்த்தாவான சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதியுடன், தேசிய லொத்தர் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் வே.சுந்தரேஸ்வரன், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஆகிய சகோதரர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

தமது தாய் தந்தையர் ஞாபகார்த்தமாக அவர்கள் இந்தப் பெரு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்மூலம் வடக்கில் இந்த வருடம் ஜீ.சி.ஈ. சாதாரணப் பரீட்சையில் கல்விகற்கும் சகல பாடசாலை மாணவர்களும் பெரும் பயனை அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முயற்சிக்கு சே.வசந்தன், பி.பாலகிருஸ்ணசாமி, எம்.வாமதேவன், ச.ஐங்கரன், பி.இளமுருகன், சட்டத்தரணி பி.என்.தம்பு, ஏ.முருகானந்தன், கே.சக்திதாசன், பி.கிரிசாந்தன் மற்றும் அன்டன் எஸ்.ராஜீசன் ஆகியோரும் துணை நின்று கல்விப்புலத்துக்கு உதவி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டது. (ய-21-50)

# வடக்கு, கிழக்கில் நெல்சிப் திட்டம் நிறைவு

யாழ்ப்பாணம், செப்.4

வடக்கு, கிழக்கில் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்த நெல்சிப் என்ற வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் 2011 இல் வடக்கு, கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சிசபைகளை மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 100 மில்லியன் ரூபாவுக்கான கருத்திட்டங்கள் மக்கள் பங்கேற்புத் திட்டத்துடன் முன்னகர்த்தப்பட்டது. சாலை அபிவிருத்தி, சந்தைக் கட்டட நிர்மாணம், பல்நோக்கு மண்டபம், குடிதண்ணீர்திட்டங்கள் உள்ளிட்ட பல உட்கட்டுமான திட்டங்கள் இந்த நெல்சிப் என்ற திட்டத்தின் ஊடாக முன்னகர்த்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சிசபையும் நெல்சிப் மூலம் எவ்வாறான முழு நன்மைகளை பெற்றதா? இல்லையா என்பது தொடர்பில் தொடர் கண்காணிப்பின் ஊடாக ஆராயலாம் என கொழும்பு தேசிய நெல்சிப் திட்டப்பிரிவு தெரிவித்துள்ளது. (ய-50)

# வட மாகாண சபையின் சிறப்பு அமர்வு இன்று

யாழ்ப்பாணம் செப் 4

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு இன்று கைதடியில் உள்ள வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறும் இன்றை அமர்வில் முக்கிய பல விடையங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசாவினால் கடந்த அமர்வில் வடக்கு மாகாண முதல்வரிடம் கேட்கப்பட்ட வினாக்களில் அவரால் பதில் வழங்கப்படாத வினாக்களுக்கு இன்றைய அமர்வில் வடக்கு முதலமைச்சர் பதிலை வழங்கவுள்ளார். வடக்கு முதலவரின் பதில் தொடர்பில் தனது கருத்துக்களையும் பதிவிட நேரம் ஒதுக்கி தருமாறு கடந்த அமர்வில் எதிர்க்கட்சித்தலைவர் அவைத்தலைவரிடம் கோரியிருந்தார். அதற்கு அவைத்தலைவரும் நேரம் ஒதுக்கி தருவதாக குறிப்பிட்டிருந்தார். இதனால் இன்றைய அமர்வு பரபரப்பட்டையும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (21-8)

# பொன்சேகாவுக்கு எதிராக கொழும்பில் இன்று போராட்டம்

*ஜெகத் விவகாரத்தால் வந்த நிலை*

கொழும்பு, செப். 4

முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகாவுக்கு எதிராக இன்று பி.ப. 3.30 மணிக்கு கிரிபத்கொட சந்தியில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரேசிலுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜெனரல் ஜெகத் சூரியவுக்கு எதிராக அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு கண்டனம் வெளியிடும் வகையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அமைச்சர் பொன்சேகா அமைப்பாளராக உள்ள களனித் தொகுதியில் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர். பிரசன்ன ரணவீர தலைமையில் இன்றையதினம் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (5-31)

# மைத்திரியின் சகோதரர் கொலை வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில்

கொழும்பு, செப். 4

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான பிரியந்த சிறிசேன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணை ஜூரிமார் சபையின் முன்னிலையில் நவம்பர் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நடைபெறுமென பொலநறுவை மேல்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வழக்கின் சந்தேகநபரான டொன் இசார லக்மால் சப்பு தந்திரி (வயது-34) பொலநறுவை மேல்நீதிமன்ற நீதியரசர் நிமால் ரணவீரவின் முன்னிலையில் தான் நிரபராதி எனத் தெரிவித்ததையடுத்து வழக்கு மேற்குறிப்பிட்ட கால எல்லையில் ஜூரிகள் சபை முன்னால் தொடர்ந்து விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

'வெலி ராஜு' என்று அழைக்கப்படும் பிரியந்த சிறிசேன 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் கோடரியொன்றால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். இந்த வழக்கின் அரச தரப்பு சாட்சிகளில் அரச தலைவரின் மற்றொரு சகோதரரான டட்லி சிறிசேனவும் இடம்பெறுகிறார். (5)

# கொட்டுகிறது மழை திறக்கப்பட்டன வான் கதவுகள்

*மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கிறது இடர்முகாமைத்துவ நிலையம்*

கொழும்பு, செப். 4

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக லக்ஷபான மற்றும் குக்கு லேகங்கை ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக மழைபெய்து வருவதால் பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. லக் ஷபான நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்திருந்தது. இதனால் நீர்த்தேக்கதின் வான்கதவு திறந்துவிடப்பட்டது. இதனால் களனி கங்கையை அண்மித்த தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதேவேளை குக்குலேகங்கையின் நீர்மட்டமும் அதிகரித்தமையால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வான்கதவும் திறந்து விடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,31)

# ரோஹிங்யா முஸ்லிம்கள் விவகாரத்தை கையிலெடுக்கின்றது முஸ்லிம் காங்கிரஸ்

*மைத்திரியின் அவசர தலையீட்டைக் கோரினார் ஹக்கீம்*

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைக்கு கண்டனம் தெரிவித்தும், ஒடுக்கப்பட்டுள்ளமக்களுக்குஇலங்கை அரசு நேசக்கரம் நீட்டவேண்டும் எனக் கோரியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரவுள்ளது.

இது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்ததாவது:

ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக இலங்கை ஆதரவுக்குரல் எழுப்பவேண்டியதன் அவசியத்தைப் பற்றி நான் அரச தலைவர் மைத்திரி, தலைமை அமைச்சர் ரணில் ஆகியோரிடம் எடுத்துரைத்துள்ளேன்.

செப்ரெம்பர் மாதத்துக்குரிய முதல்வார நாடாளுமன்ற அமர்வு நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இந்த வாரத்துக்குள் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் வகையிலான ஏற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்றக்குழு செய்துள்ளது- என்றார்.

மியன்மாரில் ரக்கைன் மாநிலத்தில்வாழும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக பலவழிகளிலும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இது விடயத்தில்அந்தநாட்டு அரசு மௌனம் காத்துவருவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. (5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேதநாயகி (குஞ்சு) கதிர்காமநாதன்

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் சடையாளியை வசிப்பிடமாகவும் தற்போது ஆலடியில் வசித்து வந்தவருமான திருமதி வேதநாயகி (குஞ்சு) கதிர்காமநாதன் நேற்று (03.09.3017) ஞாயிற்றுக் கிழமை காலை காலமானார்.


அன்னார்காலஞ்சென்றவர்களானசிவபாதம்(ஆசிரியர்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -வள்ளியம்மை பாக்கிலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், சிவநாயகி, பரமசிவம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவரான நாகேஸ்வரன் மற்றும் செந்தில்நாதன் (சுவிஸ்), காலஞ்சென்றவரான சுப்பிரமணியம், பிரபாகினி (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற விசயலட்சுமி மற்றும் கலாசோதி (கீதா - சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகலியும், அரிகரன், அரிகரசுதன், வாருணி (சுவிஸ்), காரணி (சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயும், திவ்வியா (அமெரிக்கா) இன் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது காரைநகர் ஆலடி இல்லத்தில் இன்று (04.09.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, காரைநகர். தகவல்: குடும்பத்தினர்.

சிவநாயகி (மனோ) 077 978 9440
அரிகரன் 077 127 5285

### மாணிக்கம் விஸ்வநாதன்



பிறப்பு 19.02.1948 இறப்பு 02.09.2017

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் விஸ்வநாதன் 02.09.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் தங்கரத்தினம் தம்பதிகளின் மருமகனும், வசந்தராணியின் அன்புக் கணவரும், விஜயலஷ்மி, வசந்தகுமார், விஜயரூபன், வாஹினி, வாசுகி, வித்யதரணி, வானதி, விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கம், வினோதா, சுபாஜினி, வரதராஜன், ஸ்ரீதரன், மதுராஜ் ஆகியோரின் மாமனாரும், காஜினி, விஸ்ணுகா, கஜானனன், வியக்ஷன், விதூஷன், வர்ஷிகி, வானுஜன், விசாகினி, வராஹினி, வர்ஷினி, வர்ஷாந், ராஜ்கரன், அர்தனி ஆகியோரின் பாசமிகு பேரனும், லோகேஸ்வரன் (ஜேர்மனி), மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வரதராசா, கதிர்காமராசா, யோகராசா, தவராணி, சிறிகாந்தராசா, ஆனந்தராசா, தங்கராணி, நடராசா, பத்மராசா, கிருஸ்ணராசன், அருள்தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்.

077 575 2679

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்தம்பி செல்வத்துரை
(ஐயர்கடை மாமா)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வத்துரை 02.09.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் லீலா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், தனுஷன் (கனடா), சுகிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வுக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவாகரனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூரணம், நாகரத்தினம் மற்றும் இராசமணி (கனடா), இராசம்மா (ஞானமணி), மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2017) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.60, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

021 205 1028

மலர்வு 31 - 05 - 1946



உதிர்வு 02 - 09 - 2017

### கலாநிதி இராஜசிங்கம் நரேந்திரன்

கொழும்பை பிறப்பிடமாகவும் பத்தரமுல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி இராஜசிங்கம் நரேந்திரன் அவர்கள் 02.09.2017 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராஜசிங்கம், புளோரன்ஸ் அரியமலர் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், வசந்தரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும், பாலமுரளி, ஹரிமுகுந்தன், ஜெகன்மாயன், மிதிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஈசமனோகரி, காலஞ்சென்ற மனோகரன், சரஸ்வதி மனோகரி, நீலாம்பரி, ஜெயதேவன், கௌரிமனோகரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற மிட்ஷல், கிம், மொனிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், மக்காய் தீரன், கைலன் தர்மன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (04.09.2017) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : மனைவி, பிள்ளைகள்

No : 66/20, Fortune Terrace Kalalgoda Road,
Batharamulla

+94 112744525 / 0777667134

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இளையதம்பி
அருமைநாதன்
(அருமை)



அன்னை மடியில்
06.10.1954

ஆண்டவன் அடியில்
29.08.2012

திதி: வளர்பிறை சதுர்த்தசி
04.09.2017

அப்பா! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இறைவன் அடி சேர்ந்து
ஐந்து ஆண்டுகள் சென்றாலும் எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனதில் பசுமையாகவே இருக்கும் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நித்தமும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.



நீங்கா நினைவலைகள்

13 ஆம் ஆண்டு — 12 ஆம் ஆண்டு



பிறப்பு 29.03.1938 — பிறப்பு 29.12.1946
மறைவு 29.08.2004 — மறைவு 13.09.2005

அமரர்
கதிரிப்பிள்ளை
தம்பிப்பிள்ளை

திருமதி
அன்னப்பிள்ளை
தம்பிப்பிள்ளை

புன்னகையின் திருவுருவமாய் எங்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்து
பாசத்தின் பொருளாய் இருந்து எம்மை வழி நடத்திய எம் தாய் தந்தையராய் இருந்து
இறைவனின் பாதச் சுவடுகளை பற்றி பசுமை தரும் நினைவுகளோடு கண்ணீர்
பூக்களால் நினைவஞ்சலியை காலடியில் சமர்ப்பிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பலாலி கிழக்கு,
வயாவிளான்.
என்றும் நினைவில்
குடும்பத்தினர்



இனிய நினைவுகளுடன்
ஐந்தாண்டுகள்



திருமதி
யோகமலர் (மம்மி)
இரத்தினசிங்கம்

மண்ணில்
31.10.1947

விண்ணில்
30.08.2012

திதி:
04.09.2017 சதுர்த்தசி

கண்ணில் மணிபோல எமைக்காத்து
மண்ணில் வளமோடு வாழவைத்து
கண்ணில் தெரியும் தெய்வமென
வாழ்ந்த அன்னையே யோகமலர் மம்மியே!
இன்று நீங்கள் மறைந்து ஐந்தாண்டுகள் ஆனாலும் உங்களை
என்றும் மறக்கும் இதயம் இல்லை எமக்கு
ஆண்டுகள் ஐந்தானதே!
அன்புத் தெய்வமே உமைப்பிரிந்து...
அன்பு முகமும் இனிய பேச்சும் புன்னகையும்
இப்பொழுதும் நினைவில் நிழலாடுதே!
இன்பவாழ்வு நாம்வாழ
எமக்கு இனியவை பல செய்த உம்மை
எப்படித்தான் மறப்போம் குலவிளக்கே!
இன்றும் என்றும் நினைப்போம்!
உடன் பிறந்தோர் உள்ளங்களில் நீங்கள்வாழ
ஊரும் உறவும் உங்களைச்சுமக்க
நீங்கள் மறைந்து சென்றதே ஐந்தாண்டுகள்.



அணையா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 077 254 5370


# நெடுஞ்சாலைகள் தனியார் மயப்படுத்தலால் கூட்டு அரசுக்கு எதிர்ப்புக் கிளம்புகின்றது

கொழும்பு, செப். 4

3 அதிவேக நெடுஞ்சாலைகளையும், புதிதாக அமைக்கப்படவுள்ள நெடுஞ்சாலைகளையும் வெளிநாட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இந்த முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் குதிக்க வேண்டிவரும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்குச் சமர்பித்துள்ள கடிதத்திலேயே அவர்கள் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போது பயன்படுத்தப்படும் மூன்று நெடுஞ்சாலைகளையும் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கி அதிலிருந்து கிடைக்கவுள்ள முற்பணத்தைக் கொண்டு புதிய அதிவேகப் பாதைகளை அமைக்கப்போவதாக அரசு தெரிவித்திருக்கும் யோசனையை நாங்கள் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டுள்ளோம்.

மிக முக்கியமான இந்தத்தீர்மானத்துக்கு எங்கள் கருத்தை ஒருபோதும்அரசுகோரவில்லை. நாட்டின் வருமானத்தில் பெரும் பங்களிப்பை வழங்கும் அதிவேக நெடுஞ்சாலைகளை வெளிநாட்டு நிறுவனத்துக்குத் தாரை வார்ப்பதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். இந்த முயற்சி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எங்களது சங்கம் சபையின் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து பெரிய தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கவேண்டி வரும் எனவும் எச்சரித்துள்ளனர். (5)

# பொன்சேகாவின் குற்றச்சாட்டு அவரது தனிப்பட்ட கருத்தாம்

## இப்படிச் சொல்லி 'எஸ்கேப்' ஆகின்றனர் அமைச்சர்கள்





கொழும்பு, செப். 4

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய போர்க் காலத்தில் குற்றங்களை இழைத்தார் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியமை, அவரது தனிப்பட்ட கருத்தே என்று அமைச்சர்களான மகிந்த சமரசிங்கவும், ருவான் விஜேவர்த்தனவும் தெரிவித்துள்ளனர்.

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் கருத்து தொடர்பாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்ததாவது:

இது அவரது தனிப்பட்ட கருத்தேயன்றி அரசின் கருத்து அல்ல. பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கும், ஜெனரல் ஜயசூரியவுக்கும் இடையிலான கருத்து வேறுபாடே இதற்குக் காரணம். இந்தச் சர்ச்சைகளுக்கு அரசதலைவரின் தலையீட்டில் தீர்வு காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க, போரின் போது, ஜெனரல் ஜயசூரிய குற்றங்களில் ஈடுபடவில்லை. ஜெனரல் ஜயசூரியவுக்கு ஆதரவாக அரசு செயற்படும். சரத் பொன்சேகாவின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தே தவிர அரசின் கருத்து அல்ல -என்றார்.

முன்னதாக, அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், ஜெனரல் ஜயசூரியவுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)


கண்ணீர் அஞ்சலி



எமது கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றும் திருமதி தி.சுகிர்தா
அவர்களின் அன்புத் தந்தையார்
சின்னத்தம்பி செல்வத்துரை
அவர்கள் 02.09.2017 அன்று காலமான
செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரி பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
பிரதான உள்ளகக்கணக்காய்வாளரும்,
உள்ளகக் கணக்காய்வுக்கிளை அலுவலர்களும்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பரமேஸ்வரி தர்மலிங்கம்

நல்லூரில்
07.01.1945

நல்லூரான்
பாதகமலத்தில்
15.09.2016

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி

238, கோவில் வீதி,
நல்லூர்.
குடும்பத்தினர்.

# உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா

## விஞ்ஞாபனம் - 05.09.2017



**உமையவள்தன் பாலகனார் தேரிலேறி**
**உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்**
**பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி**
**சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து**
**செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்**
**கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே**

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில் நாளை (05.09.2017) செவ்வாய்க்கிழமை எல்லாம் வல்ல

**கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா**

வெகு சிறப்பாக இடம் பெறவுள்ளது.

நாளை காலை 08.00 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்து கொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள்.

கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

# சரவணா சில்க்ஸ் நன்றி தெரிவிப்பு





**01.09.2017 வெள்ளிக்கிழமை வவுனியா சரவணா சில்க்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உதவிகள் புரிந்து தீயை அணைத்து சிறிய சேதத்துடன் எமது நிறுவனத்தைக் காப்பாற்றிய நகரசபை தீ அணைப்பு பிரிவு ஊழியர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், போக்குவரத்து பொலிஸார், பசார் வீதி வியாபார நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள், வர்த்தக சங்கம், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது வியாபார நிறுவனத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

## சரவணா சில்க்ஸ்

## இல.90, பசார் வீதி, வவுனியா. 024 222 7966

# புத்தர் சிலையால் மீண்டும் குழப்பம்

## இறக்காமம் மாணிக்கமடுவில் சம்பவம்

அம்பாறை, செப். 4

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் மாணிக்கமடுப் பிரதேசத்தில் புத்தர் சிலை வைப்பதற்கு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் அந்தப் பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள், அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து அந்தப் பிரச்சினை தணிந்துள்ளது.

மாணிக்கமடு பிரதேசத்தில் தனியார் காணியில் புத்தர் சிலை அமைப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. பொதுபலசேனா அமைப்பின் ஞானசாரதேரர் நேரடியாக வந்து புத்தர் சிலையை நிறுவுவதற்கு முற்பட்டிருந்தார். அம்பாறை மாவட்டச் செயலகத்தில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

> “ மாணிக்கமடு பிரதேசத்தில் தனியார் காணியில் புத்தர் சிலை அமைப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. பொதுபலசேனா அமைப்பின் ஞானசார தேரர் நேரடியாக வந்து புத்தர் சிலையை நிறுவுவதற்கு முற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் திடீரென, நேற்று முன்தினம் சனிக்கிழமை புத்தர் சிலையை நிறுவுவதற்கு மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் திரண்டதால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நசீர் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலமையை அவதானித்தார். பொலிஸாருடன் பேச்சு நடத்தினார். இதனையடுத்து புத்தர் சிலை நிறுவுவதற்கான முயற்சி நிறுத்தப்பட்டது. (5,46)

# இலங்கையில் இளவயது கர்ப்பம் இரத்தினபுரியிலேயே அதிகம்

கொழும்பு, செப். 4

இலங்கையிலேயே குறைந்த வயதில் பெண் பிள்ளைகள் கர்ப்பமடையும் மாவட்டமாக இரத்தினபுரி அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக, அந்த மருத்துவமனையின் பாலியல் மற்றும் எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மருத்துவர் காஞ்சன உபசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தோட்டங்கள் அதிகளவில் காணப்படும் இரத்தினபுரி மாவட்ட மக்களின் கல்வியறிவு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

சுகாதார வசதிகளும் குறைந்தளவிலேயே உள்ளது. தோட்டப் புறங்களில் மதுபானப் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் பாரதூரமான சமூக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.

பெண் பிள்ளைகள் திருமணம் செய்யும் வயதைப் பூர்த்தி செய்யாமல் குறைந்த வயதில் கர்ப்பமடைவதால் சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். தோட்டப் பகுதிகளில் இந்தச் சமூகப் பிரச்சினைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்தப்பிரச்சினைகளுக்குத்தீர்வு காண பல்வேறு தரப்பினர் முயற்சித்து வருகின்றனர் - என்றார். (5)

# பெண்கள் மோசடிக்காரர்கள் இல்லையாம்

## அமைச்சர் பைசர் முஸ்தபாவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, செப். 4

பெண்கள் இருக்கும் இடத்தில் ஊழல், மோசடிகள் மிகக் குறைவு. அவர்களுக்குத் தேர்தலில் 25 சதவீத ஒதுக்கீடு பெற்றுக் கொடுத்தன் ஊடாக, எதிர்காலத்தில் ஊழல், மோசடிகளை இல்லாமல் செய்துள்ளேன். இவ்வாறு அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.



தகுதியானவர்களுக்குத் தகுதியான இடம் கிடைக்கும் வகையிலும், முழுச் சமூகத்தையும் சரியான வழியில் இட்டுச் செல்லக்கூடிய வகையிலுமான தேர்தல் முறை மாற்றத்தைச் செய்து முடித்துள்ளேன்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் ஆசியுடன் நீண்டகால கடினமான முயற்சியின் பலனாக மோசடியாக காணப்பட்ட தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. இதற்கு உறுதியாணையாக இருந்த அமைச்சரவை, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபை அமைச்சின் செயலர், தேர்தல் ஆணைக்குழுத் தலைவர், எல்லை நிர்ணய குழுத் தலைவர்கள், என்னை விமர்சித்து ஊக்குவித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய தேர்தல் முறை ஊடாக எதிர்காலத்தில் நாட்டில் புத்திசாலிகளான அரசியல் தலைமுறை உருவாகும் என்று எதிர்பார்க்கின்றேன்.

பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரித்தன் மூலம் அரசியல்துறையில் பெண்களின் வரவு அதிகரிக்கவுள்ளது. இது நாட்டுக்கு கிடைத்த பெரிய வெற்றி. பெண்கள் இருக்கும் இடத்தில் ஊழல், மோசடிகள் நடப்பது குறைவு - என்றார். (5)

# விஜயதாசவின் வெளியேற்றம் அரசின் வீழ்ச்சியின் ஆரம்பம்

கொழும்பு, செப். 4

முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச போன்றோர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் மூலம் அரசின் சரிவு வெளித்தெரிய ஆரம்பித்துள்ளதாக, ஜப்பானின் பிரதான சங்கநாயக்கர் பெல்லேபொல விபஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

மாதிவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். பௌத்த மகா சங்கத்தினர் இல்லாதிருந்தால் இலங்கையின் அடையாளம் உலகை விட்டு அகற்றப்பட்டுவிடும் என்று அவர் இதன்போது குறிப்பிட்டார். (5,33)

# 721 நிறுவனங்கள் 7 ஆண்டுகளில் மூடப்பட்டுள்ளன

## முதலீட்டுச் சபை தகவல்

கொழும்பு, செப். 4

இலங்கை முதலீட்டுச் சபையால் அனுமதிக்கப்பட்ட 721 நிறுவனங்கள் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரையான ஏழு வருடங்களில் மூடப்பட்டிருப்பதாக முதலீட்டுச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சராசரியாக ஆண்டுதோறும் 103 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளது. 721 நிறுவனங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு முதலீட்டுச் சபை காணிகளையும் வழங்கியுள்ளது.

ஏழு வருடங்களில் ஆயிரத்து 246 நிறுவனங்களுக்கு முதலீட்டுச் சபை அனுமதி வழங்கியிருக்கிறது. இது சராசரியாக வருடத்துக்கு 178 நிறுவனங்களாகும். 2013ஆம் ஆண்டு 143 புதிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டபோதிலும் அந்த ஆண்டு 150 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்பட்டதற்கு அவற்றின் நிதி நிலைமைக் குறைபாடும் சந்தை வாய்ப்பின்மையும் காரணமாகியுள்ளது. ஒருசில நிறுவனங்கள் முதலீட்டு சபை எதிர்பார்த்த தொகையை முதலீடு செய்யாமல் விட்டதும் அவை மூடப்பட்டதற்கு ஒரு காரணமாகும். இவ்வாறு மூடப்பட்டவற்றுள் பெரும்பாலானவை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களாகும். (5)

# தாமதத்தை தவிர்க்க நடவடிக்கை

## புதிய நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

நீதிமன்றங்களில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளில் தாமதங்களைத் தவிர்க்க அவசியமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் வெளிநாட்டு பணி விவகார அமைச்சர் தலத்தா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிமன்றத்தின் தனித்தன்மையைப் பாதுகாக்கும் முகமாக அவசியமான நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளில் தலையீடு செய்ய வேண்டிய தேவை அரசுக்கு இல்லை என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (5)

**தேவை**

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நிர்மாணத் துறையில் அனுபவமும், திறமையுமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O), கணிய அளவையாளர் (QS) தேவை.

E-mail: deconkiri@gmail.com

077 5925371/ 076 316 5731

**தேவை**

அலுவலகத்தில் பணி புரிவதற்குப் பெண் பிள்ளைகள் தேவை.

கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

077 730 6981

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1986. அச்சுவினி, 3ஆம் பாதம் 2இல் செவ்வாய், பாவம் 62¾. உயரம் 5'9". கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Software Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

நேரடித் தொடர்புக்கு - 077 391 4557

**காணி தேவை**

காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. பிரதான வீதிகளுக்கு அண்மையாக கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளல் விரும்பத்தக்கது.

077 311 1640

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981.12.19 இல் பிறந்த செவ்வாய்க்குற்றமற்ற அத்தம் கிரகபாவம் 14 ¼ IT Executive ஆக பணி புரியும் இவருக்கு ஓய்வுநிலை அதிபரான தாயார். நற்குணமுள்ள A/L, IT/Accounting துறைகளில் கல்வி கற்ற ஆங்கில அறிவுள்ள மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்.

மாமன் - 071 654 3988
தாயார் - 011 259 8902

**கணினி வேலைவாய்ப்பு**

அச்சகத்திற்கு கணினி ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

கணினி பயின்று பணியாற்ற விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தற்போது (A/L) முடித்து வேலைசெய்ய விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

070 202 6746

**60 ஆவது பிறந்த தின வாழ்த்து**

இன்று (04.09.2017) அறுபதாவது அகவையில் கால் பதிக்கும்

திரு.கு.செல்வரத்தினம்

(Technical Officer - ACLA Office, Jaffna)

அவர்களை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்



(04.09.2017)

வாழ்த்துவோர்:-
மாமா, அண்ணாமார், அக்காமார் மச்சான்மார், மச்சாள்மார், பெறாமக்கள்.

மீசாலை கிழக்கு, மீசாலை.

**தவறவிடப்பட்டது**



கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த

ஆ.விபுலானந்தன்

ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் போக்குவரத்து சான்றிதழ் என்பன தவற விடப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

இல.13/2, கனகபுரம் கிளிநொச்சி
077 839 2449 (ஆ.விபுலானந்தன்)

**யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல்**

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்ட, தேசிய ரீதியாக சமூகப் பொருளாதார மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி : 01.10.2017

விண்ணப்பப் படிவங்கள் இல.76, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

திரு.தே.தேவானந்த்
கௌரவ தலைவர்,
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
யாழ்ப்பாணம்.

Tel.No: 021 222 3668
facebook: Cngos Jaffna Cngos
Email:
cngosj@sltnet.lk,jaffnacngos@gmail.com
web: www.cngojaffna.net

# அதிகாரத்தைப் பகிரலாம் அரசதலைவர் முறைமையை இல்லாதொழிக்க முடியாது

## மீண்டும் பிரச்சினை கிளப்புகிறதா சு.க. ?

கொழும்பு, செப். 4

தேசிய பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென்றால் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்படக்கூடாது. இந்த முறைமை இருந்தால் மாத்திரம்தான் அதிகாரப் பகிர்வு சாத்தியப்படும். இந்த நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை மகிந்தவிடம் இருக்க வேண்டுமா அல்லது மைத்திரியிடம் இருக்க வேண்டுமா என்பதல்ல இங்கு பிரச்சினை. அரச தலைவராக எவர் வந்தாலும் அந்த அதிகார முறைமை இருக்கவே வேண்டும். இவ்வாறு பிரதி அமைச்சர் மனுஷ்ஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு போதும் புதிய அரசமைப்பு வராது. அரசமைப்புத்திருத்தம்தான் கொண்டு வரப்படும். இது தொடர்பிலான வாக்குறுதி வழங்கப்பட்டது அரச தலைவர் தேர்தலின்போதே வழங்கப்பட்டது. அந்தத் தேர்தலில் ஒருபோதும் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கவில்லை.

பொது வாக்கெடுப்பு தேவைப்படாத அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படும் என்றே அரச தலைவர் அப்போது வாக்குறுதி வழங்கினார். இந்தத் தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிக்குத்தான் மக்களின் ஆணை கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த வாக்குறுதிக்கும் மக்கள் ஆணை கிடைக்கவில்லை. சுதந்திரக் கட்சி முன்வைத்த வாக்குறுதிக்கும் மக்கள் ஆணை கிடைக்கவில்லை. அரச தலைவர் தேர்தலில் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிக்கு மட்டும்தான் மக்கள் ஆணை கிடைத்தது. அந்த ஆணையின்படி அரசமைப்புத் திருத்தமே கொண்டுவரப்பட வேண்டும். புதிய அரசமைப்பு அல்ல.

அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு எம்மிடையே இணக்கப்பாடு உள்ளது. 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று 13 பிளஸ் என்ற பெயரில் கூடுதலான அதிகாரத்தை வழங்குவதற்கும் அப்போது மகிந்த ராஜபக்ச இணக்கம் தெரிவித்திருந்தார்.

அதேபோல், நாமும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றோம். தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதோவொரு வகையில் அதிகாரம் பகிரப்பட்டே ஆக வேண்டும். பிரிக்கப்படப்படாத நாட்டுக்குள்தான் இந்தப் பகிர்வு இடம்பெற வேண்டும்.

இவ்வாறு அதிகாரம் பகிரப்பட வேண்டுமென்றால் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்படக்கூடாது. இந்த முறைமை இருந்தால் மாத்திரம்தான் அதிகாரப் பகிர்வு சாத்தியப்படும். இந்த நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை மகிந்தவிடம் இருக்க வேண்டுமா அல்லது மைத்திரியிடம் இருக்க வேண்டுமா என்பதல்ல இங்கு பிரச்சினை. அரச தலைவராக எவர் வந்தாலும் அந்த அதிகார முறைமை இருக்கவே வேண்டும் - என்றார். (5)

## அயலுறவுத்துறை அமைச்சரின் முதல் பயணம் இந்தியாவுக்கு

கொழும்பு, செப். 4

அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். கடந்த மாதம் 15ஆம் திகதி அயலுறவுத் துறை அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், திலக் மாரப்பன மேற்கொள்ளவுள்ள முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

அயலுறவுத்துறை அமைச்சருடன், அண்மையில் அயலுறவுத்துறைச் செயலராகப் பதவியேற்ற பிரசாத் காரியவசமும், புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் சில அமைச்சர்களையும், அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்பதற்காகக் கொழும்பு வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில், அயலுறவுத் துறை அமைச்சர் ஆகியோரைச் சில நாள்களுக்கு முன்னரே சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், அயலுறவுத்துறை அமைச்சரின் புதுடில்லிப் பயணம் இடம்பெறவுள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சராகப் பதவியேற்பவர்கள், முதலில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வது அண்மைக்கால வழக்கமாக மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (5)

## சைட்டம் விவகாரத்தை ஆராய குழு நியமிப்பு

கொழும்பு, செப். 4

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் நிலவும் பிரச்சினைகளை ஆராய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குழுவை நியமித்துள்ளார். 10 நாள்களுக்குள் அறிக்கையைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு அந்தக் குழுவிடம் அவர் கோரியுள்ளார்.

மாலபே தனியார் பல்கலைக்கழக விவகாரம் அண்மைக் காலமாகவே பெரும் சிக்கலை அரசுக்கு ஏற்படுத்தி வருகிறது. மாலபே தனியார் கல்லூரிக்கெதிராகப் பல்கலைக் கழக மாணவர்கள் பல வருடங்களாகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கையெடுப்பதாக அண்மையில் அரச தலைவர் உறுதியளித்திருந்தார். அந்தவகையில் தற்போது சைட்டம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குழுவொன்றினை நியமித்துள்ளார்.

பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தலைமையிலான அந்தக் குழுவில் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, சுகாதார அமைச்சின் செயலர் ஜனக சுகததாஸ, உயர் கல்வி அமைச்சின் செயலர் ட.சீ.திஸாநாயக்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி.சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## மைத்திரிபாலவுக்கு வாழ்த்துச் சொன்ன நாமல் ராஜபக்ச

கொழும்பு, செப். 4

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பிறந்த நாளை முன்னிட்டு, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, கீச்சகத்தில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (5)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடுத்த மாதம் சீனா பொறுப்பேற்கும்

கொழும்பு, செப். 4

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அடுத்த மாதம் முதலாம் திகதி சைனா மேர்சன்ட் நிறுவனத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சைனா மேர்சன்ட் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் சில வாரங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் 80 சதவீதப் பங்குகள் சைனா மேர்சன்ட் நிறுவனத்துக்கும் 20 சதவீதப், பங்குகள் இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கும் உரித்தாகும் வகையில் 99 வருட குத்தகைக்கு சைனா மேர்சன்ட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை அரசுக்கு 1.2 பில்லியன் ரூபா வருடாந்தம் கிடைக்கும். (5)



## கனடிய தலைமை அமைச்சரை கவர்ந்த 'கொத்து ரொட்டி'

கொத்து ரொட்டி கனடியத் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோவைக் கவர்ந்த உணவாக இருப்பதாகக் கனடிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

டொரொன்டோவின் மிகப்பெரிய தெரு விழாக்களில் ஒன்றான தமிழ் திருவிழா நடைபெற்றது.

தெருவில் மக்கள் கூட்டத்தில் மத்தியில் சமைக்கப்பட்ட பல உணவுகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டிக் கொத்து ரொட்டி சிறப்பாக வருவதனை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன், என்று கனடியத் தலைமை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

30 ஆண்டுகளாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகள் குடியேறிய பகுதிக்கு கனடிய தலைமை அமைச்சர் சென்றுள்ளார்.

தமிழர்களுக்கும் இலங்கைத்தீவின் சிங்கள பெரும்பான்மைக்கும் இடையிலான போர் 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போதிலும், 2010ஆம் ஆண்டு கனடாவின் கரையோரங்களில் தஞ்சம் கோருவோர்களின் கப்பல்களின் வருகை அதிகரித்தது. இலங்கை நீண்டகால சமாதானத்தை இன்னும் அடைந்துவிடவில்லைஎன்றுகனேடியத்தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோ அங்கு தெரிவித்துள்ளார். (5)

## கூட்டாகச் செயற்பட முடியவில்லையா? சு.க.விலிருந்து வெளியேறலாம்

### அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, செப். 4

கூட்டாகச்செயற்படமுடியாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அரசிலிருந்து விலகிச் செல்ல முடியும் என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பணம் சம்பாதிப்பதற்காக அரசியலில் ஈடுபடுகின்றவர்களால் அரசியல் பெரும் பின்னடைவுக்கு முகம் கொடுத்துள்ளது. குடிசைகளில் வாழ்ந்த சிலர் தற்போது மாளிகைகளைக் கட்டியுள்ளனர். அரசு மோசடிகளில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. கடந்த காலங்களில் அவ்வாறான மோசடிகளில் ஈடுபடுகின்றவர்களே அத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அரசில் அத்தகைய மோசடியில் ஈடுபடுகின்றவர்கள் இருக்கலாம். எனினும் அமைச்சர் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் தமது பதவியைத் துறந்து, புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்துள்ளனர் - என்றார். (5)

## குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எங்கே?

### சுனிலிடம் கேள்வி எழுப்புகிறார் லக்ஸ்மன்

நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தன் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டை உறுதிப்படுத்துமாறு - ஆதாரங்களைச் சமர்பிக்குமாறு அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்காக வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட அதிசொகுசு வாகனம் அந்தச் செயற்திட்டத்தின் கீழான பாவனையில் இல்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி குற்றம் சுமத்தியிருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் கிரியெல்ல இதனைக் குறிப்பிட்டுள்ளார். (5)

# ரொஹிங்யர்களின் 700 வீடுகள் தீக்கிரை



“ குற்றச்சாட் டுக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மியன்மாருக்குச் சென்று விசாரணை நடத்த தனிக் குழுவை அமைத் தது. எனினும் அதை ஆங் சாங் சூகி ஏற்றுக்கொள்ள வில்லை. உள்நாட்டுப் பொறி முறைமூலம் விசாரணை செய்யப் படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. , அப்படியே இலங்கை அரசைப் போல.

நைய்பியிடா, செப். 4
மியன்மாரில் ரொஹின்ய முஸ்லிம்களின் 700 வீடு கள் தீக்கிரையாக்கப் பட்டுள்ள சம்பவம் மேலும் அதிர்வலைகளை ஏற்படுத் தியுள்ளது.

மியன்மார் ஓர் பௌத்த நாடு. அங்கு சிறுபான்மை மக்களாக ரொஹின்ய இஸ் லாமியர்கள் உள்ளனர். அவர்களை மியன்மார் காலாகலமாக இனச் சுத்தி கரிப்புச் செய்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையிலும் விவாதிக்கப்பட் டுள்ளது.

இந்தக் குற்றச்சாட் டுக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மியன்மாருக்குச் சென்று விசாரணை நடத்த தனிக் குழுவை அமைத்

கள் என்ற போர்வையில் நடந்த இனப்படுகொலையே இது என்று கருதப் படுகிறது. இந்த நிலையில் ரொஹிங்யர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சுமார் 700 வீடுகள் தீக்கிரை யாக்கப்பட் டுள்ளமை செய் மதிப்படங்




தது. எனினும் அதை ஆங் சாங் சூகி ஏற்றுக்கொள்ள வில்லை. உள்நாட்டுப் பொறி முறைமூலம் விசாரணை செய்யப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. அப்படியே இலங்கை அரசைப் போல.

### 370 ரொஹிங்யர்கள் கொலை

மியன்மாரில் சமீபகால மாக ஆயுதம் தாங்கிய கல. வரங்களில் ஈடுபட்ட 370 பேர் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளனர் என்று மியன் மார் அரசு அறிவித்தது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ரொஹிங்யர் கள் என்பதால் ஆயுததாரி

கள் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உலக அரங் கில் இது பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தியுள்ளது.

### ரொஹிங்யர்களுக்கு உதவி செய்ய துருக்கி தயார்

மியன்மார் அரசு ரொஹின்ய இனத்தவர்களுக்கு எதிரா கக் கடைப்பிடித்துவரும் கொடூரத்தனமான அடங்கு முறைகளை துருக்கி அதிபர் ரயிப் எர்டகன் கடமையா கக் கண்டித்துள்ளார். அவர் ரொஹிங்ய இஸ்லாமியர்க ளுக்கு துருக்கி உதவிசெய்ய தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டார். (ம)




# அனித்தாவுக்கு ஆதரவாக தமிழகம் நேற்று முடக்கம்



சென்னை, செப். 4
இந்திய மைய அரசு அறிமுகப்ப டுத்திய தடை தாண்டல் பரீட்சை யால் (நீட்) மருத்துக் கல்வியைப் பெற முடியாது போன தமிழகத் தின் அப்பாவிக் கிராம மாணவி அனித்தா, கடந்த வெள்ளிக் கிழமை தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார். அவரது சாவுக்கு இந்திய மைய அரசே காரணம் என்று தெரிவித்து தமி ழகமெங்கும் பெரும் போராட்டங் கள் நடைபெற்று வருகின்றன.

கோவை, சென்னை அண்ணா சாலை, அரியலூர், திருச்சி உள் ளிட்ட இடங்களில் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெ டுக்கப் பட்டு வருகின்றன.

சென்னை அண்ணா சாலையில் நேற்று அவ்வப்போது போராட் டங்கள் நடைபெற்றன. அரிய லூரில் நேற்று முழு அமைப்பு இடம்பெற்றது. இதனால் அந்தப் பகுதியில் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

### உச்சக் கட்ட பாதுகாப்பில் சென்னை மெரீனா கடற்கரை

ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட் டிருந்த தடையை எதிர்த்து தமிழக இளைஞர்கள் சென்னை மெரீ னாவில் பெரும் எழுச்சியுடன் போராட்டங்களை நடத்தினர். இதனால் அனித்தா விவகாரத்தில் அவர்கள் மீண்டும் மெரீனாவில் ஒன்றுகூடிப் போராட்டங்களை நடத்தலாம் என்ற சாத்தியங்கள் இருந்ததை அடுத்து அங்கு பொலி ஸார் குவிக்கப்பட்டு மெரீனா கடும் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டது. கடந்த வெள் ளிக்கிழமை இரவு போடப்பட்ட இந்தப் பாதுகாப்பு நேற்றுவரை விலக்கிக் கொள்ளப்படவில்லை.

### இன்று மேலும் தீவிரமடையும்

அனித்தாவின் தவறான முடிவுக் குக் காரணமான நீட் தேர்வை யும் அதைக்கொண்டுவந்த இந் திய மைய அரசையும் கண் டித்து, தமிழகத்தில் உள்ள கல்லூ ரிகள் மற்றும் பாடசாலை மாண வர்கள் இன்று பெரும் போராட் டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதில் அனைத்து மாணவர்க ளும் பங்கெடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

அரசியல் கட்சிகள், திரையுலகத்தி னர் எனப் பல தரப்பினரும் இந் தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனால் தமிழகத்தில் ஏற்பட் டுள்ள பதற்றமான சூழல் இன் றும் தொடரும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. (ம)

# அனித்தாவின் மறைவுக்கு தி.மு.க. இரங்கல்

சென்னை, செப். 4
தமிழக மாணவி அனித்தாவின் மறைவுக்கு தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபை யின் எதிர்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன் நேற்று முன்தினம் அனித்தாவின் வீட்டுக்கு நேரில் சென்று அனித்தாவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

மாணவி அனித்தா பெற்ற மதிப்பெண்களையும், அவர் எவ்வளவு திறமையானவர் என்பதையும் தமி ழகம் நன்கு அறியும். நீட் தேர்வு இல்லாவிட்டால் அனித்தா மருத்துவராகியிருப்பார். அதிலிருந்து விலக்கு வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றம் வரைசென்று போராடியும் பலன் கிடைக்காத பட்சத் தில் அவர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

முதலமைச்சர், அமைச்சர்கள் டெல்லி சென்று வந்த போதெல்லாம் நீட் விலக்குத் தொடர்பில் விவா திக்கப் பட்டது என்று தெரிவித்தார்கள். ஆனால் அவர்கள் நீட் விலக்கிற்காக செல்லவில்லை அடித்த கொள் ளையை அபகரிப்பதற்காகவே சென்றார்கள் என்பது தற்போது தெளிவாகத் தெரிகிறது. மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், பொன்.இராதாகிருஷ்ணன் உள் ளிட்டவர்களும் தமிழக அமைச்சர்களும் உடனடி யாக தமது பதவியில் இருந்து விலவேண்டும்" என்று ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம)

சென்னை, செப். 4
நீட் தேர்வால் உயிரை ம
ஒளிப்படங்கள் சமூக வ
செய்துள்ளன.
கடந்த வருடம் நடைபெ
புள்ளிகளை எடுத்து மு
“எனது தந்தை ஒரு கூ
விருப்பம்” என்று தெரி
அனித்தாவுக்கும், ஏனை
அதாவது 12ஆம் தரத்தி
சித்தியடைந்தால் மட்டு
கப்பட்டது.
நீட் தேர்வை எதிர்த்து அ
உரிய சம வாய்ப்பாக இ
வர்கள் அதிகம் பாதிக்க
ழகத்துக்கு விலக்கு வழ
வில்லை. இதனால் தவ
அனித்தா தாழ்த்தப்பட்ட
மிகவும் பிற்படுத்தப்பட்ட
தொடர்பான ஒளிப்பட
அனித்தா எத்தகைய ச
காட்டாக உள்ளன.




வொஷிங்டன், செப். 4
மணிக்கு 251 கிலோ மீ
வேகத்தில் அமெரிக்கா
டெக்சாஸ் மாநிலத்தை க
26ஆம் திகதி சனிக்கிழ
கடும் புயல் தாக்கியது. புய
பின்னர் கனமழையும்
சாஸை ஆக்கிரமித்தது.
இடரில் சிக்கி இதுவரை 47
உயிரிழந்துள்ளனர் எ
உத்தியோகபூர்வமாக அ
கப்பட்டுள்ளது.
டெக்சாஸின் இயல்பு நி
வெகுவாகப் பாதிக்கப்பட்
நிலையில் டெக்சாஸை
னைய நிலைக்கு மீண்டு
டியெழுப்ப இலங்கை மதி
சுமார் ஒரு லட்சத்து 25 ஆ
கோடி ரூபா தேவை எ
கணக்கிடப்பட்டுள்ளது.
12 வருடங்களின் பின்னா
சாஸ் சந்தித்த பெரும் இட
என்று தெரிவிக்கப்பட்ட
நிலமையின் தீவிர
உணர்ந்த அமெரிக்க அ
ட்ரம்ப், பெரும் அனர்த்த
சந்தித்த மாகாணமாக
சாஸை அறிவித்தார்.
னேற்பாடு நடவடிக்கைக
செய்யப்பட்டதால் உயி
எண்ணிக்கை ஓரளவு கு
கப்பட்டுள்ளது.
இல்லையேல் உயிரிழப்
ரத்தைத் தாண்டிய
வாய்ப்பிருந்திருக்கும் எ
பன்னாட்டு ஊடகங்கள்
வெளியிட்டன.

# வடகொரியா நேற்று ஐதரசன் குண்டைச் சோதித்து அடாவடி

பியாங்யாங், செப். 4
பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறை களை மீறி வடகொரியா நேற்று மிகவும் சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டைச் சோதித்துள்ளது. இந் தக் குண்டு அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந் தது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சோத னையை அடுத்து வடகொரியாவில் 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது தொடர்ந்து ஏவுகணைச் சோத னையை நடத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள தடைகள் உள் ளிட்ட எந்தத் தடையையும் வடகொரியா கண்டு கொள்வதில்லை. அந்த நாடு அண்மையில் ஜப்பா னுக்கு மேலாக ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தியது.

இதற்கு பல முனைகளில் இருந்தும் கண்டனங் கள் குவிந்தன. “இது வெறும் ஆரம்பம் மட்டுமே ” என்று தெரிவித்திருந்தார் வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன்.

இந்த நிலையில் வடகொரியா, அணுகுண்டை விட வும் பலமடங்கு சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டை நேற்றுச் சோதித்தது. வடகொரியாவின் இந்தச் சோதனை அந்த நாட்டுக்கு மேலும் சில பொருளா தாரத் தடைகளையும் கண்டனங்களையும் கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)




# அனித்தாவின் மாளிகை


ர மாய்த்துக் கொண்ட தமிழக மாணவி அனித்தா வாழ்ந்த வீடு தொடர்பான வலைத்தளங்களில் வெளியாகி பலரினதும் மனங்களைக் கனதியடையச்

பற்ற 12ஆம் தரப் பரீட்சையில் ஆயிரத்து 200 புள்ளிகளுக்கு ஆயிரத்து 176 முதலிடம் பிடித்தார் அனித்தா. ஊடகங்கள் மேற்கொண்ட செவ்வியின் போது, கூலித் தொழிலாளி. மருத்துவராவதே அவரினதும் எனதும் ரிவித்திருந்தார். இதன் பின்னர்தான் நீட் என்கிற தடைக்கல் னைய தமிழக மாணவர்களுக்கும் வைக்கப்பட்டது.
தில் பெருமளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலும், நீட் தேர்வில் டுமே அடுத்த கட்டத்துக்குச் செல்லாம் என்பது புதிய விதியாக்


அனித்தா வழக்குத் தொடர்ந்தார். அனைத்து மாநிலங்களுக்கும் இதைக் கருதமுடியாது. தன்னைப்போன்ற கிராமத்து மாண க்கப்படுவார்கள் என்று வாதிட்டார். எனினும் நீட் தேர்வில் தமி ழங்கப்படவில்லை. அனித்தாவும் நீட் தேர்வில் சித்தியடைய வறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்தார்.
ட்டவர்கள் என்று கருதப்படும் தலித் வகுப்பைச் சேர்ந்தவர். ட, வறிய குடும்பப் பின்னணியைக் கொண்டவர். அவரின் வீடு டங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் படங்கள் சவால்களைச் சந்தித்து சாதித்தார் என்பதற்கு தக்க எடுத்துக்
(ம)








## சாஸைக் கட்டியெழுப்ப
## 00 கோடி ரூபா தேவை



மீற்றர்
ாவின்
கடந்த
ழமை
பலின்
டெக்
இந்த
47 பேர்
என்று
றிவிக்

நிலை
ட்டுள்ள
முன்
டும் கட்
திப்பில்
ஆயிரம்
என்று

ா் டெக்
ர் இது
து.
த்தை
அதிபர்
த்தைச்
டெக்
முன்
கள் பல
ரிழப்பு
தறைக்

பு ஆயி
ருக்க
என்று
செய்தி
(ம)

# நிஜங்களைப் போலுள்ள கம்பளி ஓவியங்கள்

அமெரிக்காவின் ஆர்கன்சாஸ் பகுதியில் வசிக்கும் டேனி ஈவ்ஸ், 'கம்பளி ஓவியம்' தீட்டுவதில் சிறந்தவராக இருக்கிறார். ஊசியையும் கம்பளியையும் வைத்து, நிஜமான விலங்குகளையும் பறவைகளையும்போல் ஓவியங்களை உருவாக்கிவிடுகிறார்.
"எனக்கு ஓவியம், கலைப் பொருட்கள் செய்வதில் ஆர்வம் அதிகம். நான் வாழ்ந்த சூழலும் இயற்கை எழில் நிரம்பியது. தாவரவியல், சூழலியல் போன்ற துறைகளில் பட்டம் பெற்றேன். உயிரியல் பூங்காவில் வேலை கிடைத்தது. விலங்குகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது.
ஆரம்பத்தில் முப்பரி மாண ஓவியங்களைத் தீட்டிக்கொண்டிருந்தேன். பிறகு கம்பளியை வைத்து ஓவியம் தீட்டுவதை நானாகவே உருவாக்கினேன். இவற்றைப் படங்களாக எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டேன். நல்ல வரவேற்பு இருந்தது. அதனால் வேலையை விட்டுவிட்டு, முழு நேரமாக கம்பளி ஓவியங்களில் இறங்கினேன். இதன் மூலம் இலாபம் கிடைக்கிறது" என்கிறார் டேனி.
(ம)






## தேர்த்திருவிழா
## சிறப்பிதழ் - 2017



கிளிநொச்சி மாவட்டம் – பச்சிலைப்பள்ளி
இயக்கச்சி
### திருவருள்மிகு மல்வில் ஸ்ரீகிருஷ்ணர் கோயில்

### ஆலயவரலாறு

பச்சிலையில் பரந்தாமன் அறிதுயில் கொண்டதால் பச்சிலைப்பள்ளி என வரலாற்று நாமம் பெற்ற பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் இயக்கச்சி பகுதியில் மல்வில் என்னும் வரலாற்று தொன்மை மிக்க கிராமம் உள்ளது. இக் கிராமத்தில் அடர்ந்தகாட்டுப்பகுதியில் காலை மாலை நள்ளிரவு வேளைகளில் தொடர்ச்சியாக சங்கொலி கேட்டதால் அப்பகுதி அடியவர்கள் சென்று பார்த்த போது அங்கே மகாவிஷ்ணு ஆலயம் காணப்பட்டது.அன்று தொடக்கம் அடியார்கள் வழிபட்டு வந்தனர் பிற்காலத்தில் ஒல்லாந்தபடைகள் முகாமிட்டு அப் பகுதியில் தங்கியிருந்து வழிபாட்டினை தடுத்தனர். இதனால் தம்முள் தாமே போரிட்டு மடிந்தனர் எனவரலாறு உண்டு. மானிடர் மடிந்த இடம் ஆலயத்திற்கு ஏற்ற சூழல் அல்ல என்பதனால் தற்போதைய இடத்தில் ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். முன்பு ஆலயம் அமைந்திருந்த பகுதி சங்குகேணி எனவும் அதன் நடுவில் உள்ள தாமரைத் தடாகமும் இன்றும் காணப்படுகிறது.
ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இராமர் சேனையோடு தங்கியிருந்து சிவபூஜை செய்து தனது படைகளுக்கு வேண்டிய நீரைப் பெறுவதற்கு மல் என்னும் வில் ஊன்றி நீர் பெற்றதால் இப் பதி-மல்வில் எனப் பெயர் பெற்றது என்கிறது வரலாறு.
இத்தலத்தில் சத்தியபாமாருக்மணி சமேதராய் மகாவிஷ்ணுவுக்கும் சிவனுக்கும் ஆலயம் அமைத்து அடியார்க்ள் வழிபடுகின்றனர். மல்வில் என்னும் பரந்ததாமரைத் தடாகமும் அதன் நடுவில் மரக்குற்றிகளால் அமைக்கப்பட்ட கிணறும் காணப்படுகிறது. இந்தத் தடாகத்தில் ஆலய தீர்த்தத் திருவிழா இடம்பெறுகிறது. சமுத்திர தீர்த்தம் வடமராட்சி கிழக்கு கொடுக்கிளாய் கடலில் பன்னெடுங்காலமாக நடைபெற்று வருகிறது.
ஆவணிமாத வளர்பிறை பஞ்சமிதிதியில் திருவிழா ஆரம்பமாகி பூரணை தினத்தில் சமுத்திர தீர்த்த மும் மறுநாள் தாமரைத் தடாகத் தீரத்தமும் நடைபெறுகின்றன. திருவிழாகாலத்தில் ஒவ்வொரு நாட்களும் மாயவனின் ஒவ்வொரு திருவிளையாடல்களும் திருவிழாவாக நடைபெறுகிறது. கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தரும் வள்ளல் மாயவனின் இரதோற்சவம் கண்டு எமது குறைகளை எல்லாம் தீர்த்து நல்வாழ்வு வாழ்வோமாக !

### ஆலய பிரதமகுருவின் ஆசியுரை

இலங்கை துபீபத்தின் வடபால் வரலாற்று சிறப்பு மிக்க விஷ்ணு ஆலயங்களில் ஒன்றான சத்தியபாமாருக்மணி உடன் உறை மல்வில் மாயவப்பெருமானுக்கு அலங்காரத் திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

அடியவர்கள் மல்வில் கிருஷ்ண பரமாத்மாவை வழிபட்டு சகலசெல்வங்களும் பெற்றுய்வீர்களாக !!
"சர்வசாதகரத்னம் "பிரம்மஸ்ரீ முரளிதரவித்யானந்த குருக்கள்

### இரதோற்சவ உபயகாரசின் உள்ளத்திலிருந்து

தாமரைக்குளத்தருகே மருதமர நிழலோடு தென்னங்கீற்றின் அசைவுக்கும்
வானுயர் பனைமரங்களின் அழகிற்கும் மத்தியில் வீற்றிருக்கும் மல்வில் மாயவனே
நின் வடம் பிடிக்க நாடிவந்தோமையா கண்திறந்து எமைப் பார்த்து அருள்தாருமையா
அருள் தாரீர் அருள் தாரீர் மல்வில் பதிமாயவனே

இரதோற்சவ செயற்குழு
சங்கத்தார்வயல் கோவில்வயல்



1985 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளே!**
உங்களுக்கான பெறுபேறுகள் வரும் வரை உள்ளதான காலத்தை பயனுள்ளதாக்குவீர்! மற்றும் வெளிநாடு செல்ல தயாராகிவரும் மங்கையரே! சுயதொழில் செய்ய விரும்பும் நங்கையரே! ஆர்வமுள்ள மகளீரே!

**உங்களுக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

- **கேக் ஐசிங்** - றோயல். parchment,Frosting,Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers)
- **உணவு தயாரித்தல்** - உணவு வகைகள், 6 வகையான, Cakes, Cup Cake மற்றும் பீஸா. சிற்றுண்டிகள் குளிர்பானங்கள். ஐஸ்கிறீம், புடிங் தயாரித்தல்.
- **FACIALS\ (முக அழகுக்கலை)** - Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளை அகற்றுதல் (Waxing)
- **கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்** - 40 வகையான கொண்டைகள் போடுதல் முடி அயன் செய்தல். முடி சுருட்டுதல். (Hair Colouring), முடி வெட்டுதல். Hair Perming.
- **BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்)** - இந்து,கிறிஸ்தவ. இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி. மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள், முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

**பிளவ்ஸ், சாறிபிளவ்ஸ், சுரிதார்** மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற **கிழமை நாள்** தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்.**

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்: 10.09.2017 ஞாயிறு முற்பகல் 10.00 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 11.09.2017 திங்கள் முற்பகல் 10.00 மணி**

**இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகள் அதனை உறுதிப்படுத்தும் பட்சத்தில் கட்டணத்தில் 20% கழிவு வழங்கப்படும்.**

மேலும் விவரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். **இயக்குநர்**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான இனப்படுகொலைக்கு எதிரான உரத்த குரல்கள் அவசியம்

கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல், இராணுவத்தின் ஈவிரக்கமற்ற பதிலடி, ஆயிரக்கணக்கான கிராமத்தவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தப்பியோடுதல் போன்றவற்றால் மியன்மாரில் ஒரு வருடத்துக்குப் பின்னர் வரலாறு மீண்டும் திரும்பியுள்ளது.

கடந்த வாரம் மியன்மாரின் ரோஹிங்யா இனத்தைச் சேர்ந்த கிளர்ச்சிக்காரர்கள் மியன்மார் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து மியன்மார் படையினர் ரோஹிங்யா இனத்தவர்கள் மீது மூர்க்கத்தனமான பதிலடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

கிராமங்கள் எரிக்கப்படுதல், துப்பாக்கிச் சூடு போன்றவை காரணமாக ஆயிரக்கணக்கான ரோஹிங்யா இனத்தவர்கள் பங்களாதேஷ் எல்லையில் குவிந்துள்ளனர். அந்தப் பகுதியில் காணப்படும் ஆற்றைப் பயன்படுத்தி பங்களாதேஷ் எல்லைக்குள் புகுந்த வண்ணமுள்ளனர்.

மியன்மாரின் வடபகுதியிலுள்ள ரகைன் மாகாணத்தில் வாழும், அந்த நாட்டு அரசால் தனது மக்களென ஏற்றுக் கொள்ளப்படாத முஸ்லிம் சமூகத்தினரே இவ்வாறான அவல நிலையைச் சுமந்து நிற்கின்றனர்.

கடந்த சில நாள்களில் பங்களாதேஷ் எல்லைக்குள் வந்துள்ள ரோஹிங்யா இனத்தவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்துக்கும் அதிகம் என்கின்றது ஐ.நா.

அவர்கள் தெரிவிக்கும் செய்திகளே, மீண்டும் ஓர் இனப்படுகொலை அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளதைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

மியன்மார் படையினர் எங்களைத் தாக்குகின்றனர், எங்கள் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்கின்றனர், பலரைவெட்டிக் கொலைசெய்துள்ளனர்; பாலியல் வன்முறைகளும் ஏனைய துன்புறுத்தல்களும் இடம்பெறுகின்றன என முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள ரோஹிங்யா இனத்தவர்கள் கதறுகின்றனர்.

ஒரு வருட காலப்பகுதிக்குள் அவர்கள் மீது இரண்டாவது தடவையாக இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை முக்கியமான விடயம்.

கடந்த ஒக்டோபரில் கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலைத் தொடர்ந்து மியன்மார் இராணுவம் வெறியாட்டத்தில் ஈடுபட்டது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதமும் ரோஹிங்யா முஸ்லிம் சமூகத்தினர் இவ்வாறானதொரு அவலத்தைச் சந்தித்திருந்தனர்; இனப்படுகொலைகள், மனிதகுலத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உள்ளாகியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை, தனது விசாரணைகள் மூலம் அங்கு இனப்படுகொலை நடந்தது எனத் தெரிவித்துள்ளது. மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்வதற்கு அனுமதி கோரி நிற்கின்ற ஒரு தருணத்திலேயே மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன.

இலங்கையில் தமிழ்ச் சமூகம் சந்தித்த அனுபவங்கள் ரோஹிங்யாக்களுக்கும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன. கடந்த மார்ச் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் மியன்மாரில் இடம்பெற்றுவரும் இனப்படுகொலைகள் குறித்த குற்றச்சாட்டுகள்பற்றி ஆராய்வதற்காகதூதுக்குழுவொன்றை அனுப்பவேண்டும் என பரிந்துரைசெய்திருந்தது.

மியன்மாரில் மேற்குலகத்துக்கு சமமாகச் செல்வாக்குச் செலுத்தத் துடிக்கும் இந்தியாவும் சீனாவும் உடனடியாகச் செயற்பட்டு இதனைத் தடுத்துநிறுத்தின. இதில் இந்தியாவின் பங்கு மிகவும் வலுவானதாகக் காணப்பட்டது.

இலங்கையின் போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் காண்பிக்கும் ஆர்வத்தை இந்தியாவும் சீனாவும் மியன்மார் விடயத்திலும் வெளிப்படுத்தியுள்ளன.

ஈழத்தமிழர்களும் மியன்மார் முஸ்லிம்களும் எதிர்கொண்டு நிற்கின்ற அவலம் அரசுகளும், உலக வல்லரசுகளும், பன்னாட்டு அமைப்புகளும் தமது போக்கிலிருந்து மாறப் போவதில்லை என்பதையும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு உலகம் மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்கவேண்டியுள்ளது என்பதையும் புலப்படுத்தி நிற்கிறது.

கட்டுரை

# தந்தால் வாங்கு: கேட்டு வாங்காதே

கு.மதுசுதன்

பாரதி வந்த பின்னும் பாட்டிலே மட்டும் பெண்ணடிமைத்தனம் பேசுகிறவர்களாகவும், பேணுகிறவர்களாகவும் எமது சமுதாயத்தினர் விளங்குகின்றனர்.

அண்மையில் எனது காதுகள் வழி சென்று மூளையில் இறங்கி, இதயத்தை இறுக்கிய சம்பவங்கள் இரண்டு. ஒன்று மாணவர்கள் ஆறுபேரின் அவலச் சாவு, மற்றையது சீதனம் தொடர்பான முரண்பாடு காரணமாக தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்த ஒரு இளம் பெண்ணின் சாவு.

### சீதனச் சாவுகள் ஏராளம் ஏராளம்

பெண்கள் சீதனம் தொடர்பான முரண்பாடுகள் காரணமாக தவறான முடிவெடுத்து மாண்ட கதைகள் எமது நாட்டில் குறைவில்லாமல் படிக்கக் கிடைக்கும். அதுமட்டுமன்றி, படிக்க வராத , கவனத்துக்கு எட்டாத கதைகள், காவியங்கள் ஏராளம்.

அதுமட்டுமன்றி, பெண்ணடிமைத்தனத்துக்கான போராட்டங்கள் பாடல்களிலும், வாய்மொழிகளிலும், மகளிர் தினத்திலும் மட்டுமே உயிர்பெற்று, பின்னர் அதேவேகத்தில் மறைந்தும் விடுகின்றன. செயற்பாட்டு வடிவில் எதுவும் முன்னெடுக்கப்படுவதில்லை.

சீதனம் என்பது, தமிழர் தம் வாழ்க்கையின் புரையோடிப் போன கலாச்சார மரபுதான். அது எவ்வாறு எமது கலாசாரத்துக்குள் உள்ளெடுக்கப்பட்டதென்றால், ஒரு பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் அவளுக்குத் திருமணம் செய்து கொடுத்து கணவன் வீட்டுக்கு அனுப்பும் போது தாங்கள் ஆசையாயும் பாசமாயும் வளர்த்த தமது பெண்ணுக்கு அன்பளிப்பு வழங்கும் நோக்குடன் சிலவற்றை பரிசளித்தார்கள்.

அன்பை பரிசளித்தார்கள், சில பொருள்களைப் பரிசளித்தார்கள். அதில் தாய் வீட்டுச் சீதனமாக அம்மி, குழவி, கட்டில், சமையல் பொருட்கள் , பாத்திரங்கள் எனத் தமது மகள் பிறிதொரு வீட்டில் (மணமகன்) வாழப் போகிறாளே என எண்ணி அவளுக்கான பொருள்களை அனுப்பி வைத்தார்கள், பின்னர் காலப்போக்கில் நகைகளைப் பரிசளித்தார்கள், நிலங்களைப் பரிசளித்தார்கள், பணத்தைப் பரிசளித்தார்கள்.

இவையெல்லாவற்றையும் பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் தங்கள் இயல்பு வரம்புக்குள் எட்டும்படியே செய்து வந்தார்கள், அவை மணமகன் கேட்டுக் கொண்டதன் பேரிலேயோ, நிபந்தனை விதித்தோ வழங்கப்பட்டதல்ல. ஆனால், இன்று யாழ்ப்பாணத்தானின் நிலையென்ன?

உலகுக்கு பண்பு, வரலாறு, வீரம், வாழ்வியல் எல்லாவற்றைப் போதித்த தமிழர் (யாழ்ப்பாணத்தார்) இப்போது பெண்ணடிமைத்தனம் , ஒடுக்குமுறைகளைப் போதிக்க விளைகிறார்களா? என எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறு இங்கு நடக்கும் கல்யாணச் சந்தையிலே சீதனப் பேரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

கல்யாணச் சீதனம் என்ற சொல்லின் அர்த்தம் இழந்து, ஒரு பேரம் பேசும் சொல்லாக உருவெடுத்துள்ளது அல்லது சமூகத்தில் களை பெருக்கெடுத்துள்ளது. இதைக் களைந்தால் தான் சமூகம் துளிர்விட ஆரம்பிக்கும்.

### இளம்பெண்ணின் சாவு சாதாரணமானது அல்ல

அண்மையில் ஒரு இளம்பெண் கல்யாணம் எல்லாம் பொருந்தி முற்றான பின்னரும், மணமகன் தரப்பினர் அதிக சீதனம் கேட்டபடியால் மனமுடைந்து தவறான முடிவு எடுத்துத் தமது உயிரைத் தாமே போக்கிக் கொண்டார். இந்தச் செய்தி யார்யாருக்கெல்லாம் தெரியும், அல்லது தெரிந்திருந்தும் சாதாரணமான விடயம் என கடந்து போவதால், இது தான் எமத சமூகத்தின் வழமையான இயல்பு என நிறுவ முயல்கிறோமா?

தவறான முடிவெடுத்து தமது உயிரை மாய்த்த அந்த யுவதி தாய் தந்தை இல்லாதவர், படித்து கொழும்பில் வேலை செய்கிறார். அந்த யுவதியின் அக்காவே யுவதிக்குத் திருமணம் பேசி வைத்திருந்தார். சீதனம் தொடர்பான பேச்சுக்கள் முன்னரே இடம்பெற்று அவளும் தனது புதுவாழ்க்கை பற்றி எத்தனையோ கனவுகளுடன் பொழுதுகளை இன்பமாய் கடந்திருப்பாள், புடவை நகைகள் வாங்கி தனது திருமண வாழ்க்கை குறித்து அவளது மனம் எவ்வளவு தூரம் புழகாங்கிதம் அடைந்திருக்கும். இது இவ்வாறிருக்க மணமகன் தரப்பினர் ஏற்கனவே இணங்கிக் கொண்டதை விட மேலதிகமாக சீதனப்பணம் கேட்கவே அவள் மனமுடந்து விட்டாள். பெற்றோரை இழந்த அவளுக்கு அவளது அக்கா தானே கடன் பட்டு சீதனம் தரச் சம்மதித்தாள். இப்போது அதற்கு அதிக சீதனம் கேட்டால் அக்கா என்ன பண்ணுவாள்? எனக்காக சிரமப்படுவாள், நான் அவளுக்கு பாரமாய் இருக்ககூடாது என்றுதானே அவள் தவறாக முடிவெடுத்து தனது உயிரைத்தானே பறித்திருக்கிறாள். அவள் தனது எதிர்கால வாழ்க்கை குறித்து என்னவெல்லாம் கனவு கண்டிருப்பாள், அவளின் வாழ்க்கையை பறித்தது எது? மேலதிகமாகக் கோரிய ஓரிரு இலட்சங்கள் மாத்திரமா? அல்லது எமது சமூகமா? எவ்வளவு தொகை என்பது கணக்கிலில்லை. என்ன என்பது தான் கதை..

ஒரு பெண்பிள்ளையைப் பெற்று அவளை வளர்த்துப் படிக்க வைப்பித்து, அவள் வயதுக்கு வந்தவேளை கவனிப்பு,



உலகுக்கு பண்பு, வரலாறு, வீரம், வாழ்வியல் என்பவற்றைப் போதித்த தமிழர் (யாழ்ப்பாணத்தார்) இப்போது பெண்ணடிமைத்தனம் , ஒடுக்குமுறைகளைப் போதிக்க விளைகிறார்களா? என எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறு இங்கு நடக்கும் கல்யாணச் சந்தையிலே சீதனப் பேரம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது.

பிரத்தியேக கவனிப்பு , எவ்வளவோ இடங்கள் ஏத்தி இறக்கி பெற்றோர் படிப்பித்து ஆளாக்கி விட்ட பிறகும் அவளை கரை சேர்க்க ஏன் இந்த சமூகம் தடையாக இருக்கிறது என புரியவில்லை. ஆண்களை வலிமையாய் படைத்தது பெண்ணைக் காக்கவே என்பது மறைந்து, இன்று பெண் கன்னி கழியவும் சீதன சந்தையில் தகப்பன் காசு கொடுக்க வேண்டிய செயலை எப்படி நாம் விபரிக்க?

ஆண் என்பவன் யார்? அவனது வலு என்ன? அவன் எவ்வாறு செயற்பட வேண்டும்? உழைத்து ஒரு பெண்ணுக்குச் சாப்பாடு போட்டு அவளின் வாழ்க்கையைப் பொறுப்பெடுக்காத எந்த ஒரு ஆணும் தன்னை ஒரு குடும்பத் தலைவன் என்று கூறிக்கொள்ள முடியுமா?

**மாப்பிள்ளைகளின் இன்றைய விலை நிலவரம்**

இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கல்யாணச் சந்தையில் மாப்பிள்ளைக்கான 'ரேட்'டைத் தெரிந்து கொள்வது பயனுடையது.

1. வேலை வெட்டியில்லாத மாப்பிள்ளை - 8 லட்சம் பணம், நகை 15பவுண், வீடு1
2. கூலி வேலை மாப்பிள்ளை - 10 லட்சம் பணம் , நகை 15 பவுண், வீடு1
3. தனியார் துறை சிறு சுய கடை மாப்பிள்ளை - 15 லட்சம் பணம் , நகை 20 பவுண், வீடு1, வீட்டுப் பாத்திரம்
4. தனியார் துறை மாப்பிள்ளை - 18-20 லட்சம் பணம் , நகை 25 பவுண், வீடு-1, மோட்டார் சைக்கிள்-1
5. அரச சிற்றூழியர் -18-20 லட்சம் பணம் , நகை 20/25 பவுண், வீடு1
6. அரச வேலை மாப்பிள்ளை - 30 லட்சம் பணம் , நகை -30 பவுண், வீடு -1, வளவு - 1, மோட்டார் சைக்கிள்/கார்
7. டாக்டர் மாப்பிள்ளை - 80-100 லட்சம் பணம் , நகை 30 பவுண், வீடு யாழ்ப்பாணத்தில் 1, கொழும்பில் வீடு -1, கார் -1
8. இஞ்சீனியர் மாப்பிள்ளை - 80-100 லட்சம் பணம் , நகை 30 பவுண், வீடு யாழ்ப்பாணத்தில்1, கொழும்பில் வீடு1, கார் 01.

என இன்னும் பட்டியல் நீளலாம், இது நகைச்சுவைத் தரவு என நீங்கள் மனதுக்குள் சிரித்தால் உங்களைப்போல முட்டாள் வேறு எவரும் இருக்க முடியாது. இவ்வாறு அமைகிறது தற்போதைய மாப்பிள்ளைச்சந்தை நிலவரம். இது இவ்வாறிருக்க பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணை படிப்பிக்கவே எல்லாச் சொத்தும் அழிந்து விட, திருமணத்துக்காக வெளிநாட்டு உறவுகளிடம் பல்லுக்காட்ட விளைகிறார்கள்; ஓடாய்த் தேய்கிறார்கள்.

ஆண்கள் பிள்ளைகளை பெறுவதில் மட்டும் தங்கள் ஆண்மைகளை நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மைச்சம்பவங்களை ஆதாரமாக தர முனைகிறேன்

**ஆதாரம் - 1**

எனது சக நண்பன் ஒருவன். அரச வேலை பார்க்கிறான், கை நிறையச் சம்பளம், அவனுக்கொரு தங்கை, அவளோ மருத்துவம் படிக்கிறாள், நாளை அவள் ஒரு மருத்துவர், அவனது பெற்றோர் பிள்ளைகளை ஆளாக்கவே சொத்துக்களை செலவளித்து விட்டனர். அதுதான் சரியும் கூட. எனினும் நண்பன் அவளுக்குச் சீதனம் சேர்க்கவே தன் வேலையைத் துறந்து விட்டு வெளிநாட்டுக்கு உழைக்க செல்ல ஆயத்தமாகிறான். நான் கண்டித்தேன். "நல்ல வேலை ஏன் விடுகிறாய்? உன் தங்கை டொக்ரர் தானே? பிறகென்ன குறை? விடு கவலையை" என்றேன். அவனது பதிலோ "இல்லை அவளுக்கு சீதனம் எதிர்பார்ப்பார்கள் வீடு வாங்க வேண்டும், நகை சேர்க்க வேண்டும், சீதனம் சேர்க்க வேண்டும் ஆகவே நான் வெளிநாடு சென்றாகத்தான் வேண்டும்" என்றான்.

டொக்ரர் பெண் அவள். அவளது அண்ணனே இவ்வளவு தூரம் கவலை கொள்கிறான் என்றால் பல தங்கைகள் அக்காக்களை கொண்ட தம்பிகள் அண்ணன்மார், தந்தைமார் எவ்வளவு சிந்திப்பார்கள். எவ்வளவு ஓடாய்த் தேய்ந்து உழைப்பார்கள், இவர்களின் குருதி யைத்தானே மாப்பிள்ளை சீதனமாக உறுஞ்சுகிறான், அவ்வாறானவர்கள் வெட்கம் கெட்டவர்கள் என்று எடை போடுங்கள்.

**ஆதாரம் 2**

பல தெரிந்த நண்பர்களும் தெரியாத நண்பர்களும் சீதன மோகத்துக்காக தாம் உயிராய்க் காதலித்த காதலிமாரை கைவிட்டு பிரிவதைப் பார்த்திருக்கிறேன்.

நீங்களும் இதுபோன்ற சம்பவங்களை அறிந்திருக்கலாம்.

இது எமது சமூகத்தின் கோளாறா? அல்லது சமூகத்தை கட்டியெழுப்புவர்களின் கோளாறா என்ற வினா தொக்கு நிற்கும் போது இது சமூகத்தை கட்டியெழுப்புபவர்களின் கோளாறே என உறுதியாக கூறலாம்.

ஏனெனில் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்காலத்தில் தமிழர் தம் பிரதேசத்தில் சாதிய ஒடுக்கு முறை அல்லது இவ்வாறான சீதன ஒடுக்குமுறைகளோ இல்லாது இருந்ததை எவராலும் மறுக்கமுடியாது. எனவே தற்போது சமூகத்தை வழி நடத்தும் ஆணிவேர்களில் பிழையிருக்கிறது.

இன்று சீதனக் கொடுமையால் உயிர் துறக்கும் பெண்களைவிட திருமணம் ஆனபின்பும் சீதனம் கேட்டு அடிவாங்கும் / அவஸ்தைப்படும் பெண்களே அதிகம்.

அதைவிடச் சீதனம் இல்லாததனால் திருமண வயதையும் தாண்டிய முதிர் கன்னிகள் இப்போதும் எமது சமூகத்திடையே இருப்பது எமது கண்களுக்குப் புலப்படவில்லையா? அல்லது அவர்கள் மீது இந்த சமூகம் பார்வைச் செலுத்தவில்லையா?

சீதனம் கேட்போரை அணுகிக் கேட்டால் உண்மை வெளிக்கும். சொல்வார்கள் "மகனுக்கு வாங்கினால் தானே மகளுக்கு கொடுக்கலாம்" ஆக வாங்கினால் கொடுக்கலாம் என்ற 'கொன்செப்றை' மாத்தி "வாங்கத் தேவையில்லை; ஆகவே கொடுக்கவும் தேவையில்லை" என்ற நிலைப்பாட்டை ஏன் எங்கள் சமூகம் இன்னமும் இனம்காணவில்லை?

அன்றும் சரி இன்றும் சரி ஆண்பிள்ளையைத் தான் முதலாவதாக பெற்றெடுத்துவிட்டு பின்னர் பெண் பிள்ளை பெற எல்லாருமே ஆசைப்படுகிறார்கள். தொடர்ச்சியாக பெண்பிள்ளைகளை பெற்றவர்கள்கூட எங்கே உழைக்கவும் சீதனம் கொடுக்கவும் எனக்கொரு ஆண்மகன் மீட்பனாக வேண்டும் என்று வேண்டுதல் செய்து ஆண் மக்களை அடைந்தவர்களும் உண்டு.

இந்தச் சமூகம் ஒருவனுக்கொருத்தி என்ற வரைமுறையை வைத்ததன் அர்த்தம் அவளோடு அளவான சொத்தோடு இன்பமாய் வாழ்தல் என்ற எடுகோளை முன்னிறுத்தித்தான்.


இன்று பல பெற்றோர்கள் எங்கள் மகள் யாரையாவது காதலித்தால் ஒரு மாதிரி சீதனம் இல்லாமல் முடித்துக் கொடுத்திடலாம் என்று எண்ணத்தக்க நிலை. ஆனால் வெளியே யாரும் காட்டிக் கொள்ளமாட்டார்கள்.

எமது கலாசாரம் பிழையென நான் வாதிடவில்லை, எமது மரபுகள் தவறென நான் வாதிடவில்லை, எமது இனத்தின் மரபுகள் ஏதோ நன்மைக்காகவே உருவாக்கப்பட்டன. சீதனம் என்ற பொருளுடமையும் நன்மைகாகவே உருவாக்கப்பட்டது. ஆனால் எமது இனத்தின் கூர்ப்பு வழி வந்தவர்கள் அதனை விகாரத்துக்கு இட்டுச் சென்றதே இன்று விவகாரமாக மாறியுள்ளது. ஆண் என்பவன் தன்னை நம்பி கரம்பிடிக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கையை தனது உழைப்பில் நிறைவேற்றிவாழவைக்கவேண்டும். இன்றைய எமது தமிழ்ப் பெண்கள் ஆண்களை விட அக்கறையாக, திறமையாகப் படிக்கிறார்கள், நல்ல வேலை செய்கிறார்கள், கை நிறையச் சம்பாதிக்கிறார்கள் ஆண்களைவிட பெண்கள் அதிவேகமாக கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்பட்டுவிட்டார்கள், அவர்களே அவர்களுக்கான சீதனத்தை சேர்த்துக்கொள்கிறார்கள், லோன் போட்டு வீடு கட்டி சீதனம் கொடுக்கிறார்கள், இதில் பாரதி கண்ட புதுமை பெண்ணை இங்கே காண்கிறோம். காலக்கொடுமை என்னவென்றால் இவ்வாறான் பெண்களிடமும் அதிக சீதனம் கறக்க எமது மாப்பிள்ளைமார் தரப்பு முயல்வதுதான்.


பெண்களின் அசுர வேக வளர்ச்சியால் இன்னும் சில தசாப்தங்களில் பெண்களுக்கு சீதனம் கொடுத்து ஆண்கள் திருமணம் செய்யும் காலம் வரும் என்பதில் வியப்பில்லை.. அது தான் நேர்த்தியும் கூட.

நான் சீதனம் வாங்குவது தவறு என வாதிடவரவில்லை.

"தந்தால் வாங்கு, கேட்டு வாங்காதே"



> சீதனம் கேட்போரை அணுகிக் கேட்டால் உண்மை வெளிக்கும் சொல்வார்கள் "மகனுக்கு வாங்கினால் தானே மகளுக்கு கொடுக்கலாம்" ஆக வாங்கினால் கொடுக்கலாம் என்ற 'கொன்செப்றை' மாத்தி "வாங்கத் தேவையில்லை ஆகவே கொடுக்கவும் தேவையில்லை" என்ற நிலைப் பாட்டை ஏன் எங்கள் சமூகம் இன்னமும் இனம் காணவில்லை?



## ஆசிரியருக்கான கடிதம்

### கொந்தளிப்போம்

ஒரு இனம், தான் அடைந்த துன்பத்தை பிறிதொரு இனம் உணரும்போது எதுவும் பேசாது வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டுப்போனால் அதைவிடத் துரோகம் வேறொன்றும் இல்லை. அந்த வகையில் பௌத்த நாடான மியன்மாரில் சிறுபான்மையினரான ரொஹின்ய முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட போராட்டம் மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்று. சிறுபான்மையான ரொஹிங்யர்கள் அனுதினமும் அரச படைகளால் வதைக்கப்படுகின்றனர். இதை இனச் சுத்திகரிப்பு என்று கோடிட்டுக் காட்டுகிறது ஐக்கிய நாடுகள் சபை. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்த முன்வந்த போதிலும் அதற்கு மியன்மார் அரசு இடம்கொடுக்கவில்லை. தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு பன்னாட்டு அரங்கின் விசாரணை தேவையில்லை என்று இலங்கை அரசு தெரிவித்ததைத்தான் மியன்மாரும் சொல்லியுள்ளது. வேறு மொழி பேசும் மக்கள், வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் என்று தெரிவித்துவிட்டு நாம் மௌனித்தோமானால் எமது இனம் அடைந்த துன்பத்தை பிறிதொரு இனம் அடையும்போது கண்டும் காணாமலும் விட்ட குற்றம் எம்மையும் சாரும். எனவே மியன்மார் அரசுக்கு எதிரான் போராட்டங்கள் வடக்குப் பகுதியில் இன்னும் அதிகம் அதிகமாக இடம்பெற வேண்டும். அவ்வாறு நாம் நடத்தும் போராட்டங்கள் மியன்மார் மக்களுக்கு நாம் தெரிவிக்கும் ஆதரவாக மட்டுமல்லாமல் ஈழத்து இனப்படுகொலைகளுக்கும் நாம் தெரிவிக்கும் எதிர்ப்பையும் நிச்சயம் பறைசாற்றும்.

*மயனல்*

# வரிச் சலுகை வழங்குவதற்கான அதிகாரம் இறைவரிச் சட்டத்தின் மூலம் நீக்கம்

## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தகவல்

வரிச் சலுகையை வழங்குவதற்கு அமைச்சர்களுக்கு காணப்பட்ட அதிகாரத்தை புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் நீக்கியுள்ள தகவலை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செய்திப் பணிப்பாளர் எம்.ஏ.ஹசன் வெளிப்படுத்தியுள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அந்த அறிக்கை மேலும் பல்வேறுபட்ட தகவல்களை தெரிவித்துள்ளது. குறிப்பாக,

> “ தொழில் முயற்சியாளர்கள், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான வரிச்சலுகையுடன் கூடிய, புதிய எட்டு கடன் திட்டங்கள் இம்மாதம் தொடக்கம் அரச மற்றும் தனியார் வங்கிகளினூடாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

“தற்போதைய கூட்டு அரசு இதுவரைகாலமும் ஒதுக்கப்பட்டிருந்த உள்நாட்டு முதலீட்டாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும்முதலீட்டுக்கு ஏற்றவிதமான வரிச்சலுகையை வழங்குவதற்கும், வரிச்சலுகைக் காலத்தை அறிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. வரிச்சலுகை காலத்தை பெற்றுக் கொள்வதற்கு அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுடைய சகபாடிகள் பின்னால் செல்ல வேண்டியிருந்த காலம் புதிய சட்டத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் வரிச்சலுகை தொடர்பில் புதிய சட்டத்தில் முறையான பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிச்சலுகை குறித்து எந்தவொரு முதலீட்டாளரும் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும்.

இதுவரை காலமும் தமது அபிப்பிராயத்துக்கு அமைய முறையற்ற வகையில் வரிச்சலுகை வழங்குவதற்கு அமைச்சர்கள், திணைக்கள மற்றும் நிறுவனத் தலைவர்கள் கொண்டிருந்த அதிகாரம் புதிய உள்நாட்டு இறைவரி சட்டம் நிறை வேற்றப்பட்டதைத் தொடர்ந்து நீக்கம் பெற்றுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதேபோன்று வரிச்சலுகை மற்றும் வரிச்சலுகை காலத்தை வழங்குவதற்கு நாட்டின் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரமும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டமையால் நீக்கப்பட்டுள்ளது.

ஆறு இலட்சம் ரூபா வருடாந்த வருமானம் பெறும் குடும்ப உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் மத வழிபாட்டுத்தலங்கள் புதிய சட்டத்தினூடாக வரி அறவீட்டில் உள்வாங்கப்படவுள்ளதான கருத்தில் எந்தவிதமான உண்மையும் இல்லை. கடந்த ஆட்சியின் இந்தச் செயற்பாடுகள் காரணமாக மொத்த சனத்தொகையில் 10 வீதமானவர்கள் பொருளாதாரத்தின் 45 வீதத்தை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டது. திரைமறைவில் வரிச்சலுகை வழங்கும் கொள்கை பின்பற்றப்பட்டது." போன்ற விடயங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ளது. (ஓ)

## மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விவரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன**

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் நிர்மாணம் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம்,செல்லுபடியாகும் காலம் | மீளளிக் கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D07/ INF/211 | மதகு (Box Culvert)நிர்மாணமும்.வீதி புனரமைத்தலும், பரந்தன் | 3.351மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or C7 Highway | ரூபா 34,000.00 வங்கிப்பிணை 18/12/2017வரை | ரூபா 2,000.00 |
| 2 | KN/DPS/D11/E du/RGTM/329 | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை வகுப்பறை கட்டட நிர்மாணம் | 2.166மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or C7 building | ரூபா22,000.00 வங்கிப்பிணை 18/12/2017வரை | ரூபா 2.000.00 |
| 3 | KN/DMC/MITI/ 2017/28(2) | கொடுக்குளாய் வீதி புனரமைத்தலும், மதகு (Box Culvert) நிர்மாணமும்.இயக்கச்சி | 8.01மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா81,000.00 வங்கிப்பிணை 01/01/2018வரை | ரூபா 2,000.00 |
| 4 | KN/DPS/D14/R M/439-1 | கரைச்சிவடக்கு ப.நோ.கூ.சங்க நவீன நெல் குற்றும் ஆலைக்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் தொடர்புடைய கட்டுமான வேலைகளும்<br>a) அரிசியாலை கட்டட நிர்மாணமும் புதியநெல் காயவிடும் தளம் அமைத்தலும்<br>b) நெல் குற்றும் ஆலைக்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் | 6.7மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக)<br>- | C7 building<br>- | ரூபா92,000.00வங்கிப்பிணை 01/01/2018வரை | ரூபா 2,000.00 |
| 5 | KN/DPS/D14/R M/439-2 | கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியத்தின் அரிசியாலையை நவீனமயப்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கலும் பொருத்துதலும் தொடர்புடைய கட்டுமானவேலைகளும் | - | - | ரூபா80,000.00 வங்கிப் பிணை 01/01/2018வரை | ரூபா 2,000.00 |

1. **பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.**
   - I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.
   - II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைபொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்கவேண்டும்.
   - III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்திற்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
   - IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்ககூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சிமாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 04.09.2017ஆம் திகதியிலிருந்து 15.09.2017ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்குமுத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி. பிரதி) தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் அதுதொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள்யாவும் தலைவர். திணைக்கள பெறுகைக் குழு. மாவட்டச் செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 18.09.2017 ஆம் திகதி பிற்பகல் 02.30மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செல வீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. *கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 13.09.2017 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக* மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் திட்டங்கள்

*மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு*



மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்வதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில் இருக்கிறது என்ற தகவல்களை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் மற்றும் நிதியியல் துறை கொள்கைகள் உள்ளடங்கியதான “2017 வழிகாட்டல்” திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கியநாணயக்கொள்கை ஆலோசனைக் குழுவொன்று மீண்டும் அறிமுகம் பெறவுள்ளது. 2017 ஆம் ஆண்டு பன்னாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளை மேற்கொள்ளவும், அவற்றை ஊக்குவிக்கவும் எதிர்பார்த்துள்ளதுடன் அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

மேலும் இந்த வருடத்தில் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேணவும், 5.5 தொடக்கம் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் தீர்மானித்துள்ளனர். (ஓ)

# கிராமியப் பொருளாதார அபிவிருத்தி குறித்துத் தீர்மானம்

## பன்னாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை

“கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்திப் பாதையில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி மேம்படுத்தும் செயற்திட்டமொன்றினை அரசு ஆரம்பித்துள்ளது. அதன்வழியே நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றகரமாக்கி மாறுதலற்ற பேண்தகுதன்மையை ஏற்படுத்தவுள்ளோம்” என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசதலைவரின் ஆலோசனையோடு நாட்டை அபிவிருத்தி பாதையில் பயணிக்கச் செய்வது குறித்தும் அரசு புதிய உத்வேகத்தோடு செயலாற்றி வருகிறது என்ற தகவலும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


> “ பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் சந்தைக்கள் இலங்கையில் அமையவுள்ளன. இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகள் வழங்கும் அதிக நிதிப்பங்களிப்புடன் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

*இதுகுறித்து மேலும் கருத்து*ரைத்துள்ள அவர்,

“தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து அதனூடாக பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசு அடிப்படையான அடித்தளங்களை இட்டுள்ளது. தேசிய கொள்கையின் அடிப்படையில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது” - என்றார். (ஓ)

# யாழ். குடாவின் நன்னீர் நிலைகளை மேம்படுத்தல்

மருத்துவர் சி. யமுனாநந்தா




யாழ்.குடாநாடு சுமார் ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டமைந்துள்ளது. இங்கு வருடாந்த மழைவீழ்ச்சி சராசரியாக ஆயிரத்து 200 மில்லி மீற்றராகக் காணப்படுகிறது. இதில் 90 வீதமானவை வடகிழக்கு பருவமழை காரணமாக கிடைக்கிறது.

யாழ்ப்பாணத்தவர்கள் நிலக்கீழ் சுண்ணக் கற்பாறைகளில் தேங்கியுள்ள நீரை கிணறு மூலம் பெற்று பயன்படுத்துகின்றனர். குடாநாட்டைப் பொறுத்தவரையிலே அண்ணளவாக ஒரு இலட்சம் கிணறுகள் உள்ளன. சூழவுள்ள எந்தவொரு பகுதியையும் எடுத்து நோக்கினும் கடலில் இருந்து 15 கிலோ மீற்றர்களை விடவும் குறைவான தூரத்தினைக் கொண்டுள்ளன. இவற்றுள் 35 வீதமான கிணறுகள் உவர்த்தன்மையைக் கொண்டுள்ளன. கிணறுகளின் உவர்த்தன்மை கடந்த காலங்களை விடவும் அதிகரித்துக் காணப்படுகிறது. அண்மையில் 4 ஆயிரத்து 500 ஹெக்டேயர் பரப்பளவுடைய விவசாய நிலங்கள் பயிரிட முடியாத தரிசு நிலங்களாக மாற்றங்கண்டுள்ளன.

**சூழலியல் முகாமைத்துவம்**

இந்த நிலையிலே சிறந்த புவியியல் சூழலியல் முகாமைத்துவம் மூலம் யாழ்.குடாவின் நன்னீர் நிலையினை மேம்படுத்த முடியும். இதற்கான முக்கிய செயற்றிட்டங்கள் ஐந்து நிலைகளாக அமையும்.

1. யாழ் குடாவின் நீரேரிகளில் (வல்லை, நாவற்குழி, சுண்டிக்குளம் பகுதி) கடல் நீர் உட்புகுதலைத் தடுத்தல்.
2. குடாநாட்டின் நீரேரிகளை ஆழப்படுத்தலும், மழைநீரினைத் தேங்கக்கூடிய தரைத்தன்மையினை ஏற்படுத்தலும்.
3. குடாநாட்டின் நீரேரியிலும், தரையிலும் மழைநீரைத் தேக்கி வைத்தல்.
4. மக்களுக்குத் தேவையான நீரை விநியோகிக்க பொதுவான நீர் விநியோக நடைமுறையைப் பின்பற்றுதல்.
5. நிலக்கீழ் நீர் மாசடைதலைத் தடுத்தலும், பொதுவான கழிவகற்றல் பொறிமுறைகளை மேற்கொள்ளலும்.

**நீரேரிகளை நன்னீராக்குதல்**

**தொண்டமானாறு**

ஆழியவளைப் பிரதேசத்தில் மாரிகாலத்தில் பொழியும் மழைநீர் மருதங்கேணி, செம்பியன்பற்று, நாகர் கோவில், அம்பன், குடத்தனை வழியாகப் பாய்ந்தோடி பருத்தித்துறை, கொடிகாமம் வீதியை இடைமறித்த பாலம் வழியாக மான்டான் வல்லை ஊடாகக் கடலில் கலக்கிறது. இதில் கடலில் கலக்கும் ஓடையானது தொண்டைமான் என்னும் தமிழ் மன்னனால் வட கிழக்குப் பருவ மழைக்காலத்தில் மீன்பிடி வள்ளங்கள் பெரும் கடற்காற்றுக்கு அடிபட்டுச் செல்லாது இருப்பதற்காக வெட்டப்பட்ட நீரோடையாகும். இதனையே தொண்டைமானாறு என பெயர் வழங்கினர். தற்போதைய பௌதீக முன்னேற்றங்களின் அமைவில் இக்கடல் வழிப் பாதையை மூடுவதன் மூலமே மழைநீரைப் பேண முடியும்.

**உப்பாறு**

கப்புது மேட்டுப் பிரதேசத்தில் ஏற்படும் மழை வெள்ளம் மட்டுவில் புத்தூர் வெளியூடாகப் பயணித்து வண்ணாத்திப்பாலம் ஊடாகப் பாய்கிறது. பின்பு அங்கிருந்து புத்தூர், நீர்வேலி, கோப்பாய் வழியாக நகர்ந்து கைதடி, கோப்பாய் பாலத்தின் ஊடாகச் சென்று கைதடி, நாவற்குழிப் பகுதியில் கடலுடன் கலக்கிறது. செம்மணியூடாகச் செல்லும் இந்த ஆற்றுப் படுக்கையை உப்பாறு என அழைப்பர்.





Figure 1:3 Floating pattern of fresh water lens in Jaffna

**ஆனையிறவு உப்பேரி**

ஆனையிறவில் கண்டிவீதிக்கு கிழக்கே உள்ள ஏரிக்குள் தென்மேற்கு பருவமழையின்போது மேற்குப் புறமாக கடல்நீர் உட்புகுந்துகொள்கிறது. கிழக்குப்புறமாக சுண்டிக்குளம் பகுதியில் கடல்நீர் உட்புகும் தன்மை காணப்படுகிறது. இவை தடுக்கப்பட்டால் மழைகாலத்தில் அதிகளவு நன்னீரை குறிப்பாக, வன்னியில் இரணைமடுக்குளத்தின் கலிங்கு திறக்கப்படும்போது சேகரிக்க முடியும். இந்த நன்னீரினை முள்ளியான் கால்வாய்மூலம் ஆழியவளைக்கு இணைப்பதால் பாரிய நன்னீர் நிலையினை உருவாக்கிவிடலாம்.

தொண்டைமானாறு தடுப்பணை, அரியாலைத் தடுப்பணை, முள்ளியான் இணைப்பு, சுண்டிக்குளம் தடுப்பணை மூலம் பாரிய மழைநீர் சேமிப்பை மேற்கொள்ளலாம். இதன்போது நீரேரியினைப் பல படிகளில் ஆழப்படுத்தி அகழிகள் அமைத்து நீரைத் தேக்கி வைக்கக்கூடிய மண்ணமைப்பை ஏற்படுத்தல் வேண்டும். இதனை அரியாலை, செம்மணி, கோப்பாய், அச்சுவேலி, கைதடி, மண்டான், மட்டுவில் பகுதிகளில் மேற்கொள்ளலாம்.

யாழ். குடாநாட்டில் உள்ள வடமராட்சி நீரேரி மற்றும் உப்பாறு நீரேரி என்பன யாழ் குடாநாட்டின் 10 வீதமான நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளன. யாழ் குடாநாட்டின் மழை நீரில் 50 வீதமான பகுதி இந்த நீரோரிகளூடாக கடலுடன் சேர்கிறது. எனவே இந்த ஏரிகளை முற்றாக நன்னீராக மாற்றுதல் என்பது மிக அவசியமான செயற்றிட்டமாக அமையும். இதற்குரிய முதற் கருதுகோளை இற்றைக்கு 350 வருடங்களுக்கு முன் இலங்கையின் ஆளுநருக்கு 1665 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முன்வைத்தவர் Captain Van Reede ஆவர். இவர் தொண்டமானாறிலும், நாவற்குழியிலும் கடலைத் தடுத்து அணை அமைப்பதனால் பெருமளவு நிலம் நன்னீராகும் என்று தெரிவித்தார்.

**வரலாற்றில் நன்னீர் நிலையின் மேம்பாடு**

1879 ஆம் ஆண்டு வடமாகாண அரச அதிபர் 'வுwyneham' அணைகட்டுவதற்கு முயற்சித்த போது 1883 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் Karakato எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட கடல்கோளினால் யாழ் குடா நாட்டிலும் கடல் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் அரச அதிபர் கடலை அணையிடும் திட்டத்தைக் கைவிட்டார்.

1930 ஆம் ஆண்டு தொடக்கம் 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணப் பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் 'Webb' தொண்டமானாற்றிலும், அரியாலையிலும் தடுப்பு அணைத்திட்டத்தை மேற்கொண்டார். ஆனால் 2 ஆம் உலகப் போர் சூழ்நிலையால் இந்தத் திட்டமும் பிற்போடப்பட்டது. 1947 ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு பணிகள் நிறைவு பெற்றது. இவை மரத்தினால் செய்யப்பட்ட அணைத்தடுப்பு என்பதனால் சேதமடைந்து கடல்நீர் உட்புகுந்து செயலிழந்து போனது.

**வேண்டப்படும் பணிகள்**

ஆனையிறவு வீதி அமைப்புப் பாதை மேற்குக் கரையில் கடல்நீர் ஆனையிறவு ஏரியினுள் செல்வதனைத் தடுக்கிறது. சுண்டிக்குளத்தில் கட்டப்பட்ட தடுப்பணையும், மேலதிக நீர் வெளியேற்றும் பொறிமுறையும் பாதிக்கப்பட்டமையால் தற்போது கடல்நீர் உட்புகுந்து கொள்கிறது. இவை மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். கடல்நீர் தடுப்பு அணைகள் இரண்டு அடுக்குகளாக அமைப்பதன் மூலம் வறட்சியான காலத்தில் கடல்நீர் தரையினுள் செல்வதைத் தடுக்கலாம். இதனால் ஆனையிறவு ஏரியில் நன்னீரைப் பேண முடியும்.

ஆனையிறவு நன்னீர் ஏரியை முள்ளியான் கால்வாய் மூலம் வடமராட்சியின் தென்பகுதியுடன் இணைக்கும் செயற்றிட்டமும்; முழுமையடையாது உள்ளது. இதனை முழுமைப்படுத்த வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

அடுத்து தொண்டமானாறு தடுப்பணையையும், நாவற்குழி தடுப்பணையையும் திருத்தியமைக்கப்பட வேண்டிய் தேவையைக் கொண்டுள்ளன. இவற்றுக்கும் இரட்டை அடுக்கு தடுப்பணைகள் அவசியம். உப்பாற்று நீரேரியையும், வடமராட்சி நீர் ஏரியையும் இணைப்பதன் மூலம் ஆனையிறவு முதல் அரியாலை வரை மிகப் பரந்த அதாவது, 170 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய நன்னீர் ஏரியினை உருவாக்க முடியும்.

இதன்மூலம் யாழ் குடாநாட்டின் நிலக்கீழ் நீரைப் பேண முடிவதுடன் நீர்த்தேவையினையும் நிறைவாகப் பூர்த்தி செய்யக்கூடிய சூழல் ஏற்படும். இதேபோன்று நீர்சேமிப்பை வழுக்கையாறு வடிநிலத்திலும், கல்லுண்டாய் வெளிப்பகுதியிலும் மேற்கொள்ளலாம். நன்னீரை வளம்படுத்தும் ஐந்து செயற்றிட்டங்களை தீவுப்பகுதிகளிலும் சிறப்பாக மேற்கொள்ளலாம்.

இவ்வாறு மழைநீரை யாழ் குடாநாட்டு ஏரியில் சேமிப்பதன் ஊடாக யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீர் உவர்த்தன்மையாதலைத் தடுக்கலாம். அடுத்து தரையின்கீழ் உள்ள சுண்ணாம்புப் பாறைகளுக்கு இடையிலான நீர் வில்லைகளின் அளவும் அதிகரிக்கும்.

**வெள்ளப்பெருக்குகளுக்கு கட்டுப்பாடும், மழைநீரைச் சேமித்தலும்**

தற்போது தரையில் கட்டடம், வீதி அமைத்தல் செயற்பாடுகளால் சாதாரணமாக நிலத்தினுள் சேகரிக்கப்படும் நீர் வடிந்தோடி வெள்ள நிலையும், கடலுடன் சேரும் தன்மையும் அதிகரித்துள்ளது. நவீன இயந்திரங்களின் உதவியுடன் பெரிய வடிகால்கள் அமைக்கப்பட்டு தாழ்நிலங்களில் வெள்ளம் சேரல் தடுக்கப்படுகிறது. பல வயல் நிலங்கள் நிரப்பப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இதனால் மழைநீரைச் சேகரிக்கும் தன்மை குறைவடைந்துள்ளது. தாழ்வான பிரதேசங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகளை அண்மித்தே நல்ல நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. உதாரணமாக கொக்குவில், நந்தாவில் பகுதியில் உள்ள வெள்ளம் அயல் கிராமங்களுக்கான நிலத்தடி நீராக உதவி புரிகிறது. எனவே தரையில் வெள்ள நீர் விரைவாக வடிந்தோடி கடலை அடைவதைத் தடுக்க வேண்டும்.

> “யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் உவராக மாறும் தன்மையும் இதன் தாக்கமும் பிரதேச ரீதியில் வேறுபட்ட ஆழத்தில் அமைந்துள்ளன. கட்டுப்பாடின்றிய குழாய்க்கிணறுகளின் உருவாக்கமும் உவர்த்தன்மை அதிகப்படுதலுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளன. இது குறித்து கரிசனை கொள்ள வேண்டும். சிந்தித்துத் திட்டமிடலோடு செயலாற்ற வேண்டும்.

வலிகாமத்தின் பெரும்பாலான நிலக்கீழ்நீர்திருநெல்வேலி, சங்குவேலி, நீர்வேலி ஆகிய பிரதேசங்களை இணைக்கும் முக்கோணப்பகுதியில் சுண்ணாம்புப் பாறைகளுக்கு இடையே வில்லை வடிவில் காணப்படுகிறது. அதாவது மழை நீரானது இந்த பிரதேசங்களில் மண்ணுக்குள்நன்னீர்ப்படையை உருவாக்குகிறது. இது சுண்ணாம்புக் கற்பாறைகளின் மேல் அடர்த்தியான கடல் நீருக்கு மேலாக வெளிப்புறம் குவிந்த வில்லைகளின் வடிவ அமைப்பில் நன்னீர் படலமாகக் காணப்படுகிறது. நடுப்பகுதியில் இவ்வில்லைகள் அடர்த்தியாக இருக்கும். கரைப் பகுதிகளில் மெல்லியதாகக் காணப்படும்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப் பகுதிகளின் வெவ்வேறான வில்லைகள் காணப்படுகின்றன. இவ்வில்லைகள் நன்னீரை மட்டுமே குறிப்பிட்ட ஆழத்துக்குக் கொண்டுள்ளன. இவ்வில்லைகளின் தாழ்ந்த பகுதிகளில் நன்னீர் உவர்நீராக மாறும் மாற்றங்கள் நிகழும் பகுதியாக அமைவு பெற்றுள்ளன.

ஆக, யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் உவராக மாறும் தன்மையும் இதன் தாக்கமும் பிரதேசரீதியில் வேறுபட்ட ஆழத்தில் அமைந்துள்ளன. கட்டுப்பாடின்றிய குழாய்க்கிணறுகளின் உருவாக்கமும் உவர்த்தன்மை அதிகப்படுதலுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளன. இது குறித்து கரிசனை கொள்ள வேண்டும். சிந்தித்துத் திட்டமிடலோடு செயலாற்ற வேண்டும்.

வறட்சியான காலத்திலும் அதிகரித்த மனிதப் பாவனையும் நன்னீர் வில்லையின் அடர்த்தியை குறைவடையச் செய்கிறது. கடல்நீர் வில்லைகளில் இடையீட்டின் விளைவு கொண்டு மேலெழும் சாத்தியம் அதிகமாக காணப்படுகிறது. யாழ் குடாநாட்டின் நன்னீர் வளத்தை அதிகரிக்க வில்லைகளில் சேரும் நன்னீர் அளவை அதிகரிக்க வேண்டும். வில்லைகளின் தாழ்ந்த பகுதிகள் உவர்நீராதலைக் குறைக்க வேண்டும். ஆழ்துளையிடல் அதாவது குழாய்க்கிணறு அமைப்பதையும், அதற்கான செயன்முறைகளையும் தடை செய்தல் வேண்டும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# குருப்பெயர்ச்சி பலன்கள்



## தனுசு

பொறுமையால் புகழின் உச்சிக்குச் செல்பவர்களே!
உங்கள் ராசிக்கு லாப ஸ்தானமாகிய 11ஆம் வீட்டில் குரு பகவான் 2.9.2017 முதல் 2.10.2018 வரை அமர்வதால் கடின மான வேலைகளையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளின் உயர் கல்வி, உத்தியோகம் தொடர்பான முயற்சிகள் வெற்றி பெறும். அரசாங்கக் காரியங்கள் சாதகமாக முடியும். வழக்குகள் சாதகமாகும்.

**குரு பகவானின் பார்வை:** குரு பகவான் தனது 5ஆம் பார்வையால் ராசிக்கு 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் நினைத்தது நிறைவேறும். மனதில் தைரியம் கூடும். இளைய சகோதர வகையில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். குரு பகவான் தனது 7ஆம் பார்வையால் ராசிக்கு 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். எதிர்பார்த்தபணம்கைக்குவரும். குலதெய்வப்பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

குரு பகவான் தனது 9ஆம் பார்வையால் ராசிக்கு 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் உங்களுடைய தனித் திறமை வெளிப்படும். வாழ்க்கைத்துணைக்கு புது வேலை அமையும். செல்வாக்குக் கூடும். பிரபலங்கள் நண்பர்கள் ஆவார்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். தொழில் தொடங்கும் வாய்ப்பு உண்டாகும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்கள் ராசிக்கு 5 மற்றும் 12ஆம் இடங்களுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில் குரு பகவான் 2.9.2017 முதல் 5.10.2017 வரை செல்வதால் மாறுபட்ட சிந்த னைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிப்புக் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. 6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் உங்களின் புகழ் உயரும். பிதுர் வழி சொத்து கைக்கு வரும். அரசால் அனுகூலம் உண்டு. நண்பர்களால் ஆதாய மடைவீர்கள். உங்களின் ராசிநாதனும் சுகாதிபதியுமான குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை பயணிப்பதால் உங்களுடைய ஆளுமைத் திறன் அதிகரிக்கும். ஏமாந்த தொகை வரும். தாய்வழி உறவினர்களால் திடீர் நன்மைகள் உண்டாகும்.

**குரு பகவானின் அதிகார வக்கிர சஞ்சாரம்:** 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிகார வக்கிரமாக உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் குரு பகவான் சென்று மறைவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். வேலைச் சுமையால் அழுத்தம் அதிகரிக்கும். கடன் பிரச்னை களால் கலக்கம் உண்டாகும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய சாரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் விமர்சனங்களைப் பொறுமையாக ஏற்றுக்கொள்ளவும். வீடு மாற வேண்டிய நிலை ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வியாபாரம் மேம்படும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். மாணவர்களே! உயர்கல்வியில் விரும்பிய பாடப்பிரிவில் இடம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பும் அமையும். கலைத்துறையினரே! இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

மொத்தத்தில் இந்த குரு மாற்றம் தோல்விகளால் துவண்டு கிடந்த உங்களைச் சிலிர்த்தெழச் செய்வதுடன், வசதி வாய்ப்புகளையும் அள்ளித் தருவதாக அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 04.09.2017

1882 - எடிசனால் முதலாவது வர்த்தக ரீதியிலான மின்சக்தி ஆலை முடுக்கிவிடப்பட்டது. இதுவே மின்சார யுகத்தின் தொடக்க நாளாகக் கருதப்படுகிறது.
1923 - யூஎஸ்எஸ் செனன்டோ வானூர்தி தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.
1951- ஜப்பான் சமாதான ஒப்பந்த மாநாடு சான் பிரான்சிஸ்கோ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.
1970 - தென்னமரிக்க நாடான சிலியின் அதிபராக சல்வடோர் அலென்ட் தெரிவானார்.
1975 - அரபு - இஸ்ரேல் முரண்பாடு தொடர்பாக சீனாய் இடைக்கால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
2002 - புலிகள் மீதான தடை நள்ளிரவு முதல் நீக்கம் என அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிப்பு.
2003 - தமிழ்ச் செல்வன் குழுவினர் சுவிற்சர்லாந்திலிருந்து கிளிநொச்சிக்குத் திரும்பினர்.
2016 - மலேசியாவைவிட்டு வெளியேறுமாறு மகிந்தவுக்கு எதிராகப் போராட்டம்.



1971 – அலஸ்கா வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 1866 அலஸ்காவில் வீழ்ந்து விபத்துள்ளாகி யதில், அதிலிருந்த 111 பேரும் உயிரிழந்தனர்

## நாளை
**05.09.2017**
செவ்வாய்க்கிழமை
**ஆவணி - 20**

திதி: சதுர்த்தசி பி.ப.12.56 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப 01.28 வரை
சுபநேரம்: 10.35–12.05 வரை
ராகுகாலம்: 03.05–04.35 வரை

## பத்தி எழுத்து

### ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்கு இந்தியா பின்னடிப்பது நியாயமா?

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தாமதமடைவது தொடர்பாக இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சரிடம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

புதிய அரசைமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென தமிழர்கள் நம்புகின்றனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இது தொடர்பாகத் தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார். அண்மையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும் அவர் சந்தித்துப் புதிய அரசமைப்புத் தொடர்பாக உரையாடியுள்ளார். ஆனால் மகிந்த சம்பந்தனுக்கு எதிர்மறையான பதிலையே அளித்துள்ளார். இது ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்றுதான். கடந்த அரச தலைவரைத் தெரிவு செய்தவதற்கான தேர்தலின்போது சம்பந்தனின் ஆளுமையை ஏற்றுக்கொண்ட தமிழ்மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது ஆதரவை வழங்கி அவரை அரச தலைவர் பதவியில் அமர்த்தினர் மகிந்த இதை எளிதில் மறந்திருக்க மாட்டார்.

இந்த நிலையில் சுஷ்மா இலங்கைக்கு வருகை தந்துள்ளார் வழக்கம் போன்று இந்தியா தமிழர்களைக் கைவிட்டுவிடாது என்று கூறியுள்ளார். இந்தியத் தலைவர்களின் இவ்வாறான உறுதிமொழிகளைக் கேட்டு தமிழர்களின் காதுகள் புளித்துப் போய்விட்டன. இந்தியா எமக்கு ஒருபோதுமே உதவமாட்டாது என்ற நிலைப்பாடு அவர்களிடம் உறுதியாகக் குடிகொண்டு விட்டது.

புதிய அரசமைப்பின் உருவாக்கத்தில் இந்தியா இலங்கை அரசுக்கு எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்காது என்பதை உறுதியாக நம்பலாம்.

இறுதிப் போர் காரணமாக ஈழத்தமிழர்கள் அனுபவித்த துன்பங்களுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூற வேண்டும். போரின் பின்னராவது தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இந்தியா தீர்வைப் பெற்றுத் தந்திருக்க வேண்டும். ஆனால் தவறிவிட்டது. இப்போதாவது தூய்மையான மனத்துடன் இந்தியா செயற்பட்டு ஈழத்தமிழர்களுக்கு உதவ முன்வரவேண்டும். புதிய அரசமைப்பின் உருவாக்கம் அதற்கொரு நல்ல சந்தர்ப்பத்தை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. இதை இந்தியா பயன்படுத்திக் கொள்ளுமாயின் ஈழத் தமிழர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

தெற்காசியப் பிராந்தியத்தின் வல்லரசாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் இந்தியாவை மிகச்சிறிய நாடான இலங்கை பல்வேறு தடவைகள் ஏமாற்றியுள்ளது. சீனா எம்மைக் காப்பாற்றிவிடுமென்ற எண்ணம் இலங்கையிடம் உள்ளதால் அந்த நாடு இந்தியாவை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. இது இந்தியாவுக்கும் தெரியும். இந்தியாவும் சீனாவும் பரம எதிரிகளாக இருப்பதால் இலங்கை விடயத்தில் இந்தியா தயங்குவதாகத் தெரிகின்றது.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு உதவுவதில் இந்தியா அச்சப்படுவதற்கான காரணம்தான் புரியவில்லை.

**பொண்டாட்டி கூட சண்டை வந்தா முதல்ல செருப்பைத் தேடுங்க....**



**கிடைச்சதும் எடுத்து மாட்டிக்கொண்டு வெளிய ஓடிடுங்க....**

**வாழ்க்கைல எந்தப் பக்கம் போவது எண்டு தெரியாம முழிப்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஷு**



**நகர்ந்துகொண்டே இருங்கள். தேங்கி நின்றுவிடாதீர்கள். அதுதான் செய்தி..**

ஒன்னும் யோசிக்கல. வண்டிய ஓரமா நிப்பாட்டிட்டு நடந்து போய்ட்டேன்.



# கனவை மெய்ப்பித்த 'மெர்சல்'



## தீபக் நெகிழ்ச்சி

"விஜய் நடித்து வரும் 'மெர்சல்' படத்தில் அறிமுகப் பாடலைப் பாடியதன் மூலம் எனது கனவு நிறைவேறி விட்டது' என்று பாடகர் தீபக் தெரிவித்துள்ளார்.

விஜய்யின் 'மெர்சல்' படத்தில் அறிமுகப்பாடலாக இடம் பெற்றிருப்பது 'ஆளப்போறான் தமிழன்' பாடல். ஏ.ஆர்.ரகுமான் இசையில் உருவான இந்தப் பாடலுக்கு ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இதைப் பாடியதன் மூலம் தமிழ் திரை உலகில் தனி இடம் பிடித்திருப்பவர் பாடகர் தீபக். இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2014ஆம் ஆண்டில் 'ஜில்லா' படத்தின் அறிமுகப் பாடலைப் பாடும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு வாரத்திற்குள்ளாகவே அஜித்தின் 'வீரம்' படத்தின் அறிமுகப் பாடலையும் பாடினேன். அதன் பிறகுதான் தீபக் என்ற பாடகரை பலருக்கு தெரிய ஆரம்பித்தது. இதுவரை 60 படங்களுக்கு மேல், 150 பாடல்கள் வரை பாடியுள்ளேன்.

தற்போது 'மெர்சல்'பட அறிமுகப் பாடலைப் பாடும் வாய்ப்பைப் பெற்றேன். ஏ.ஆர்.ரகுமானின் இசையில் ஒரு முறையாவது பாடவேண்டும் என்பது கனவு. அவரது இசையில் 'ஆளப்போறான் தமிழன்' பாடலை பாடியதன் மூலம் எனது கனவு நிறைவேறி இருக்கிறது. ஒரு பாடகன் என்ற அங்கீகாரம் கிடைத்திருக்கிறது" என தீபக் மேலும் தெரிவித்தார். (ம)

## இது எங்கட நீலத்திமிங்கில விளையாட்டு




**திமிங்கிலம்**: விடியற் காலை 4மணிக்கு எழுதிருக்கவும்.
**நான்** : மன்னிக்கணும், அது நடுராத்திரி
**திமிங்கிலம்**: நடு ராத்திரில பேய் படம் பார்க்கவும்.
**நான்** : எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு....
**திமிங்கிலம்**: கையை ப்ளேடால் கிழித்துக் கொள்ளவும்.
**நான்** : ப்ளேட் யார் உங்கொப்பனா வாங்கித் தருவான்
**திமிங்கிலம்**: மொட்டை மாடி விளிம்பில் போய் நிற்கவும்
**நான்** : ஏன் எதாச்சி ஆன்ரி துணி காயப் போட வருதா?
**திமிங்கிலம்** : நடுராத்திரி ரயில்வே ட்ரக்குக்கு செல்லவும்
**நான்** : ட்ரக் பூறா கக்கா போய் வச்சிருபானுங்க! அத போய் நான் கழுவிட்டு வரனுமா..?
**திமிங்கிலம்** : ப்ளேடால் கையில் திமிங்கிலம் படத்தை வரையவும்.
**நான்** : எனக்கு வரையத் தெரியாது.
**திமிங்கிலம்** : நீங்கள் இதை செய்யாவிட்டால் உங்கள் ரகசியம் சமூகவலைதளத்தில் வெளியிடப்படும்
**நான்**: இத விட சமூக வலைதளத்தில ரொம்ப கேவலமாத் தான் போய்கிட்டு இருக்கு! நீ தண்ணியக் குடி தண்ணிய குடி.
**நான்**:அடுத்து என்ன நான் தற்கொலை பண்ணிகனுமா?
**திமிங்கிலம்:** இல்லடா! உனக்கு அட்மினா வந்த பாவத்துக்கு நான் தான் நாண்டுகிட்டு சாவனும்...
**நான்**: மகிழ்ச்சி!








**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவர்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**துலாம்:**புதிய செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றி அளிக்கும் . ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 5 | | 4 | | 3 | | |
| 1 | 7 | | 3 | 8 | 5 | | 2 | |
| 3 | | | 6 | | 4 | | | 1 |
| 2 | | | | | | | | 6 |
| | | 1 | | | | 5 | | |
| 7 | | | 5 | 1 | 3 | | | 8 |
| | 1 | | 8 | 7 | 9 | | 4 | |
| | | 8 | 4 | | | 1 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 8 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 |
| 5 | 6 | 7 | 3 | 1 | 2 | 8 | 9 | 4 |
| 2 | 4 | 9 | 6 | 7 | 8 | 1 | 3 | 5 |
| 8 | 5 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 | 3 |
| 9 | 1 | 2 | 7 | 6 | 3 | 4 | 5 | 8 |
| 3 | 7 | 6 | 8 | 5 | 4 | 9 | 1 | 2 |
| 6 | 9 | 3 | 2 | 8 | 1 | 5 | 4 | 7 |
| 7 | 2 | 5 | 9 | 4 | 6 | 3 | 8 | 1 |
| 4 | 8 | 1 | 5 | 3 | 7 | 2 | 6 | 9 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**"டாக்டர்" ஆனால் பணக்காரன் ஆகலாம் என்ற நிலை போய்...,**

**"பணக்காரங்க" மட்டும் தான் டாக்டர் ஆக முடியும் என்ற நிலை உருவாகி விட்டது...**

**எந்தச் செயலையும்
செய்யும்முன்
எவரிடமும் சொல்லாதே
செய்து முடித்துவிட்டு
தைரியமாகச் சொல்.
ஏன் தெரியுமா?
செய்வதில் வெற்றி பெற்றால்
யோசிப்பான்
தோல்வியடைந்தால்
விமர்சிப்பான்**



# புத்திசாலிச் சிறுவன்



ஒரு நாட்டில் அனான்சி என்ற சிறுவன் இருந்தான். அதே ஊரில் ஐந்து என்ற பெயர் கொண்ட ஒரு சூனியக் காரியும் இருந்தாள். அவளுக்கு அப்படி ஒரு பெயர் இருப்பது யாருக்கும் தெரியாது. தன் மாளிகைக்குள் வந்து எவர் தன் பெயரைக் கூறுகிறார்களோ அவர் இறந்து விடுவார் என்ற ஒரு சாபத்தையும் வைத்திருந்தாள்.

தன் மாளிகைக்குள் வருகின்றவர்களை எப்படியாவது தன் பெயரைச் சொல்ல வைக்க வேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என அவள் சிந்தித்தாள். அழகும் கலைவேலைப் பாடுகளும் நிறைந்த நாற்காலிகள் ஐந்தைச் செய்வித்தாள். தான் இருக்கும் அறையில் அவற்றை வைத்தாள். யார் அவளைப் பார்க்க வந்தாலும் "இங்கே எத்தனை நாற்காலிகள் உள்ளன? எண்ணிச் சொல்லுங்கள்" என்பாள். அப்போது அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு ஐந்து எண்ணுவார்கள். ஐந்து என்று சொன்னதும் அவர்கள் சூனியக்காரியின் சாபப் படி இறந்து விடுவர். அப்போது இறந்தவர் உடலை அவள் தின்று விடுவாள். இப்படியே தொடர்ந்து இது நடந்து வந்தது.

சூனியக்காரியைச் சந்திக்கும் வாய்ப்பு அனான்சிக்கு கிடைத்தது. முன்னதாகவே அவன், அவள் மீது ஐயம் கொண்டிருந்தான். அவனை வரவேற்ற அவள் "இங்கே எத்தனை கதிரைகள் உள்ளன? எண்ணிச் சொல்" என்றாள். "குழந்தை கூட இதனைச் சொல்லுமே! எதற்கு இவள் என்னை எண்ணச் சொல்கிறாள். இதில் ஏதோ சூழ்ச்சியுள்ளது" என அவன் நினைத்தான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணினான். அடுத்து அவன் ஐந்தாவது கதிரையில் அமர்ந்து கொண்டு 'இதையும் சேர்ந்துக் கொள்ள வேண்டும்" எனக் கூறினான். "இப்படி எண்ணக் கூடாது இன்னொரு முறை எண்ணிச் சொல்" என்றாள் சூனியக்காரி. மீண்டும் அவன் "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என எண்ணி விட்டு முன்போலவே ஐந்தாவது கதிரையில் அமர்ந்து "இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்றான். திரும்பத் திரும்ப அவன் இதையே செய்வதைக் கண்டு எரிச்சல் அடைந்தாள் சூனியக்காரி.



மீண்டும் அவள் சற்று உரத்த குரலில் "நீ எண்ணுவது கொஞ்சமும் சரியில்லை" என்றான். "நான் எப்படி எண்ண வேண்டும் என்று நீங்கள் சொல்லித் தாருங்கள்" என்றான் சிறுவன். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து எனச் சொல்ல வேண்டும்" என்றாள் சூனியக்காரி. ஐந்து சொன்னதும் அவள் இறந்து விழுந்தாள். "கவனமாக இருந்ததால் உயிர் பிழைத்தேன். சூனியக்காரியும் செத்து ஒழிந்தரள் என்ற மகிழ்ச்சியில் அங்கிருந்து சென்றான் அனான்சி.


ஆனந்ராம்,
தரம் 7 B,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



# மைனா...ஓ மைனா

கறுப்பு வெள்ளை மைனாக்கள் நாட்டு மைனாக்களை விடச் சற்றுச் சிறியவை. இவை நல்ல கட்டான உடலுடைய கறுப்பும் வெள்ளையும் கலந்த மைனாக்கள். கண்ணைச் சுற்றி இறகற்ற செம்மஞ்சள் நிறச் சதையுண்டு. அலகும் செம்மஞ்சள் நிறத்தில் இருக்கும். நாட்டுப் புறங்களில் பயிர் செய்யப்பட்ட வயல்களைச் சுற்றி கூட்டம் கூட்டமாக இவை திரியும். மற்றைய மைனாக்கள் போலவே தோட்டங்களிலும் வீடுகளின் அருகிலும் திரிந்தலைந்தாலும் தமது உணவுப் பிரச்சினை தீர பிற மைனாக்களைப் போல மனிதரை எதிர்பார்ப்பதில்லை. மற்றவை போல மனிதரிடம் அதிகம் பழகுவதும் இல்லை. பலவித உச்சத் தொனியில் இவை பாடும். இவற்றின் கூடும் மற்ற மைனாக்களில் இருந்து வேறுபடும். பெரிய உருண்டைக் கூடைபோல செடி செத்தைகளையும் குச்சிகளையும் கொண்டு இவை கட்டப்பட்டிருக்கும். பெரிய மரங்களின் சிறிய கிளைகளில் கட்டப்படும். இந்தக் கூடுகள் ஒருகிளையில் 3 அல்லது 4உம் அமைவதுண்டும். மைனாக்கள் 4,5முட்டைகளை இடும். இம்முட்டை கள் புள்ளிகள் அற்ற ஒளிரும் நீல நிறத்தில் இருக்கும்.

# அப்பாக்கள் புரியப்படாத புனிதங்கள்



பிள்ளைகளை வளர்க்கவும், படிப்பிக்கவும் என்று அவர் ஒரு பேருந்து நிலையத்தில் இராப் பகலாக மூடை சுமந்து உழைத்ததால் தன் பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ வேண்டும் என்ற அவரின் ஏக்கம் நிறைவேறாமல் போனது. பிற்கால முதுமையில் அந்த ஏக்கம் தூண்ட தனது பிள்ளைகளின் குழந்தைகளை (பேரப்பிள்ளைகள்) அவர் கொஞ்சி விளையாடிய போது "அப்பா நன்றாக நடிக்கிறார்" (போலியாக)என்று அவர் பெற்ற பிள்ளைகள் அவரை ஏளனம் செய்தனர்.

♦♦♦

தனது பிள்ளைகள் வீண் பகட்டுச் செயல்களில் ஈடுபடும் பொழுது தந்தை பிள்ளைகளுக்கு புத்தி சொல்லிக் கண்டிப்பார். இதனைக் கவனித்த தாய் "என்பிள்ளைகள் அறியாப் பருவத்தினர். அவர்களைத் திட்டி சாபமிட வேண்டாம்" என அவரை எதிர்ப்பாள். இதனைக் கவனித்த பிள்ளைகளும் தந்தை எது சொன்னாலும் தங்களைச் சாபமிடுவதாகக் கருதி அவரை எதிர்பார்கள். தந்தையும் மனம் நொந்து ஒதுங்கினார். பிள்ளைகளோ, பகட்டு வாழ்க்கைக்கு தொடர்ந்து பழக்கப்பட்டு ஆடம்பரங்களில் மூழ்கி அலைந்து, கெட்டு கல்வியில் பின்னடைந்து, இன்று கூலிகளாக அடிமை வாழ்வில் உழல்கிறார்கள்

# வர்ணம் தீட்டுவோம்





## கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரிசைப் படத்திலும் ஒரு படம் வேறுபட்டுள்ளது: கண்டுபிடியுங்கள்




# சிந்தனைத் துளிகள்

- எங்கே விழுந்தாயெனப் பார்க்காதே; எங்கே வழுக்கினாயெனப் பார்.
- யாருக்காவது குழி தோண்டப் போகிறாயா? இரண்டாகத் தோண்டு, உனக்கும் சேர்த்து.
- முன்னோக்கி செல்லும் போது கர்வமாயிராதே; கனிவாயிரு. ஒரு வேளை நீ பின்னோக்கி வர நேர்ந்தால் யாராவது உனக்கு உதவுவார்கள்.

# குழந்தைகளிடம் பொய் பேசாதீர்கள்

நல்லொழுக்கமுள்ள குழந்தைகளை உருவாக்குவதற்கு பெற்றோர்கள் முயற்சி செய்ய வேண்டும், இதுவே சமூகத்தின் எதிர்பார்ப்புமாகும். பெற்றோர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கும், குணாதி சயங்கள் இருக்கும். இருப்பினும், குழந்தைகளை இப்படித் தான் நடத்த வேண்டும் என்ற பொதுவானதொரு வழிமுறை இருக்கிறது. அதனைப் பின்பற்றினால் ஒழுக்கமுள்ள குழந்தை களை உருவாக்க முடியும். நாம் நினைத்த மாதிரியெல்லாம் குழந்தைகளை வளர்த்து விட



முடியாது. திட்டமிட்ட அடிப்படையில் அவர்களை வழிநடத்தும் பொழுது, நல்லபல விளைவுகள் ஏற்படும்.

பிள்ளைகளிடம் தப்பிக்க வாய்ப்பாக பொய் பேசாதீர்கள், அவர்களிடம் வழங்கக் கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் அடிக்கடி பொய் பேசக் கூடிய பெற்றோராக இருந்தால், அவர்கள் உங்களது வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள், நீங்கள் உண்மை பேசினாலும் கூட அவர்கள் நம்ப மாட்டார்கள்.

உதாரணமாக உயரமான அலுமாரியில் உள்ள பொருள் ஒன்றை உங்களது குழந்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனை முறையாக எடுக்க அதனால் இயலாது எனும் பொழுது சற்று பொறு இதோ என்னுடைய வேலைகளை முடித்து விட்டு வந்து எடுத்துத் தருகின்றேன் என்று நீங்கள் கூறு கின்றீர்கள். (24ஆம் பக்கம் பார்க்க)

Galaxy Star
வெற்றி வாரம் 191 திகதி 03.09.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 01 14 36 42
05 07 21 48
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4, 045, 992/-
06.09.2017 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும். வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
திகதி 03.09.2017 | வெற்றி வாரம் 2180 | வர்ணம் ஊதா
தனுசு
வெற்றி இலக்கங்கள் 05 06 55 59
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 32 44 48 56
2017.09.05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி மயில்வாகனம்

(யாழ்ப்பாணம் - கொழும்பு)



மலர்வு 21.02.1941 உதிர்வு 01.09.2017

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கனகமணி மயில்வாகனம் (01.09.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து - நாகமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் வதனன் (லண்டன்), விஜி (பிரான்ஸ்), அருணன் (லண்டன்), அநுரா (இலங்கை), சுரேகா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சாருலதா, பாலேந்திரன், மஞ்சுளா, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புமாமியும் ரதுஸா, அபினா, ஹீரா, மிலான், கிஸோர், மணிஸா ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இடம் பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அநுரா (மகன்)
077 525 9530

## மரண அறிவித்தல்

மண்ணில் 24 . 04 . 1958



விண்ணில் 01 . 09 . 2017

### திருமதி விமலாதேவி யோகச்சந்திரன்

கைதடி தென்கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி யோகச்சந்திரன் கடந்த (01.09.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை சுப்பிரமணியம் ராம்ஜிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் யோகச்சந்திரனின் அன்பு மனைவியும் நர்மதாவின் அன்புத் தாயாரும் சரோஜினிதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் கைதடி கிழக்கு, ஊற்றல் மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
075 273 7425. 077 619 4832 குடும்பத்தினர்.

உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு இதோ...

சகல நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் செல்ல [Student Visa]



AUSTRALIA NEW ZEALAND CANADA U.S.A. UNITED KINDOM MALAYSIA JAPAN LITHUANIA SINGAPORE

குறைந்த கட்டணத்தில் செல்வதற்கான அரிய வாய்ப்பு !

- O/L மற்றும் A/L தகைமை போதுமானது
- IELTS 5.5 [முதன்மை நாடுகளுக்கு மட்டும்] [Classes ஒழுங்கு படுத்தி தரப்படும்].
- பகுதிநேர வேலை [Part time Work]மூலம் மாதம் Rs.250,000/= வரை சம்பாதிக்க முடியும்.
- Accommodation [தங்கும் இடவசதி செய்து தரப்படும்]
- Paid Internship உண்டு.



உடன் பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே 30% சலுகை உண்டு.

எங்கள் மூலம் சென்ற சில மாணவர்கள்




மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள - 0773343365, 0779578057, 0773366399, 0714130047

தலைமை காரியாலயம்
VTL Management (Pvt) Ltd
380, Galle road, Colombo - 03
E - mail - vtlmgt@gmail.com

இடம் - விநாயகர் இன்
No. - 31, முட்டாசு கடை சந்தி,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



மண் நோக்கல்
11 . 09 . 1948

விண் நோக்கல்
03 . 09 . 2017

திருமதி
### கமலாதேவி பாலசுப்பிரமணியம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை, கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பாலசுப்பிரமணியம் நேற்று (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை எழுதுவினைஞர்) இன் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் க.விமலாதேவி, இ.சிவயோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.முருகையா (ஓய்வுநிலை ஆசிரியர்) இன் மைத்துனியும் மு.இராசாதேவி பொ.சொர்ணாம்பாள் காலஞ்சென்ற வி.பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனியும் பொ.அம்பிகைபாலன், முருகவேள் (பொறியியலாளர்), சிறிஸ்கந்தவேள் (பொறியியலாளர்), இளங்கோவேள் (மருத்துவர்), எழில்வேள் (பொறியியலாளர்), நிலாம்பரி (ஜேர்மனி), நீலாட்சனி, நீலாங்கனி, நீலாம்பாள், நீலாஜி சிவேஸ்வரன் கிருஷ்ணாகினி ஆகியோரின் பெரிய தாயாரும் ஹரிப்பிரசாத், பைரவி, குந்தவி, பார்கவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நுணாவில் கல்வயல் வீதி,**
**கல்வயல், சாவகச்சேரி.**
**077 3141099, 077 016 2137**

**தகவல்:**
**க.முருகையா (மைத்துனர்)**
**ஓய்வுநிலை ஆசிரியர்**

## ஓராண்டு சிரார்த்ததின அழைப்பு



தோற்றம்
30.06.1960

மறைவு
15.09.2017

கடந்த 15.09.2016
வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்
அமரர்
### சோமு குணசேகரன்
[பெயின்ரர்]

அவர்களின் ஓராண்டு சிரார்த்ததின நிகழ்வு இன்று (04.09.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

34, கண்ணாபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி லியோ சவரிமுத்து தி.கு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி லியோ சவரிமுத்து நேற்று (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் இன்று (04.09.2017) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத் தலைவி, 121,பிரதான வீதி,யாழ்ப்பாணம்

## குழந்தைகளிடம் பொய் பேசாதீர்கள்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு கூறி விட்டால் நீங்கள் உங்களது வேலைகளை உடனே முடித்துக் கொண்டு உங்களது குழந்தைக்கு உதவுங்கள்.

நீங்கள் கூறியதை நிறைவேற்ற வேண் டும். அவ்வாறில்லை என்றால் அந்தக் குழந்தை மீண்டும் அலுமாரியில் உள்ள பொருளை எடுக்க முயற்சி செய்யும் இயலாத நிலையில் பொருள்கள் தவறிக் கீழே விழுந்த பின்பு அந்தக் குழந்தையை கோபித்துப் பயனில்லை, உண்மையில் அதனை இப்பொழுது எடுக்க இயலாது.

மற்ற வேலைகளைப் பாருங்கள், பின்பு எடுத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கூறி இருந்தால், அந்தக் குழந்தை தன்னுடைய முயற்சியைக் கைவிட்டு விட்டு வேறு வேலையின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பி இருக்கும். ஆனால், சற்றுப் பொறு என்று நீங்கள் கூறிய பின்பு காத்திருந்து விட்டு நீங்கள் வராததால் அந்தக் குழந்தை முயற்சி செய்து பார்த்திருக்கிறது.

தவறு உங்கள் மீதே காணப்படுகிறது. நீங்கள் அடிக்கடி இப்படி நடந்து கொள்பவர் நீங்கள் காரணகாரியத்தோடு எதனைச் சொன்னாலும், அதனை ஒரு பொருட்டாகவே குழந்தை எடுத்துக் கொள்ளாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

### விற்பனையாளர் தேவை

பிரபல பான்ஸி கடைக்கு அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
**தொடர்பு - 076 639 9204**

### மருந்தாளர்,பணியாளர்கள் தேவை

அரசு பதிவு மேற்கொள்ளக்கூடிய தகுதி யுடைய மருந்தாளர் உடன் தேவை. மருந்தகத்தில் வேலை செய்த அனுபவ முள்ளவர்களும், பழக விரும்புபவர் களும் தேவை.
தொடர்புகளுக்கு.
**077 732 3702**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா தம்பிராசா



நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி தங்கம்மா தம்பிராசா நேற்று (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசா வின் அன்புமனைவியும் வனிதராணி, பஞ்சலிங்கம், தியாகலிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும் சுவாமிநாதன், ரஞ்சினி, சில்வியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியும் லாசகன் (மலேசியா), பாமினி (UK), கொழும்பைச்சேர்ந்த ஆரூரன், நிவேஜா காலஞ்சென்ற விதுனன் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்தவர்களான மெலிஷா, ஜனீனா, மீனா, ஜீவன், அலிஷா, ஷானியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் UK ஐச் சேர்ந்தவர்களான அபிசாந், அனுஜிதன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பூதர்மடலேன்,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 033 7461**

## மரண அறிவித்தல்

திருமதி
### சந்திரமணி (சந்திரா) செந்தில் வேல்



தென்மராட்சியை பிறப்பிடமாவும் இல.71 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமணி (சந்திரா) செந்தில்வேல் நேற்று (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஸ்ட மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செந்தில் வேலின் அன்பு மனைவியும் சுபேந்திரன் ,சுரேந்திரன்,ரனேந்திரன்,துஸ்யந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜனி,தயா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுஜன் ,சுஜித்தா,றமித்தா,றோய் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மனோகரன் ,சிறிதரன்,நிர்மலராஜன் மற்றும் சந்திரலீலா ,சந்திரராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.09.2017) திங்கட்கிழமை இடம்பெற்று ந.ப 12.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**தொடர்பு இலக்கம். 077 967 2055**
**துஸ்யந்தி (மகள்) 077 182 7498**
**சுபேந்திரன் (மகன்) 0044 796 108 1845**

**இல ,71, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## அரசியல்...

துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்களின் வழக்கை வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முல்லைத்தீவு வீதியில் உள்ள விக்டர் முகாம்4இல் முன்னாள் போராளிகள் மூவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இராணுவத்தினர் இந்த முகாமை நெருங்கி வந்த போது, போர்க் கைதிகளாக இருந்த 18 இராணுவத்தினர் மற்றும் 8 கடற்படையினரைக் கொன்று விடுமாறு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், முகாமின் பொறுப்பாளராக இருந்த கோபிக்கு உத்தரவிட்டுள்ளார். அயலில் உள்ள காடுகளில் விறகுகள் சேகரிக்கப்பட்டு தீவைக்கப்பட்டது. கண்கள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக நிறுத்தப்பட்ட படையினர், சுடப்பட்டு, அவர்களின் சடலங்கள் தீயில் எரிக்கப்பட்டதாக, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.

விறகுகளைச் சேகரிக்க உதவியவர்கள் என்று கூறப்படும் இரண்டு சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று பேருக்கு எதிராக சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் ஆகியோருக்கு எதிராக, வவுனியா மேல் நீதிமன்றில் கொலைச் சதி, கொலைகளுக்கு உதவினார்கள், உடந்தையாக இருந்தார்கள் என்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளனர். வழக்கு செப்ரெம்பர் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, எதிரிகள் மூவரையும், சாட்சிகளையும் முன்னிலையாகுமாறு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி பா. சசிமகேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

குற்றம்சாட்டப்பட்ட மூவருக்கு எதிராகச் சாட்சியம் அளித்த இரண்டு சாட்சிகளுக்குமே தற்போது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து பயங்கரவாத விசாரணைப்பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், இந்த விசாரணைகளின் அடிப்படையில் அளிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையிலேயே, வவுனியாவுக்கு வெளியே இந்த வழக்கை மாற்றுவது குறித்து சட்ட மா அதிபர் முடிவு செய்வார் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக, வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து இந்த வழக்குகளை மாற்ற முயற்சி எடுக்கப்பட்ட போது, மூன்று சந்தேகநபர்களும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். இதையடுத்து, வழக்குகளை வவுனியா மேல்நீதிமன்றிலேயே விசாரிக்க வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி திகதி குறித்திருந்தார்.

இந்த நிலையில், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் விசாரணைகளை ஆரம்பித்து, வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து வழக்கை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (5)

## புலிகளின்...

வொரு இராணுவச் சிப்பாய் மீதோ கை வைப்பதற்கு எந்தவொரு வெளிநாட்டுக்கும், நபருக்கும், அமைப்புக்கும் இடமளிக்கமாட்டேன் என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

புலிகளிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு அதன் கைக் கூலியாகச் செயற்படும் சில அரசசார்பற்ற நிறுவனங்களே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. அவற்றின் தாளத்துக்கேற்ப ஆடுவதற்கு நான் ஒருபோதும் தயாரில்லை.

**எதற்காக கூட்டு அரசு?**

கூட்டு அரசில் சுதந்திரக் கட்சி அங்கம் வகிக்கும் வரையில் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று சில தரப்பினர் அறிக்கை விடுத்துள்ளனர். ஊஞ்சலாடுவதற்காகவோ அல்லது சங்கீதக் கதிரை விளையாட்டு விளையாடுவதற்காகவோ சுதந்திரக் கட்சி கூட்டு அரசில் இணையவில்லை. பன்னாட்டு நெருக்கடி, பொருளாதாரப் பிரச்சினை ஆகியவற்றிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகவே கூட்டு அரசு அமைக்கப்பட்டது.

முன்கூட்டியே அரசதலைவர் தேர்தலை நடத்தவேண்டாமென அப்போதைய எனது தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அறிக்கையொன்றைக் கையளித்திருந்தேன்.

6 விடயங்களை அதில் சுட்டிக்காட்டியதுடன், நாட்டில் அரசியல் மறுசீரமைப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டும் எனவும் எடுத்துரைத்தேன். பன்னாட்டு நெருக்கடி, கடன்சுமை, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் அவர் எவரினதும் கருத்துக்கு செவிமடுக்காமல் முன்கூட்டியே தேர்தலை நடத்தி அதில் தோல்வியடைந்தார். அந்தச் சுமைகள் எமது தோள்களுக்கு வந்தன. அவற்றை எதிர்கொள்வதற்காகவே இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்தன.

**வழங்கப்பட்ட சனநாயகம், சுதந்திரம் தவறாகப் பயன் படுத்தப்படுகிறது**

கடந்த ஆட்சியின் போது நாட்டிலும், கட்சிக்குள்ளும் சனநாயகம் இருக்கவில்லை. ஆட்சிமாற்றத்தின் பின்னர் நாட்டிலும், கட்சிக்குள்ளும் சனநாயகம் ஏற்படுத்தப்பட்டது. இருந்தும் வழங்கப்பட்டுள்ள சனநாயகத்தை- சுதந்திரத்தை சிலர் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அதைமீறும் வகையில் செயற்படுகின்றனர். எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது. முகநூல் இணையத்தில் விமர்சனங்கள் என்று அது தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. கட்சிக்குள்ளும் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை விமர்சிப்பதற்காகவே பயன்படுத்துகின்றனர். இந்த நிலமை மாறவேண்டும்- என்றார். (வ-5)

## பொன்சேகாவுக்கு...

என்றும், அதற்குரிய ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதால் சாட்சியமளிக்கத் தயார் என்றும் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் வினவியபோதே கோத்தபாய ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவம் போர் இரகசியங்களை வெளியிடக்கூடாது. இதுவே இராணுவ மரபாகும். ஒழுக்கமுள்ள தளபதியொருவர் இதற்குக் கட்டுப்பட்டே செயற்படுவார். முன்னாள் இராணுவத் தளபதி போர்க் குற்றச்சாட்டுகள் பற்றி கதைக்கின்றார். அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவே அவர் இப்படிச் செயற்படுகிறார்.

இருந்தபோதிலும் அவரின் அறிவிப்பு சம்பந்தமாக ஆழமாக ஆராய்ந்து வருகின்றேன். இராஜதந்திரிகள் உட்பட முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடிவருகின்றேன். அந்தப் பணி முடிவடைந்ததும் ஆக்கபூர்வமான முறையில் அறிக்கையொன்று வெளியிடப்படும். அதுவே அவருக்கான பதிலாகவும் அமையும் -என்றார். (வ-5)

## ஊறணி...

டன் 5 பரப்பு நிலப்பரப்பு இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து இன்று விடுவிக்கப்படவுள்ளது. (வ-5,101)

## புதிய...

பாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மக்கள் வாதக் கட்சியாக சுதந்திரக் கட்சி மாத்திரமே இருந்தது. மக்கள் மனதை வெற்றிகொண்ட கட்சியாகவும் இருந்தது. மக்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த தேசிய உற்பத்தி ஆலைகளை சமூகவுடமை நாடுகளுடன் இணைந்து ஏற்படுத்தியது. அதேபோல் சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்திலும் பலசெயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சிங்கள மொழி அரச கருமமொழியாக்கப்பட்டது குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒன்றாகும்.

சுதந்திரக் கட்சி ரோசா பூக்கள் மத்தியில் பூத்த கட்சியில்லை. கட்சியின் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்குப் பின்னர் இராணுவப் புரட்சிக்கான சதி மேற்கொள்ளப்பட்டது. பணத்துக்காக அமைச்சர்களைப் பெற்றுக்கொண்டு கட்சி வீழ்த்தப்பட்டது. கட்சியை இரண்டாகப் பிரித்துத் தோற்கடிக்க முற்பட்ட போதும் மக்கள் இடம்கொடுக்கவில்லை.

கட்சியின் உறுப்பினர்கள் பலரை சிறையிட்டு கட்சியை முடக்க முயன்றார்கள். அனைத்து அழுத்தங்களிலிருந்தும் கட்சி மீண்டுவந்தது. 1980ஆம் ஆண்டுகளில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் தாம் செய்த தொழில்களிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

இன்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் யுகத்திற்கு ஏற்ற மாற்றத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆட்சி செய்வதால் அவர்களின் பங்காளிகள் ஆகிவிடமாட்டோம்.

2020ஆம் ஆண்டு எமது அரசு, எமது அரச தலைவர், எமது தலைமை அமைச்சர் என்று தனியாட்சி அமைப்போம். அந்தப் பயணம் இனவாதத்தை கலைந்ததாகவே அமையும். எமது கட்சி இனவாதக் கட்சியில்லை - என்றார். (வ-5,31)

## மனிதப்...

எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இறுதிப் போரில் வன்னிப் படைகளின் தளபதியாக இருந்த ஜெகத் ஜயசூரிய மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டார் என்பதை இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இரா.சம்பந்தனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் இடம்பெற்றன என்பது உண்மை. பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டார் என்று வன்னிப்படைகளின் தளபதியாகவும் பின்னர் இராணுவத் தளபதியாகவும் இருந்த ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பன்னாட்டு நீதிமன்றில் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டமைக்கு தன்னிடம் ஆதாரங்கள் உள்ளன என்று முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா பகிரங்கமாக அறிவித்துள்ளார். எனவே, சரத் பொன்சேகா எவ்வித தயக்கமுமின்றி நீதிமன்றில் முன்னிலையாகி உண்மையை வெளிப்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும்வரை சரத் பொன்சேகாவின் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊக்குவிக்கும் -என்றார். (வ-5)

## மைத்திரி...

வெளியேறிவிட்டார்' எனவும் வசை பாடினார். இலங்கை அரசியல் களத்தில் 'முட்டை அப்பம்' விவகாரம் சூடுபிடித்தது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் இராஜதந்திரி நிசா பிஸ்வால் இலங்கை வந்திருந்த போது அவருக்கு அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முட்டை அப்பம் வழங்கினார். அதை உண்ட பின்னர் 'சுவையான உணவு' என்று நிசா பிஸ்வால் கீச்சகத்தில் பதிவிட்டிருந்தார். இலங்கையின் முட்டை அப்பம் இராஜதந்திரம் என்று வர்ணிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற கட்சி மாநாட்டின்போது அரச தலைவர் அந்த முட்டை அப்பம் கதையை நினைவுபடுத்தினார்.

"முன்னாள் அரசிலிருந்து வெளியேறிய பின்னர் முட்டை அப்பம் கதையைக் கூறி எனக்கு எதிராக விமர்சனம் முன்வைக்கப்பட்டது. நான் முட்டை அப்பம் சாப்பிட்ட தினம் இரவுக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. தேர்தலுக்கு செல்வோமா? என முன்னாள் ஆட்சியாளர் கேட்டார். எல்லாத் தலைவர்களும் ஊமையாகவே இருந்தனர். அப்போதைய அரசு மீது மக்கள் அதிருப்தியில் இருந்தனர். மாற்றம் தேவையென்ற நிலைப்பாட்டில் இருந்தனர். கடன் சுமையும் அதிகரித்திருந்தது. பன்னாட்டு நெருக்கடியும் வலுவடைந்திருந்தது. இவை உள்ளிட்ட காரணங்களாலேயே வெளியேறினேன்" என்று அரச தலைவர் மைத்திரிபால கூறியதுடன், முட்டை அப்பத்துடன் தான் எப்படி தொடர்புபடுத்தப்பட்டார் என்று சிரித்தபடியே கூறினார். இதையடுத்து மேடையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது. (வ-5)

## 20 ஆவது...

மாகாண சபை முன்வைக்கக் கூடும் என்றும் உறுப்பினர்களுக்கு இடையே பேசப்பட்டது.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கான யோசனையை முன்வைத்துள்ள 20ஆவது திருத்தச் சட்டவரைவு மாகாண சபைகளின் கருத்துக்களை அறிவதற்காக அனுப்பப்பட்டது. வடமத்திய மாகாண சபை சட்ட வரைவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஊவா மற்றும் தென் மாகாண சபைகளில் சட்டவரைவு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு வடக்கு மாகாண சபையில் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவை எதிர்ப்போம் என்று மாகாண சபையில் வைத்துத் தெரிவித்திருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அதன் பின்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில், காபந்து அரசு அமைக்க இடமளிக்கப்பட்டால் 20ஆவது திருத்தச் சட்டவரைவை ஆதரிக்கலாம் என்ற சாரப்பட குறிப்பிட்டிருந்தார்.

இதனால் 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் குழப்பமான நிலமை காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை கட்சி உறுப்பினர்களிடம் தெரிவிக்கவில்லை. ஆதரிப்பதா? திருத்தங்களுடன் ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா? என்பதில் முடிவெடுக்க முடியாத நிலையில் உறுப்பினர்கள் உள்ளனர்.

பெரும்பாலும் திருத்தங்களுடன் ஆதரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படலாம் என்று தெரிகின்றது.

இதேவேளை, மாகாண சபைகள் திருத்தச் சட்டவரைவை தோற்கடித்தாலும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## சு.க...

கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பிரபா கணேசன், குமரகுரு பரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். (வ-5)

## லொறி...

பிற்பகல் 2.30 இடம்பெற்றது.

வசந்தபுரம் கற்சிலைமடுவைச் சேர்ந்த ஜெனந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தார். கூழாமுறிப்பைச் சேர்ந்த தர்சன் (வயது 23) மற்றும் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழில்சாலையடியைச் சேர்ந்த சகுந்தரராஜன் பரணிதரன் (வயது - 19), செல்வக்குமார் விதுசன் (வயது - 22) ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். பரணிதரன் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்தில் முச்சக்கரவண்டி மோசமாகச் சிதைந்தது. பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை முன்னெடுப்பதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர். (வ-46)



# ஸ்கந்தவரோதயவை வீழ்த்தி கிளிநொச்சி ம.வித்தி அபாரம்

யாழ்ப்பாணம், செப். 4
பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் துடுப் பாட்டச் சங்கம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துவாரகன் 61 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் தனுசன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 14.5 பந்துப் பரிமாற்றங்களில் 87 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 4

**திருமகள் ச.ச.நிலைய கரப்பந்தாட்டத் தொடர்**

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயசூரியன் வி.க. கால்பந்துத் தொடர்**

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கணேசானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெள்ளிநிலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சத்திவேல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சத்திவேல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# சென். ஜோன்ஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 4
பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி 16.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்துவீச்சில் கபில்ராஜ், சனுசன் இருவரும் 3 இலக்குகளையும், அபிலக்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

58 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 6.3 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கு எதையும் இழக்காமல் வெற்றி பெற்றது. சௌமியன் 28 ஓட்டங்களையும், சுபிட்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)



# தவறியது வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 4
95ஆவது தேசிய மட்ட தடகளத் தொடரில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அ.புவிதரன் நான்காமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த அ.புவிதரன் 4.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நான்காம் இடத்தைத் தனதாக்கினார். (ம-422)

# வென்றது றேஞ்சர்ஸ்

யாழ்ப்பாணம், செப். 4
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஹாட்லிக்கு அசத்தலாட்டம்

பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. மழை காரணமாக ஆட்டம் 6 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 3 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 5.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)



# ரொனால்டோ அசத்தலாட்டம் போர்த்துக்கல் அபார வெற்றி



காலபந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்காக நேற்று முன்தினம் நடைபெற்ற தகுதிகாண் ஆட்டமொன்றில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது.

போர்த்துக்கலை எதிர்த்து பாரோ தீவுகள் அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ 3 கோல்களைப் பதிவுசெய்தார். இதன்மூலம் பன்னாட்டு அரங்கில் அவர் பதிவு செய்த கோல்களின் எண்ணிக்கை 78ஆக அதிகரித்தது. அதிக கோல்களைப் பதிவுசெய்த வரிசையில் பீலேவின் அடைவை ரொனால்டோ முறியடித்தார். இந்த வரிசையில் புஸ்காஸ் 84 கோல்களுடன் முதலிடத்தில் உள்ளார். (ம)

# ஆஸ்திரேலியா சமாளிக்குமா?

பங்களாதேஷுக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில், ஆஸ்திரேலியாவின் பெறுபேறு தொடர்பில் பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது பங்களாதேஷ் இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் வென்றால் மட்டுமே ஆஸ்திரேலியாவால் தொடரை குறைந்த பட்சம் சம நிலையில் முடிக்க முடியும்.

கடந்தஆட்டத்தில்கிடைத்ததோல்வியை அடுத்து ஆஸ்திரேலிய அணி மீது கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன. கடந்த ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், "அடுத்த ஆட்டத்திலும் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி 2:0 என்று தொடரைக் கைப்பற்றுவோம்" என்று ரகிம் தெரிவித்தார். இதனால் இன்றும் பங்களாதேஷ் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தும். எனவே பங்களாதேஷ் அதன் சொந்த மண்ணில் எவ்வாறு ஆஸ்திரேலிய அணி தோற்கடிக்கப்போகிறது என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)






# தொடரிலிருந்து விலகினார் தவான்

இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவானின் தாயார் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால், அவரைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்து பாதியில் வெளியேறி இந்தியா சென்றார் தவான்.

நேற்றுமுன்தினம் தவான் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். இதனால் நேற்று நடைபெற்ற இலங்கை - இந்திய அணிகளுக்கு .இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் தவான் விளையாடவில்லை. அதேபோல் நாளைமறுதினம் 6ஆம் திகதி நடை பெறவுள்ள ரி-20 ஆட்டத்தில் இருந்தும் தவான் விலகிச் சென்றார். (ம)

# கொக்குவில் இந்து காலிறுதியில்

யாழ்ப்பாணம், செப். 4

பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசணையுடன் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெ டுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பாணுஜன் 67 ஓட்டங்களையும், தனுக்சன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிருந்தாவன், நிலுசன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். மைக்கல் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

39 ஓட்டங்களால் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

பந்துவீச்சில் நிரூசிகன் 3 இலக்குகளையும், டிரூசன், நிமலதாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)





# மெக்சிக்கோ தகுதி

ரஷ்யாவில் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கு ஐந்தாவது அணியாகத் தகுதிபெற்றது மெக்சிக்கோ.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மெக்சிக்கோவை எதிர்த்து பனாமா அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மெக்சிக்கோ. கடந்த ஆறு உலகக்கிண்ணத் தொடர்களில் மெக்சிகோ தொடர்ச்சியாக தகுதிபெற்றிருந்தது. இந்தத் தொடருடன் சேர்த்து அந்த அணி 7ஆவது முறையாகத் தகுதி பெற்றுள்ளது. (ம)

## வாடகைக்குண்டு

மதவடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் (ஜெட் மோட்டோர்ஸ் சந்தி அருகில்) **சலூன்** வாடகைக்குண்டு.

077 787 9546

## கடை வாடகைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் நவீன பேருந்து நிலையத்திற்கு முன்பாக 30 x 15 அடி பரப்பளவைக் கொண்ட கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 077 502 2364, 077 285 5276

# உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற இலங்கை அணிக்கு பெரும் நெருக்கடி



இந்தியாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம், இங்கிலாந்தில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு இலங்கை அணி தகுதி பெறுவதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 238 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 21 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. கோக்லி 110 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரின் இரண்டு ஆட்டங்களில் (குறைந்தது ஒரு ஆட்டத்தில்) வெற்றிபெற்றால் இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெறும் என்ற நிலை இருந்தது.

ஆனால் 5:0 என்ற அடிப்படையில் இந்தியாவிடம் வாங்கிக் கட்டியுள்ளது. இதனால் தனது சுய பெறுபேறுகளின் அடிப்படையில் அந்த அணி உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


இங்கிலாந்து - மே.தீவுகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் தீவுகளின் பெறுபேற்றை வைத்தே இலங்கையின் தலையெழுத்துத் தீர்மானமாகும்.

(ம)

சீட்டிழுப்பு வாரம்: 04
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.09.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,418,600/-
கோடி 5 அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள் 05 19 32 51 O
09 40 57 74

கோடிபதி மஹிதா
சீட்டிழுப்பு வாரம்: 184
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 03.09.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 100,651,588/-
C 26 43 58 65
27 44 52 66

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை பழனித்துரை

**(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், இலங்கை மின்சாரசபை, வடமாகாணம்)**

யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும்,பத்தமேனி அச்சுவேலி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பழனித்துரை 02.09.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், நந்தகுமார் (பிரித்தானியா), தவக்குமார் (சுவிஸ்லாந்து), பாலமனோகரன் (பிரித்தானியா), ராகினி (வருகை தரு விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்,அபிவிருத்தி உத்தியோகத்தர் தொல்பொருள் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பற்குணராசா, பாலசுப்பிரமணியம் (பாலன்) மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கீதா, பிருந்தா, சார்ள்ஸ், தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னத்துரை லீலாவதி, அழகரத்தினம் பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிதா (கனடா), ரஞ்சன் (யாழ்ப்பாணம்), மோகன் (ஜேர்மனி), பவன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், ஹர்ஷனா, தரணிகா, அருணன், ரக்ஸனா, நிலா, அஸ்னா, அக்ஷா, ஷாலினி, மதுஷா, கவிஷா, பவிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை 246/2A, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**246/2A, கோயில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் கந்தையா துரைராஜா



தோற்றம்
28.08.1941

மறைவு
05.08.2017

கடந்த 05.08.2017 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.09.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்**

'ராசமாளிகை'
பிரம்படி லேன்,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா தாமோதரம்பிள்ளை



தோற்றம் 20.08.1939 மறைவு 01.09.2017

யாழ்ப்பாணம், தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், ஹட்டனில் தற்போது வசித்து வந்தவருமாகிய திருமதி யோகம்மா தாமோதரம்பிள்ளை 01.09.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தாவடி இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி வடக்கு.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

IIS 22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

PEARSON BTEC
HND
CIVIL ENGINEERING
BUSINESS MANAGEMENT
COMPUTING & SYSTEMS DEVELOPMENT

IIS உயர்கல்விக்கே உரித்தான வளாகம்

பிரித்தானியா, அவுஸ்திரேலியா நியூசிலாந்து போன்ற நாடுகளில் பட்டகல்விகளை தொடரும் வாய்ப்பு

இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள கூடிய சந்தர்ப்பம்

குறைந்த கட்டணத்துடன் இலகு தவணை முறையிலான கட்டண வசதி

மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்

கல்வியாண்டு 2017/18 ற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொடர்புகளுக்கு 071 777 5666

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
iis@iis.edu.lk , info@iis.edu.lk



IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.